
# திருக்கோயில்

ஜனவரி 1983 விலை ரூ. 2-00



புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் குடமுழுக்கு விழாவில், நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களும், மற்றும் பலபெருமக்களும் கலந்து கொள்ளுதல்.

முகப்பு

அருள்மிகு உச்சிநாதசுவாமி
திருக்கோயில், திருநெல்வாயில்
(சிவபுரி)

# திருக்கோயில்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

மாலை : 25 | திருவள்ளுவர் ஆண்டு 2013, துந்துபி ஆண்டு-தை & மாசி ஜனவரி 1983 ரூ. 2-00 | மணி : 4

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

***திருக்கோயில்*** திங்கள் இதழின் சந்தாதாரர் களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

**ஆணையர் அவர்கள்,**
**அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரையுள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக ஆணையர் அலுவலகத்திற்கே பணம் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நாளுக்கு நாள் உயர்ந்துவரும் தாள்விலை, அச்சகக் கட்டணம், அஞ்சல்தலைக் கட்டணம் காரணமாக, 1983 ஜனவரி முதல் ''திருக்கோயில்'' திங்கள் இதழின் ஆண்டுச்சந்தா உள்நாட்டிற்கு ரூ.15 விருந்து ரூ.24 ஆகவும், இலங்கை மலேசியா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ.25 -விருந்து ரூ.36 -ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

**ஆதலின், திருக்கோயில் இதழின் ஆண்டுச் சந்தா 1983 ஜனவரி மாதம் முதல், பின்வருமாறு நிர்ணயிக்கப்படுகின்றது:**

| | | |
|---|---|---|
| உள்நாடு | ரூ. | 24.00 |
| வெளிநாடு | ரூ. | 36.00 |

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுது, பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும் பொழுது மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

1. மாதவச் சிவஞான யோகிகள்
-திரு. கி. பழநியப்பனார், மதுரை

2. கோயில் நான்மணி மாலை
திரு. ந. ரா. முருகவேள்

3. மதுரை மீனாட்சியம்மை கலிவெண்பா
-திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள்

4. அஷ்டபந்தன மருந்து
-திரு. ஜீ. வாகீசம்பிள்ளை, சிதம்பரம்

5. சத்தியஞானசபை விளக்கம்
-திருமுருக கிருபானந்தவாரியார்

6. திருமால்நெறித் திருத்தலங்கள்
-திரு. ந. ரா. முருகவேள்

7. ஆகமங்கள் தமிழில் இருந்தனவா?..
-திரு. மு. அருணாசலம்

8. தூங்காமல் தூங்கும் சுகம்
-திரு. நீ. தங்கவேலன், வேலூர்.

9. எம்பெருமானார்
-கவிஞர் திரு மனசை. ப. கீரன்.

10. திருக்கழுமல மும்மணிக்கோவை
-திரு. ந. ரா. முருகவேள்.

11. திருமந்திரயோகம்
-தவத்திரு. சுத்தானந்த பாரதியார்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# மாதவச் சிவஞான யோகிகள் !

"அறநெறி அண்ணல்"
" திருக்குறட் செம்மல் "
திரு. கி. பழநியப்பனார், மதுரை.

அறிவு ஒளி வீசும் முகம். திருநீறு நிறையப் பூசிய நெற்றி. மார்பிலும் கரங்களிலும் முப் பட்டைத் திருநீற்றுக் குறிகள். கழுத்தில் ஒற்றை உருத்திராக்கச் சரடு. வட்டக் குடுமி யில் பின்னிய சிறு சடை. காதில் சிவப்புக்கல் கடுக்கன். காலில் வெள்ளித் தண்டைகள். அரையில் பட்டுக்கரை வேட்டி. கையில் ஏடு. வயது ஐந்துதானிருக்கும். செல்வந்தர் வீட்டுப் பிள்ளைபோன்ற தோற்றம். பள்ளியிலிருந்து வீடு திரும்புகிறான்.

"பொன்னார் மேனியனே
புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல்
மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே
மழபாடியுள் மாணிக்கமே
அன்னே யுன்னை யல்லால்
இனி யாரை நினைக்கேனே"

என்ற சுந்தரர் தேவாரத்தைத் தான் மட்டும் கேட்கும் குரலில் ஓதிக்கொண்டு, அடிமேல் அடி வைத்து நடந்து சென்றான். பள்ளியில் அன்று ஆசிரியர் கற்பித்த பாடல் அது. ஆம். இது இன்று நடைபெற்ற நிகழ்ச்சியன்று. சுமார் இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சி.

தென்பாண்டி நாட்டில் தமிழ் முனியாம் அகத்தியர் வீற்றிருக்கும் பொதிகைமலையின் அடிவாரத்தில் பொருநை யாற்றின் கரையில் விளங்குவது பாவநாசம் எனும் திருத்தலம். அத்தலத்திற்கு இரண்டுகல் கிழக்கே யுள்ள அழகிய ஒரு சிறு கிராமம் விக்கிரமசிங்கபுரம். அக்கிராமத்தின் வீதியில்தான் பள்ளிச்சிறுவன் நடந்து செல்கிறான். அன்று அது அமைதியே குடிகொண்ட ஓர் அழகிய சிறந்த கிராமமாக இருந்தது.

தேவாரப் பாடலை ஓதிக்கொண்டு வீதி வழியே சென்ற சிறுவன் திடீரென நின்றான்; ஓதுவதை நிறுத்தினான்; தன் எதிரே வந்த மூவரை வியந்து நோக்கினான்; முகம் மலர்ந் தது.விரைந்து சென்று அவர்கள் பாதங்களைத் தொட்டு வணங்கி எதிரே நின்றான். அவன் செயலைக் கண்டு சிவனடியார் மூவரும் 'நீடு வாழ்க' என்று வாழ்த்தினர். காவி பூண்டு சிவ சின்னங்களுடன் காட்சி அளித்த அத் தம்பி ரான்களில் வயது முதிர்ந்தவர், 'குழந்தாய்' நீ யார்?' எனக் கேட்டார். 'சுவாமி' என் பெயர் முக்களாலிங்கம்; என் தந்தை பெயர் ஆனந்தக்கூத்தர்; நான் பள்ளியிலிருந்து வீடு திரும்புகிறேன். தம்பிரான் சுவாமிகளுக்கு ஒரு விண்ணப்பம்' என்று பணிவுடன் வாய் பொத்தி நின்றான் சிறுவன்.

அவன் சொற்றிறனையும் அடக்கத்தையும் கண்டு அடியார்கள் வியந்தனர். 'முக்களா லிங்கம்! நீ பாவநாசத் தலத்தில் வீற்றிருக்கும் பெருமானின் பெயரைத் தாங்கியவன் அன்றோ! உன் விருப்பம் யாதோ?' என்றனர். 'தம்பிரான் சுவாமிகள் மூவரும் இன்று அடியே னுடைய இல்லத்திற்கு எழுந்தருளி அமுது அருந்துதல் வேண்டும்' என்று வேண்டினான் சிறுவன். ஓர் ஐந்து வயதுச் சிறுவன்அழைப்பை ஏற்று அவன் இல்லத்திற்குச் செல்வது சரி யாமோ! என்று திகைத்தனர் அடியார்கள். 'குழந்தாய்! நீயாக எங்களை அழைக்கின் றாயா? அல்லது உன் பெற்றோர்கள்அழைத்து வரச் சொன்னார்களா?'.

'சுவாமி வேறு ஒருவரும் அழைத்து வரச் சொல்லவில்லை. உங்களைக் கண்டவுடனேயே வீட்டிற்கு அழைத்துச் சென்று அமுது செய் விக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றியது. அதனால் அழைத்தேன். மறுக்காது அருள் செய்தல் வேண்டும்' என்றான் முக்களாலிங்கம். உன் அன்பையும் பணிவையும் பாராட்டுகின் றோம். உன் பெற்றோர்களை நீ கேட்கவேண் டியது முறையல்லவா? என்றார் அடியார். 'என் அன்னைக்கும் தந்தைக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய செயல் இதைவிட வேறு ஒன்று மில்லை. அடியார் பணியே அரன் பணி என்று என் தந்தை அடிக்கடி கூறுவார்கள். நீங்கள் அன்புகூர்ந்து எங்கள் இல்லத்திற்கு வர வேண்டும்' என்று வற்புறுத்தி வேண்டினான் சிறுவன்.

அன்பு அழைப்பை மறுக்க இயலாது அடி யார்கள் அவன்பின் சென்றனர். என்ன சாதி? என்ன குலம்? என்று கேட்கவில்லை.

'அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக் கரந்தார்க்கு அன்பர்ஆகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே'

எனும் அப்பர் பெருமான் திருவாக்கை மறவாத சீலமுடையோர் அத்தம்பிரான்கள்.

வீட்டையடைந்ததும் சிறுவன் உள்ளே ஓடிச்சென்று, தாயாரிடம் நடந்ததைக் கூறி னான். அதனைக் கேட்ட அன்னை மயிலம்மை யார் மகிழ்ந்து, முன்வாயிலுக்கு விரைந்து வந்து தம்பிரான்களை வணங்கிக் கூடத்தில் ஒரு பாய் விரித்து அதில் அமருமாறு கேட்டுக் கொண்டார். 'இவன் தந்தை' திருக்கோயி லுக்குச் சென்றுள்ளார். சிறிது நேரத்தில் வந்து விடுவார். நான் விரைவில் சமையலை முடித்து விடுகிறேன். சற்றே இருங்கள்' என்று பணிவுடன் கூறி, மகனை அவர்கள் உடனி ருக்கும்படிச் செய்து உள்ளே சென்றார். அடி யார்கள் மூவரும் அமர்ந்து உரையாடிக்கொண் டிருந்தனர். ஒரு நல்ல குடும்பத்தில் பெற் றோரைப் போலவே மக்களும் இருப்பர் என் பதை, இங்கு நேரில் கண்டோம் என்றார் ஒருவர். ஆம். அதற்கு என்ன தடை. 'நிலத்தில் கிடந்தமை கால்காட்டும், காட்டும் குலத்தில் பிறந்தார் வாய்ச் சொல்' என்பது திருவள்ளுவ ரின் பொய்யாமொழியல்லவா? என்றார் மற் றொருவர். அவர்கள் அமரச் சொல்ல, முக்க ளாலிங்கமும் சிறிது தள்ளி அமர்ந்து அவர்கள் உரையாடலை உன்னிப்பாகச் செவிமடுத்தான்.

'குழந்தாய்! பாபநாசப் பெருமானுக்கு முக்களாலிங்கர் எனப் பெயர் வந்ததற்குக் காரணம் உனக்குத் தெரியுமோ? ''அறிவேன், சுவாமி! என் தந்தை கூறியுள்ளார்கள். இருக்கு எசுர், சாம மாகிய மூன்று வேதங்கள் களா மரங்களாக உருக்கொண்டு, பாபநாசத் தலத்தில் தானே தோன்றிய சிவலிங்கத்திற்கு நிழல் கொடுத்ததுடன், பூசைகளும் செய்தன. அதனால் முக்களாலிங்கர் எனப் பெயர் பெற்றது அச்சிவக்குறி. திருக்கோயில் மேற்குச் சுற்றில் அம்மரங்களை இன்றும் காணலாம். அவையே தல விருட்சங்கள்.

''சுவாமிகளுக்கு மற்றுமோர் செய்தியைக் கூறி, நான் பெருமை கொள்ள விரும்புகிறேன். பாபநாசத் திருத்தலத்திற்குத் தலபுராணம் அருளியதே, என் தந்தையைப் பெற்ற பாட்டனார்தான். முக்களாலிங்க முனிவர் என்று அவரை அழைப்பர். அவர் பெயர்தான் எனக்கு வைக்கப் பெற்றுள்ளது'' என்றான் சிறுவன் பெருமிதத்துடன். தம்பிரான்கள் அதனைக் கேட்டு மகிழ்ச்சியடைந்து, 'முக்களாலிங்கம் நீயும் உன் தாத்தாவைப் போலவே, ஒருசிறந்த, முனிவராக வரவேண்டும்' என்று வாழ்த்தினர். அவர்கள் வாக்குப் பலித்தது. அம்முக்களாலிங்கமே பிற்காலத்தில் அழியாப் புகழ்பெற்ற மாதவச் சிவஞான யோகிகள் என்று சிறப்புற்று விளங்கினார்.

ஆனந்தக்கூத்தர் வருவதற்குச்சற்றுத் தாமதம் ஏற்படவே, அடியார்கள் பசியால் வருந்தக் கூடா என்றுமயிலம்மையார் அவர்களுக்கு அறுசுவை அமுது படைத்து உபசரித்தாள். அமுது விருந்திய தம்பிரான்கள் உளங்குளிர வாழ்த்தித் திருநீறு வழங்கினர். அவர்களுள், ஒருவர்,

''அருந்ததி என் அம்மை, அடியவர்கட்கு என்றும்
திருந்த அமுதளிக்கும் செல்வி,— பொருந்தவே
ஆனந்தக் கூத்தர் அகமகிழத் தொண்டுசெயும்
மானந் தவாத மயில்''

எனும் வெண்பாவைப் பாடி வாழ்த்தி விடை பெற்றார்.

பாபநாசத்தல புராணம் அருளிய முக்களாலிங்க முனிவருக்கு மக்கள் இருவர். மூத்தவர் ஆனந்தக்கூத்தர். இளையவர் நமச்சிவாய கவிராயர். பெரிய நிலக்கிழார் குடும்பம். சைவநெறி வழுவாது வாழ்பவர். முக்களாலிங்க முனிவருக்குக் குருவாக விளங்கியவர் சத்திய ஞான குரு பரன் என்னும் ஒருபெரியார். மெய் கண்டார்-சிவஞானபோதம் என்ற இரு சொற்களின் உட்பொருள் ஒருங்கே 'சத்தியஞானகுரு' என்பதில் விளங்குவது சிந்தித்து மகிழத்தக்கது). நமச்சிவாயக் கவிராயர் 'சிங்கைப்பிரபந்தம்' எனும் அருள் நூலைஅருளியவர். பாபநாசப்பதியில் தேவியாக விளங்கும் உலகம்மையின் உபாசகர் - உலகம்மையைப் பாடுவது ஒன்றையே தொழிலாகக் கொண்டவர். அன்னை பல திருவிளையாடல்களைப் புரிந்து கவிராயரின் பெருமையை உலகறியச் செய்தனள்.

ஆனந்தக் கூத்தர் வீடு திரும்பியதும், அடியார்கள் மூவரை, மகன் அழைத்து வந்ததையும் தாம் அவர்களுக்கு அமுது படைத்து உபசரித்ததையும் மயிலம்மை கூறினாள். அதனைக் கேட்டு ஆனந்தக் கூத்தர் உளம் பூரித்து, விருந்தினரைத் தானும் இருந்து பேணும் வாய்ப்பை இழந்தமைக்கு வருந்தினார்.

பாபநாசத் திருக்கோயிலுக்குத் தெற்கேயுள்ள திருமடத்தில் தம்பிரான்கள் தங்கியிருப்பதை அறிந்து, தாமும் அவர்களைக் கண்டு வணங்கவேண்டுமென்று, ஆனந்தக் கூத்தர், மகனை அழைத்துக்கொண்டு, மாலையில் அம்மடத்திற்குச் சென்றார். தம்பிரான்களைக் கண்டார். வணங்கினார். வந்தவர் யார் என்று அறிந்து தம்பிரான்கள் மகிழ்ந்து, 'நீர், பெறுதற்கு அரிய ஒரு மகனைத் தவப் பயனால் பெற்றுள்ளீர்' என்று, முக்களாலிங்கத்தின் அறிவுக் கூர்மையையும் பண்பையும் பலவாறு புகழ்ந்து கூறினர். 'தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாயி'னும், பன்மடங்கு மகிழ்ந்தார் தந்தை ஆனந்தக் கூத்தர். வெகுநேரம் உரையாடல் நடைபெற்றன. அதில் பல தத்துவ விளக்கங்கள் இடம் பெற்றன. முடிவில் நன்றியுடன் வணக்கம் கூறி விடை பெற்று எழுந்தார், ஆனந்தக் கூத்தர். அன்பு மகனை அழைத்தார்.

சிறுவன் முக்களாலிங்கம், தந்தையார் பாதங்களில் விழுந்து வணங்கி, எழுந்து கை கூப்பி மௌனமாக நின்றான். கண்களில் நீர் ததும்பிற்று. ஏதும் புரியாது திகைத்தார் தந்தை. 'அப்பா! நான் இத்தம்பிரான் சுவாமிகளுடனேயே இருக்க முடிவு செய்துவிட்டேன். என்னை வாழ்த்தி எனக்கு அனுமதிகொடுங்கள்' என்று கண்ணீர் பெருக்கெடுத்து ஓடத் தரையில் வீழ்ந்து, தந்தையின் பாதங்களைப்பற்றிக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதான். ஆனந்தக் கூத்தர் இரு கண்களையும் மூடிக்கொண்டு சோகமே உருவாக நின்றார். பேச முயன்றார். வெகுநேரம் சொற்கள் ஏதும் வெளிவரவில்லை. தம்பிரான்களும் சிலையென நின்றனர். 'எம் பெருமானே! முக்களாமூர்த்தி! பாபநாசா! இதுவே உன் சித்தமாயின் நான் என் செய்வேன்?' என்று கண்ணீர் தாரை தாரையாக வழியத் தழுதழுத்த குரலில், 'எழுந்திரு, மகனே எழுந்திரு! உன் விருப்பம்போல் செய்க, எல்லாம் திருவருட் செயல்' என்றார். தம்பிரான்கள் வியந்து வாழ்த்தினர்.

வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டெனில்
அதுவும் உன்தன் விருப்பன்றே?

எனும் திருவாசகத்தைக் கூறித் தந்தையையும், தனையனையும் தேற்றினர்.

அருமையும் பெருமையும் வாய்ந்த தன் ஒரே செல்வ மகனை, தம்பிரான்களிடம் ஒப்படைத்துக் கூறுகின்றார் ஆனந்தக்கூத்தர்—

''என் தந்தை முக்களாலிங்க முனிவர் பாவநாசத் தலபுராணம் அருளியும், தம்பி நமசிவாயம் உலகம்மை சிங்கைப் பிரபந்தம் பாடியும் புகழ் பெற்றனர். நான் அத்தகைய பணி எதனையும் செய்யவில்லை. அக்குறையை நீக்க என் மகனைப் பெரும் புலவனாக்கிச் சிவ நெறித் தொண்டில் ஈடுபடுத்த வேண்டும் என்பது என்பது என் அவா. இன்றைய நிகழ்ச்சி

யின் மூலம் அப்பெரும் பொறுப்பை உங்களிடம் விட்டுவிடும்படி திருவருள் அருளியுள்ளது. தம்பிரான் சாமிகள் நான் பணிவுடன் கேட்டுக் கொள்வது, இவனைக் கல்வி கேள்விகளில் சிறந்தவனாக்கிக் கற்றோர் அவைகளில் முந்தியிருக்கச் செய்தல் வேண்டும் என்பதே யாகும்'' என உருக்கத்துடன் வேண்டிக்கொண்டார். மகனைத் தழுவி உச்சிமோந்து, நீ சீரும் சிறப்பும் கல்வியும் பெற்றுப் பல்லாண்டு வாழவேண்டுமென்று வாழ்த்தி விடைபெற்றார்.

தளர்ந்த மனத்துடனும், தடுமாறும் கால்களுடனும், கண்களில் மகன் உருவம் மறைந்து மறைந்து தோன்ற உற்சாகமும் சோர்வும் மாறிமாறி வர, தம் இல்லம் சென்று அடைந்தார். இல்லத்தரசி மயிலம்மையிடம் அன்பு மகன் செயலைக் கூறினார். பெற்ற மனம் துடிதுடித்தது. அழுதாள், புரண்டாள். 'பாபநாசா! பாபநாசா!' என்ற சொற்களைத் தவிர, அவள் வாயிலிருந்து வேறு சொற்கள் வரவில்லை. ஆனந்தக் கூத்தர் அவளைத் தேற்றுவதற்குப் பெரும்பாடுபட்டார். இறுதியாக அனைத்தும் திருவருட் செயல் என்பதை உணர்த்தித் தெளியவைத்தார்.

தம்பிரான்கள் முக்களாலிங்கத்தை அழைத்துக் கொண்டு சேரநாட்டு எல்லையிலுள்ள சுசீந்திரம் எனும் தலத்திற்குச் சென்றனர். திருவாவடுதுறை ஆதீனம் சின்னப்பட்டம் எழுந்தருளியிருக்கும் ஊர் அது. முக்களாலிங்கத்தைச் சின்னப்பட்டம் வேலப்பதேசிகரிடம் அறிமுகப்படுத்தினர் தம்பிரான்கள். ஒரு சில நாட்களிலேயே வேலப்பதேசிகர் முக்களாலிங்கத்தின் முதிர்ந்த அறிவையும் பண்பையும் கண்டு வியந்தார். தகுதி கருதிச் சமயதீக்கை சிறப்புத்தீக்கைகளைச் செய்வித்து, முக்களாலிங்கத்தைத் துறவியாக்கிக் காவியுடையும் தந்தருளினார்.

மாமேதையாகிய தேசிகர் முக்களாலிங்கருக்கு மெய்யறிவு நூல்களை ஐயந்திரிபற உணர்த்தி வந்தார். அதன் மூலம் அவர் வடமொழியிலும் தென்மொழியிலும் புலமை பெற்றுச் சைவசித்தாந்த நூல்களைக் கசடறக் கற்று மெய்யறிவு பெற்றார். தகுதியையும் ஒழுக்கத்தையும் அறிந்து, வேலப்ப தேசிகர் அவருக்கு நிருவாணம் என்னும் மேலானதீக்கை செய்வித்து, 'சிவஞானம்' எனத் தீக்கைப் பெயரையும் வழங்கினார். அன்று முதல் முக்களாலிங்கர், சிவஞானத் தம்பிரானாகவிளங்கினார்.

சிவஞானத்தம்பிரான், திருவாவடுதுறைக்குச் சென்று, ஆதீனத்தில் சிலகாலமிருந்து பின்னர் திருத்துருத்தி, மயிலாடுதுறை, தில்லை முதலிய பலதலங்களுக்குச் சென்று வழிபட்டு, ஆங்காங்குச் சிற்சில நாட்கள் தங்கிப் பல சமய, இலக்கிய நூல்களை இயற்றி வெளியிட்டார்.

ஒருசமயம் திருப்பாதிரிப்புலியூரில் தங்கி இருந்தார். செல்வமும் புலமையும் பெற்ற ஒருவர் அங்குள்ள புலவர் பேரவையில் நூறு பொற்காசுகளை வைத்து, 'கரையேறவிட்ட முதல்வா உன்னை யன்றியுமோர் கதியுண்டாமோ? என்பதை நான்காவது அடியாக அமைத்து, அன்று மாலைக்குள், கவிபுனைவோர்க்கு அப்பொன் முடிப்புப் பரிசாகும் என்றார். மாலைப்பொழுது நெருங்கியும் ஆங்கிருந்த புலவர்கள் யாவரும் அச்செய்யுளை இயற்ற முடியவில்லை. நிலையை அறிந்த ஓர் ஏழைப் பிராமணன், சிவஞானத் தம்பிரான் அவ்வூரில் தங்கியிருப்பதை அறிந்து, அவரிடம் சென்று அச்செய்யுளைப் பாடித் தரும்படி வேண்டினான். அவன் வறுமையை உணர்ந்த முனிவர், ஒரு ஓலையில் கீழ்க்கண்ட பாடலை உடனே எழுதிக் கொடுத்தார்.

'வரையேல் தவிட்டமுதஞ் சேந்தன்இட
வுண்டனை; வல் லின்மென் றாலும்
உரையே றவிட்டமுத லாகுமோ?
எனைச் சித்தென் றுரைக்கி லென்னாம்
நரையேறு அவிட்டமுத னாளவனாக்
கொண்டு, நறும் புலிசைமேவுங்
கரையேற விட்டமுதல் வா, வுன்னை
யன்றியும் ஓர் கதியுண்டாமோ'

பிராமணன் அதனை அவையில் காட்டிப் பொற்கிழியைப் பெற்றுத் தன் வறுமையைப் போக்கிக் கொண்டான்.

பின்னர் முனிவர் காஞ்சிபுரம், திருவண்ணாமலை முதலிய பல தலங்களுக்குச் சென்று, திருவொற்றியூர் சென்றடைந்தார். அவ்வூரில் மணலி சின்னையா முதலியார் என்ற செல்வர் சிவஞானமுனிவர் அவர்களைத் தம்முடன் சிலகாலம் தங்கி இருக்கும்படி வேண்டிக் கொண்டார்.

மெய்கண்டார் அருளிய சிவஞான போதத்திற்குப் பேருரை ஒன்று எழுத வேண்டுமென்ற எண்ணம் முனிவருக்கு வெகுநாட்களாக இருந்தது. திருவொற்றியூரில் அப்பணியைத் தொடங்க எண்ணினார். அதற்கு முன் சிவாகம நூல்கள் அனைத்தையும்ஓதவேண்டுமென்று கருதினார். மணலி சின்னையா முதலியார் துணைகொண்டு, பல ஊர்களிலிருந்து ஆகமங்களில் தேர்ச்சி பெற்ற சிவாசாரியார்களை வரவழைத்து உடனிருந்து ஆகமங்களை ஓதி ஆய்ந்து தெளிந்து உணர்ந்தார்.

பின்பு முதலியாரிடம் விடைபெற்றுக் காஞ்சிபுரம் சென்றார். சிறந்த வடமொழி, தென்மொழிப் புலவோர் வாழும் அந்நகரில் தான், சிவஞான முனிவர் சிவஞான பாடியத்தை எழுதி முடித்தார். அந்நூல் வடமொழியில் சங்கரர் இராமாநுசர் மத்துவர் முதலியவர்களால் எழுதப் பெற்ற பேருரைகள் எனும் மாபாடியங்களில் எல்லாம், மிகச் சிறந்த பெருநூலாக அறிஞர்களால் கருதப்படுகிறது. அதனால் சிவஞான முனிவர் மாபாடியச் சிவஞான யோகிகள் என்றும், மாதவச் சிவஞான யோகிகள் என்றும் போற்றப் பெற்றார். அவர்கள் 3 இலக்கண நூல்களும், 15 இலக்கிய நூல்களும், 1 தருக்கநூலும், 10 சமயநூல்களும் எழுதியுள்ளார்கள்.

இன்று மாதவச் சிவஞானயோகிகள் அருளிய சிவஞான பாடியம் என்ற அடித்தளத்தில்தான், சைவசித்தாந்தம் என்ற ஒளிமயமான கோபுரம் ஓங்கி உயர்ந்துவிளங்குகின்றது. வயது முதிர்ந்த நிலையில் யோகிகள் கி. பி. 1785-ல் சித்திரைத் திங்கள் எட்டாம் நாள் ஞாயிற்றுக் கிழமை ஆயில்ய நாளில், சிவபெருமான் திருவடிநீழலில் இரண்டறக் கலந்தார்கள்.

மாதவச் சிவஞானயோகிகள் திருவடி வாழ்க!

# கோயில் நான்மணிமாலை

ந. ரா. முருகவேள், M.A.,M.O.L.

## முன்னுரை :

தமிழகத்தில் தோன்றியருளிய சமய தத்துவ ஞான அருளியற் சான்றோர்கள் பற் பலருள், பட்டினத்து அடிகளார் மிகவும் தலை சிறந்த ஒருவராவார். வேதாந்த சித்தாந்த சமரச ஞான வித்தகச் சான்றோர் ஆகிய தாயு மான சுவாமிகள்,

''பார் அனைத்தும் பொய்யெனவே,
பட்டினத்துப் பிள்ளையைப்போல்,
ஆரும் துறக்கை அரிதுஅரிது''

என்று, பட்டினத்து அடிகளாரைப் புகழ்ந்து போற்றியுள்ளார். இதனால், பட்டினத்து அடிகளாரின் சிறப்பும் மாட்சிமையும் எத்த கையன என்பதனை, யாவரும் இனிதுணரலாம். பட்டினத்து அடிகளாரின் இயற்பெயர் திரு வெண்காடர் என்பது.

''கரத்தினில் மாலவன் கண்கொண்டு,
நின்கழல் போற்ற நல்ல
வரத்தினை ஈயும் மருதஅப்பா!
மதிஒன்றும் இல்லேன்;
சிரத்தினுமாய், என்றன் சிந்தையுள்
ஆகி, வெண்காடன் என்னும்
தரத்தினும் ஆயது நின்னடி யாம்,
தெய்வத் தாமரையே''

என்றுவரும் திருவிடைமருதூர் மும்மணிக் கோவைச் செய்யுள், இவர்தம் இயற்பெயர் திருவெண்காடர் என்பதற்குச் சான்று பகர் கின்றது.

## பட்டினத்தடிகளார் :

எனினும், சைவத் தமிழுலகம் இவரைப் பட்டினத்தடிகளார் எனவே, போற்றி வரு கின்றது. பண்டைக் காலத்தில் பட்டினம் என் றால், அது காவிரிப்பூம்பட்டினத்தையே குறிப்பதாக வழங்கி வந்தது. பூம்புகார் என் னும் காவிரிப்பூம்பட்டினத்தில், திருவெண் காடர் என்னும் இயற்பெயருடைய இவர், மிகப் பெரிய செல்வராய், பெருவாணிகம் புரியும் நிலையினராய் விளங்கி வந்தனர். ஆதலின், இவருக்குப் பட்டினத்தார் என்னும் காரணப் பெயர் சிறப்பாக வழங்கி வந்தது. பின்னர்த் துறவுநெறி மேற்கொண்ட நிலையில், இவரைப் பட்டினத்து அடிகளார் என்று, மக்கள் போற்றி வழங்கி வந்தனர். இவர் இயற்றிய ஐந்து நூல்கள், சைவத்திருமுறைகள் பன்னிரண்டில், பதினொன்றாம் திருமுறையில் தொகுக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் இங்குக் ''கோயில் நான்மணிமாலை'' பற்றிய ஒரு சில கருத்துக் களை மட்டும், இயன்ற அளவு ஒரு சிறிது ஆராய்ந்து காண்போம்.

## தூய துறவுள்ளம்:

சிவநெறியாளர்களுக்குத் தனிச் சிறப்பான முறையில், கோயில் என்று வழங்கப் பெறும் தில்லைச் சிற்றம்பலம் பற்றியும், அங்கு எழுந் தருளி விளங்குகின்ற தில்லை நடராசப் பெரு மானைப் பற்றியும், நாற்பது பாடல்களைக் கொண்டது, இந்நூல். பட்டினத்துப் பிள்ளை யார், தம்முடைய மிகப்பெருஞ் செல்வ வள வாழ்க்கையை,ஒரு நொடியில் துறந்து, பற்றற்ற தூய துறவு வாழ்க்கையை மேற்கொண்ட பெரு மாட்சிமை உடையவர் என்னும் உண்மையினை, இந்நூலின் 2ஆம் பாடல் இனிதுற விளக்கு கின்றது. ''குடைகொண்டு இவ்வையகம் எல் லாம் குளிர்வித்து, எரிபொன் திகிரிப் படை கொண்டு, இகல்தெறும் அரசர்கள் ஆவனதக் காட்டிலும், அம்பலத்தான் தொண்டர்க்கு ஏவல் செய்து, கடைகொண்ட பிச்சைகொண்டு உண்டு, இங்கு வாழ்தல் களிப்புடைத்தே'' என் னும் வரிகள், பட்டினத்தாரின் தூய துறவு மனப்பான்மையினைத் தெள்ளிதின் விளக்கு கின்றது.

## திருத்தசாங்கம் :

கோயில் நான்மணி மாலையின் 4ஆம் பாடல், தில்லை அம்பலவர் ஆகிய பேரரசர்க்கு உரிய திருத்தசாங்கம் என்னும் பத்து உறுப்புக் களையும் அழகுறக் குறிப்பிடுகின்றது. தில்லை அம்பலவாணரின்தார் கொன்றை; கொடி விடை; பறை தமருகம் (உடுக்கை); ஆறு கங்கை; ஆணை திருவரையாக்கலி; யானை, ஆயிரம் தந்தங்களையுடைய அயிராவணம்; குதிரை வேதம்; நாடு வானம்; மலை மேருமால்வரை; பதி தில்லை; பெயர் ஒரு பதினாயிரம் திருநெடு நாமம்! கூத்தப் பெருமான் ஆகிய அரசனுக்கு, இப்பத்துவகை உறுப்புக்களும் அமைந்திருப்பதாகப்பட்டினத்து அடிகளார், மணிவாசகப் பெருமான் திருவாச

கத்திற் பாடுகின்ற முறையில் அழகுறப்பாடி யுள்ளார்.

**மனிதமனம் :**

இந்நூலின் 12ஆம் பாடலில், மனித மனத்தின் இயல்பினைக் ''கல்லினும் வலியது, நல்லில் செல்லாது; தான் சிறிதாயினும் உள்ளிடை நிரம்ப, வான்பொய் அச்சம் மாயா ஆசை மிடைந்தன கிடப்பது; இடம் பெறல் அருமையில், ஐவர் கள்வர் வல்லிதிற் புகுந்து; மண்மகன் திகிரியில் எண்மடங்கு சுழற்ற, ஆடுபு கிடந்த பீடுஇல் நெஞ்சம்'' என்று திறன்தெரிந்து குறிப்பிட்டு இருப்பது, சிறப்பாக உள்ளது.

இந்நூலின் 15ஆம் பாடலில், இவ்வுலகத்தில் அறிவில்லாத மனிதர்கள், செய்யத் தக்கதனைச் செய்யாமலும், செய்யத் தகாததனைச் செய்து கொண்டும், தம் வாழ்நாளை வீணாளாக மாற்றிக் கொண்டு, நரகம் அடையும் நிலையினைக் குறித்துப் பெரிதும் மனம் வருந்திப் பாடுகின்றார். கோயில் நான்மணிமாலையில், 16ஆம் பாடலாக அமைந்துள்ள அகவல், மிகவும் இலக்கியச் செறிவும் சுவையும் வாய்ந்ததாகத் திகழ்கின்றது· பட்டினத்து அடிகளார், தம் வாழ்க்கையிற் பெரு வாணிகம் புரிந்து வந்த நிலையில் பிறங்கியவர் ஆதலின், மனித வாழ்க்கையின் இயல்பினையும், வாணிகத் தொழிலினையும் தொடர்புபடுத்தி, அழகுற உருவகம் செய்து அருமையாகப் பாடி அருள்கின்றார்:

**திருவடி நெடுங்கரை சேர்த்து :**

''தில்லைக் காவல! அம்பலவாண! ஒழுக்கமின்மை - பொய்ம்மை-பிணியுடைமை-துன்பத் தொகுதி-என்னும் பலவகைச் சரக்குகளை ஏற்றிக் கொண்டு, வினை என்னும் மீகாமன் (மாலுமி) செலுத்த, கருப்பப் பை என்னும் நெடுநகரின் ஒரு துறையினின்று புறப்பட்டு, புலன்கள் என்னும் சுறா மீன்கள் கவ்வுவதற்காகப் பாய்ந்து தொடர்ந்து வர, பிறப்பு என்னும் பெருங் கடலின்மீது செல்வதற்குத் தலைப்பட்டு, துன்பங்களாகிய மிகப்பெரிய அலைகள் இடையறாது எழுந்தெழுந்து மோதி அலைக்க, குடும்பபாரம் என்னும் பெரிய பாறைக்கல்லில் தாக்குண்டு, மனவுறுதி என்னும் கூம்பு முறிந்து, உணர்வு என்னும் பாய்மரம் கிழிந்து, என்னுடைய உடலாகிய ஓட்டைகள் மிகுந்த சிறிய கப்பலானது, கலங்கி நிலைகுலைந்து கவிழ்வதற்கு முன்னர், நின்னுடைய அருள் என்னும் நல்ல வலிய கயிற்றைக் கட்டி இழுத்து, என்னை நின் திருவடியாகிய நெடுங்கரையில் ஏற்றிச் சேர்த்துக் காத்தருள்வாயாக'' என்பது, இப்பாடலின் திரண்ட பொருள்.

**ஆள்எனப் புதிதின் அடைந்திலேன் :**

கோயில் நான்மணி மாலையின் 24ஆம் பாடலாகிய அகவலும், மிகுந்த பொருட்செறிவு உடையதாகத் திகழ்கின்றது. ''அம்பலத்து ஆடும் உம்பர் நாயகனே! யான் நின்னுடைய அடிமை. புதிதாக வந்து சேர்ந்தவன் அல்லன். நின்னுடைய திருவடியின் குற்றேவலைத் தலையால் ஏற்றுப் பணி புரிகின்ற வழிவழி மரபில் தோன்றியவன். நின்னுடைய திருவைந்தெழுத்தை நனவேபோல நாள்தோறும் இடையறாது பழகிக் கனவிலும் நவிற்றிச் செபித்து வரும் பேரன்புடையவன். என்னுடைய தீவினைகள் அழியுமாறு, என் செவிகள் கேட்பது, நின்னுடைய பெரிய பொருள்சேர் புகழையே. என்னுடைய நெஞ்சம், அறிவு சிறிதும் இல்லாததாயினும், அது புன்னெறி தவிர்த்துப் போற்றுவது நின்நன்னெறியையே. பெறுதற்கரிய செல்வம் என யான் கொள்ளுவன, நின் திருநீறு, கண்டிகை, திருவைந்தெழுத்து ஆகிய உருத்திர சாதனங்களே.

என்னுடைய கால்கள், நின்னுடைய ஆலயம் வலம் வருவதற்கே, காலையும் மாலையும் அடியெடுத்து வைக்கும். என்னுடைய கைகள், நின்னுடைய கோயில் பணிகளையே செய்யும். நின்னை நினைந்தே என்னுடைய மனம் இடையறாது உருகி நிற்கும். நின் அருளின் திறத்தை நினைந்தே, என்னுடைய கண்கள் அருவிபோலப் பக்தி ஆனந்தக்கண்ணீர் பெருக்கும். யான் என் கண்களால் காண்பன எல்லாம், நீயேயாகி விளங்குகின்றனை. யான் பணிந்து வணங்கிச் சார்வன எல்லாம், நின் திருவடிகளில் புகும் அடைக்கல நெறியே அன்றி, வேறு பிறிது எதுவும் அன்று. ஆதலின் பொய்த்தவ வஞ்சக வேடர்கள் வீசுகின்ற மயக்கச் சொற்களாகிய வலையிலும், போலிப் பொய்ச் சமயப் படுகுழிகளிலும் வீழ்ந்து வருந்தும் நிலை, எனக்கு நேருமோ? நுரையும் திரையும் கொட்பும் பிறவும், கடலின் கண் பெருத்தும் சிறுத்தும் மாறி மாறி எண்ணிலவாக எழுந்து தோன்றினும், அவைகள் அனைத்தும் அக்கடலிலேயே அடங்கிவிடும் தன்மை போல, அண்ட சராசரங்கள் அனைத்தும் நின்னிடம் தோன்றி நின்னிடத்திலேயே அடங்கும். ஆனால் நீயோ ஒன்றினும் தோன்றாய்; ஒன்றினும் அடங்காய்; வானோர்களுக்கு அரியவன்நீ; மறைகளுக்கு எட்டாதவன் நீ, உன்னுடைய அருமை பெருமைகளை, யான்எங்ஙனம்அறிந்து போற்றவல்லேன்?'' என்பது, இப்பாடலின் திரண்ட சிறந்த பொருள்.

**மனமே! வணங்கி உய்க !**

இவ்வாறே இந்நூலின் 28ஆம் பாடல், நெஞ்சு அறிவுறுத்தலாக, மனத்திற்கு அறிவுரைகள் கூறும் முறையில் எளிய இனிய நடையில் அழகுற அமைந்து விளங்குகின்றது. ''ஆசையொடு மயங்கி மாசுறும் மனமே! கண்டன மறையும்; உண்டன மலமாம்; பூசின மாசாம்; புணர்ந்தவை பிரியும்; நிறைந்தன குறையும்; உயர்ந்தன பணியும்; பிறந்தன இறக்கும்; பெரியன சிறுக்கும்; இவ்வுலகில் எப்பொருள்களும் நிலை உடையன அல்ல. செல்வத்தில் பிறந்தோர்; புகழ்மிக்குச் சிறப்புடன் திகழ்ந்தோர்,

கல்வியில் சிறந்தோர், பேராற்றல் வாய்ந்தோர், குலத்தில் உயர்ந்தோர், கொடைத்திறனால் புகழ்பெற்றோர், படை வலிமை வாய்ந்தோர், நலத்தினில் அமைந்தோர் ஆக விளங்கியவர் அனைவரும் மாய்ந்து மறைந்தனர்; இவ்வுலகில் இறவாமல், நிலையாக என்றும் இருக்க வல்லோர் எவரும் இலர். இவர்களின்பெயர்கள் தாமும் நிலைபெறாமல், எப்போதோ மக்களால் அறவே மறக்கப்பட்டு விட்டன. இவ்வுலக வாழ்க்கை, மாயப் பேய்த்தேர் (கானல் நீர்) போன்றது! உறக்கத்தில் காணும் கனவு போன்றது, இவ்வுலகியல் மாயவாழ்க்கை.

இதனை ஒரு பொருளாக மதித்து,அழிந்து போகும் உடம்பினைக் கல்லினும் வலிமை உடையதாகக் கருதிக் கொண்டு, எந்நேரத்திலும் விரைவில் நாம் இறந்து போகக்கூடும் என்பதனை நினையாமல், பொல்லாத் தன்மை வாய்ந்த இழிகுலக் கயவர்கள் போல,மனமே! நீ பல பழிபாவங்களைச் செய்து கொண்டிருக்கின்றாய். வளைவாய்த் தூண்டிலின் உள்ளிரையை விழுங்கும் பன்மீன் போலவும், விளக்கொளியில் சென்று விழுந்து வருந்தும் விட்டில் போலவும், ஊற்றின்பத்தால் பெண் யானையைப்புணர்ந்து மடியும் ஆண்யானை போலவும், இனிய நல்லிசையில் மயங்கிப் பின் வல்லோசை கேட்டுத் துணுக்குற்று மடிகின்ற அசுணப் பறவையைப் போலவும், வாசனையால் ஈர்ப்புண்டு மடியும் வண்டுபோலவும், சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் புலன்களால் ஈர்ப்புண்டு மயங்கி, நீயும் வருந்தி அழிகின்றாய். சிலந்தியானது தன் நூலால் தானே வலைபின்னி, தான் கட்டிய அவ்வலையிலேயே தான் வீழ்ந்து அகப்பட்டுக் கொண்டு துன்புறுவதுபோல, நீயும் நின்னுடைய ஆசையாகிய சங்கிலிக் கயிற்றால் கட்டுண்டு, விடுபட முடியாமல் வருந்திப் புலம்புகின்றாய். இனியேனும் மறையவர்வாழ் தில்லை மன்றுளாடும் இறைவனை நினைந்து புகழ்ந்து வழுத்தி வணங்கி ஈடேறி உய்வாயாக'' என்பதே இப்பாடலின் பொருள்.

**வேண்டலும் வெறுத்தலும் இலேன்:**

இந்நூலின் 36ஆவது பாடலும், மிகச் சிறந்த பொருள் நலம் பொதுளித் திகழ்கின்றது: தில்லை மூதூர் ஆடகப் பொதுவில், நாடகம் நவிற்றும் கடவுட் பெரும! யான் வானோர் இன்பம் எய்தினும் எய்துக; அல்லது எம தூதுவர்களால் இழுத்துச் செல்லப் பெற்று, எற்றியும் ஈர்த்தும் ஈர்ந்தும் போழ்ந்தும் வார்ந்தும் குறைத்தும், செக்குரலிற் பெய்தும், தீநீர் வாக்கியும் துன்புறுத்தப்படுகின்ற நரகம் சேரினும் சேருக; உலக மக்கள் என்னை நல்லவன் என்று சொல்லினும் சொல்லுக; அல்லது அல்லவன் என்று கூறினும் கூறுக; செல்வம் மிக்க இன்ப வாழ்வில் வாழ நேரினும் நேரிடுக; அல்லது துன்பம் மிக்க நிலையில் சுழன்று வருந்தி உழலினும் உழலுக. இளமை வாய்ந்து முதுமை குறுகாமல் என்றும் இருந்தாலும் இருக்க; அல்லது இன்றே இறக்கநேரினும் நேர்க. எதனையும் யான் விரும்பவும் இல்லை; வெறுக்கவும் இல்லை. விருப்பும் வெறுப்புமின்றி, இன்பத்தையும் துன்பத்தையும் ஒரு நிகராகக் கருதும் நிலையில் யான் உள்ளேன். அதற்குக் காரணம், யான் நின்னுடைய அடியவருடன் சேர்ந்து, நின்னுடைய தெய்வக் கூத்தையும் சிவந்த திருவடிகளையும், அடையவும் அனுகவும் பெற்றுக் கிடைத்தற்கரிய செல்வம் எய்தப் பெற்றதேயாகும்.''

**போற்றி நின் பொற்பாதம்:**

இந்நூலின் இறுதிப்பாடல், பின்வரும் கருத்தமைந்து இன்பச்சுவை பிலிற்றுகின்றது: ''தில்லையம்பலவாணனே! திருமாலுக்குச் சக்கரம் கொடுத்த நின் பேரருளுக்கு வணக்கம். அளகை வேந்தனாகிய குபேரனுக்கு அளப்பரிய செல்வம் வழங்கிய செவ்வனே வணக்கம். மார்க்கண்டேயனுக்காகக்கூற்றுவனைஉதைத்து உதவி செய்தவனே வணக்கம். தேவர்களின் துன்பத்தை நீக்கிக் காப்பதற்காகக் கடல்விடம் அருந்தின நின் கருணைக்கு வணக்கம். முப்புரத்தை ஒரு நொடியில் பொடிபட எரித்த நின் வீரத்திற்கு வணக்கம். காமனை எரித்த நின் நெற்றிக் கண்ணுக்கு வணக்கம். கயாசுரன் என்னும் யானையின் தோலை உரித்த நின் பேராற்றலுக்கு வணக்கம். பாண்டவர்களில் ஒருவனாகிய பார்த்தன் பொருட்டு, நீ மேற்கொண்ட வேட்டுவக் கோலத்திற்கு வணக்கம். கயிலை மலையை எடுக்க முயன்ற இராவணனைச் சிறுவிரலால் மிதித்து நசுக்கிய நின் ஆண்மைக்கு வணக்கம். மலையே விழுந்து மாய்ந்தவாறுபோல, சலந்தரன் என்னும் அசுரனை வீழ்த்தி மாய்த்துத் தண்டித்தவனே வணக்கம்.

தாதையைத் தாள் எறிந்த வேதியச் சிறுவனாகிய சண்டேசுவரருக்குப் பரிகலம்(நின் மாலியம்) கொடுத்த அருளாளனே வணக்கம். அடியவர்க்கு விருந்திடுவதற்காகத் தன்மகனைக் கொன்ற சிறுத்தொண்டரின் இல்லத்தில் அமுது செய்தருளியவனே வணக்கம். அகலில் உள்ள வெண்ணெயை உண்ண எண்ணி வந்து, தற்செயலாக விளக்கின் திரியைத் தூண்டிவிட்ட எலியை, மறுபிறவியில் மாவலி வேந்தனாகப் பிறக்கச் செய்து, மூவுலகையும் ஆளும் பெருநிலையில் வைத்த கைவளம் உடையவனே வணக்கம். இரணியனின் அசுர இரத்தத்தைப் பருகி உலகுக்குக் கேடு சூழ்ந்த நரசிங்கத்தை வென்று அடக்கிய சரபமூர்த்தியே வணக்கம். பாம்பை அணிந்த பரமனே வணக்கம். கங்கையும் கொன்றையும் திங்களும் சூடிய செஞ்சடையனே போற்றி. பிரமனும் திருமாலும் அடிமுடி தேடிக்காண முயன்றும், முடியாதபடி நீண்டு வளர்ந்தவனே போற்றி என்று, நின்னுடைய அளவற்ற பெருமைகளையெல்லாம் ஒருங்கு தொகுத்துப் போற்றும் ஆற்றல்சிறிதும் எனக்கு இல்லை. ஆயினும் நின்னுடைய பொற்றாமரை மலர் போன்ற திருவடிகளுக்கு வணக்கம், வணக்கம்!''

---

திருப்போரூர்

## அருட்டிரு சிதம்பர சுவாமிகள் இயற்றிய

# மதுரை மீனாட்சியம்மை கலிவெண்பா*

### காப்பு

அங்கு அயற்கும் மாற்கும் அரிய பெருமான்,
இடஞ்சேர்
அம் கயற்கண் அம்மைக்கு அணியவே, -அம்
கயத்தின்
மா முகம்கொள் கோமானை வாழ்த்திக்,
கலிவெண்பா
நாம் உகந்து பாடுவோம் நன்கு.

### கலிவெண்பா

சீராரும் பூங்கமலத் தெள்ளமுதே! சேயிழையே!
காராரும் மேனிக் கருங்குயிலே!-ஆராயும்

வேதமுதல் ஆகிநின்ற மெய்ப்பொருளே! மின்ஒளியே
ஆதி பராபரையே! அம்பிகையே!-சோதியே!

அண்டர் எல்லாம் போற்றும் அரும்பொருளே!
ஆரணங்கே!
எண்டிசைக்கும் தாயான ஈஸ்வரியே!-தெண்
திரையில்

வந்த அமுதே! என்று, மாறாமலே நினைப்பார்
சிந்தைதனிலே உறையும் செல்வியே!-அந்தம்இலா

மாயோன் தனக்கு இளைய வல்லியே! மாமயிலோன்
தாயே! பராபரையே! சங்கரியே!-தூயஒளி

மன்னும் கயிலாச மாமயிலே! மேருஎனும்
பொன்அம் கிரியுடைய பூங்கொடியே!-அன்னமே!

அட்டகுல வெற்பாய் அமர்ந்தவளே! ஆதிஅந்தம்
எட்டெட்டும் தானாய் இருந்தவளே!-முட்டஎங்கும்

அவ்எழுத்தாய் நின்ற அரும்பொருளே! ஆரணங்கே!
உவ்எழுத்தாய் நின்றதுஒரு உண்மையே!—
எவ்வெழுத்தும்
தானாகி நின்றதுஒரு தற்பரையே! எவ்வுயிர்க்கும்
ஊனாகி நின்றது ஓர் உத்தமியே!-கோனாய்ப்

---

* சென்னைக்கு அருகில் உள்ள திருமுருகன் தலங்கள் பலவற்றுள், திருப்போரூர் என்பது ஒன்று. அது சென்னையிலிருந்து மாமல்லபுரம் செல்லும் பேருந்துத் தடத்தில், அமைந்திருக்கின்றது. திருப்போரூரில் உள்ள திருமுருகன் திருக்கோயில், அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்ப் பாடல்கள் பெற்றது. அங்குள்ள கோயில், பல்லவர் காலத்திலேயே அமைந்திருந்த பழமையும் பெருமையும் உடையது. ஆயினும், காலப்போக்கில், அக்கோயில் சிதைந்து பழுதுபட நேர்ந்தது. அதனை ஏறத்தாழ, 300 ஆண்டுகளுக்கு முன்னர்ச் செப்பம் செய்து திருப்பணி புரிந்தருளிய திருவருட் செல்வப் பெருந்தகையார், தவத்திரு சிதம்பர சுவாமிகள் ஆவர். அவர் மதுரை மாநகரில், ஒரு பெரும் கவிஞர் குடும்பத்தில் தோன்றியவர். தம் இளமைக் காலத்தில் மதுரை மீனாட்சியம்மையினையே, தமக்குரிய வழிபடு தெய்வமாகக் கொண்டு போற்றி வணங்கிப் பூசித்து வந்தார். அவர் சக்தி வழிபாட்டுக்குரிய நூல்களையெல்லாம் துறைபோகக் கற்றுத் தேர்ந்திருந்தனர். சக்தி பீடங்களுள் தலைசிறந்ததாகிய மதுரையில் வாழ்ந்த சிதம்பரசுவாமிகள், சக்தி உபாசனையில் தலைசிறந்து திகழ்ந்தார். அப்போது அவரால் பாடப் பெற்ற மாட்சிமை மிக்க அருட்பெரும் நூலே, ''மதுரை மீனாட்சியம்மை கலிவெண்பா'' என்பதாகும்.

இந்நூலின்கண், அம்பிகைக்குரிய மந்திர தந்திர யந்திர யோக ஞானநுட்பங்கள் பலவும் நிறைந்திருப்பதாகப் பெரியோர்கள் கூறுவர். எளிய இனிய பாடலாகத் தோன்றிய போதிலும், இந்நூல் மிகவும் அருளாற்றல் அமைந்ததாகப் பெரியோர்களால் போற்றப்பட்டு வருகின்றது. மீனாட்சியம்மையின் அருளாணையின்படி, தவத்திரு சிதம்பர சுவாமிகள் தொண்டை நாட்டை அடைந்து, திருப்போரூர் வந்து சேர்ந்து, அங்குள்ள முருகன் திருக்கோயிலுக்குத் திருப்பணிபுரிந்து, முருகனின் திருவருட் பேற்றுக்கு உரியவராயினார். சுவாமிகள் பாடிய புகழ்பெற்ற பெருநூலே ''திருப்போரூர்ச் சந்நிதி முறை'' என்பதாகும். சிவபெருமானுக்கு மாணிக்க வாசகர் பாடிய திருவாசகம் எவ்வாறு மிகவும் சிறப்பும் உகப்பும் உடையதாக அமைந்ததோ, அதுபோல, முருகப்பெருமானுக்கு திருப்போரூர்ச் சந்நிதிமுறை, மிக்க சிறப்பிற்கும் உகப்பிற்கும் உரியதாகத் திகழ்கின்றது என்பது, சான்றோர்களின் கருத்தாகும். அத்தகைய பெருமைக்குரிய ஞானவித்தகராகிய சிதம்பர சுவாமிகள் அருளிச் செய்த ''மீனாட்சியம்மை கலிவெண்பா'' என்னும் துதிநூல், இங்கு அன்பர்கள் பலரும் பாராயணம் செய்து பயன் பெறுவதற்காக வெளியிடப்பெறுகின்றது.

—ஆசிரியர்.

படிஅளக்க மால், பார் பதினான்கும் ஒக்க
அடியவரை ஈடேற்றும் அன்னாய்!-முடிவுஇலா

ஓங்காரத்து உட்பொருளே! உற்றநவ கோணத்தில்,
ரீங்காரம் தன்னில் இருப்பவளே! பாங்குஆன

முக்கோணத்து உள்ளிருக்கும் மூர்த்தியே!
மூவிரண்டாம்
சட்கோணத்து உள்ளிருக்கும் சத்தியே!-மிக்கபுகழ்

எண்ணிரண்டாம் கோட்டில் இருப்பவளே!
எவ்வுயிர்க்கும்
பண்இசைந்த பாட்டின் பரம்பொருளே!-
விண்உலகின்

மேற்பட்டு அங்கு ஊடுருவி, மேலாகி நின்றதுஒரு
நாற்பத்து முக்கோண நாயகியே!-சீர்ப்பெற்ற

பஞ்சகோணத்து இருந்த பைங்கிளியே! பார்முழுதும்
தஞ்சமது ஆகிநின்ற தையலே!-செம்சொல்மறைச்

சொல்லே! பொருளே! சுவையே! அறுசுவையே!
எல்லாப் புவிக்கும் இறைவியே!-தொல்லை

எறும்புகடை, யானைதலை, எண்இல் உயிர்க்கும்
உறும்பொருளாய், அங்கங்கு உணர்வாய்ப்,-
பெறும்பயனாய்,

ஆறாறு தத்துவமாய், ஐயிரண்டு வாயுவாய்க்,
கூறாய்த், திசை பத்தின் கூட்டமாய்ப்,-பேறுஆன

அஞ்சு எழுத்தாய், எட்டு எழுத்தாய், ஐம்பத்தோர்
அக்கரமாய்ப்,
பஞ்ச வர்ணமாய்ப், பஞ்ச தேவதையாய்,-வஞ்சம்
அற்ற

ஆறு ஆதாரப் பொருளாய், ஐயைந்தாய், ஐம்
மூன்றாய்,
வீறு ஆன சக்கரத்தில் மின் ஒளியாய்க்-கூறும்.

கருவி கரணாதிகளாய்க், கைகலந்து நின்ற
பெரியது ஒரு மாயைப் பிரிவாய்,-உரியதுஒரு

சோத்திரத்தில் சத்தமாய்த், தொக்கில் பரிசமாய்,
நேத்திரத்தில் பேருருவாய், நீக்கம்இலா-
நாத்தலனின்

மெத்து இரதமாய், மூக்கின் மேவுகந்தமாய்ப்,
பிறவாய்,
மத்த, பிரமத்த, வயிரவியாய்ச், -சுத்த

துரீயமாய்ப், பின்னும் துரிய அதீதத்தின்
அரீய சிலம்பொலியும் ஆர்ப்பத், -தெரிவு அரிதாய்

நாடுதனில் சென்று இரந்து, நல்பவுரி கொண்டு,
தொந்தம்
ஆடுகின்ற பார்ப்பதியே! அம்பிகையே! நாடிக்

களங்கம் அறவேதான், கரும்புருவம் தன்னில்
பளிங்கு ஒளியாய் நின்ற பரமே!-வளம்பெறவே

கண் இரண்டின் உள்ளே கருணைத் திருவடிவாய்ப்,
புண்ணியமாய் நின்று அருளும் பூவையே! பண்
அமைந்த
நாசி நுனிமேல் நடுஎழுந்த தீபமாய்,
ஓசை விந்து நாதாந்தத்து உள்பொருளாய்,-நேச
முடன்
அஞ்சு முகமாய், அகண்ட பரிபூரணமாய்ப்,
பஞ்சபூதம் ஆன பைங்கிளியே!-கஞ்சமலர்ப்

பாதம் இரண்டாகிப், பச்சைநிறம் தான்ஆகி,
ஆதிமுதல் ஆகிநின்ற அம்பரமே!-தீதுஇலா

நெற்றிதனில் கண்ணாகி, நிட்கள ரூபப் பொருளாய்
உற்றவெளி ஆகிநின்ற உத்தமியே!-பத்திநிறை

ஆகாயத்தின் ஒளியாய், அந்தரத்தின் ரூபமாய்,
மேக ஆதிக்கு உள்ளே விளைபொருளாய்-வாகுஆம்

இடைபிங்கலையாய், இரண்டுக்கும் எட்டாக்
கடையாம்சுழிமுனையாய்க், காலாய்-மடல்அவிழ்ந்த

மூல ஆதாரத்து ஒளியாய், மும்மண்டலம் கடந்து
மேல் ஆதாரத்து இருந்த வெண்மதியாய்ப்,-
பால்ஊறல்

உண்ணும் சிவயோக உத்தமியே!-மெய்த்தவமே!
பண்ணுமறை வேதப் பழம்பொருளே!-எண்ணரிய

மெய்ஞ்ஞான வித்தே! விளக்கு ஒளியே! மெய்ச்
சுடரே!
அஞ்ஞானமே அகற்றும் அம்மையே!-பைந்நாகம்

பூண்ட சிவனார் இடத்துப் பூங்கொடியே! பாங்
குடனே
தாண்டவம் ஆடப், பவுரிதாளம்ஒத்தி-ஆண்டியுடன்

ஆடும் கூத்தாடிச்சி, அம்மனைப் பந்தாடிச்சி,
தேடியும் மால்காணாச் சிவசத்தி,-நாடிஉனைப்

போற்றும் அடியார்கள் வினைபோக்கியே,
அஞ்சல்என்று
தோற்றுகின்ற அம்மை, துடிஇடைச்சி,-ஏத்துஅரிய

பச்சை நிறத்தி, பவளக் கொடி இடைச்சி,
கச்சைப் பொருமுலைச்சி, கைவலைச்சி,-கொச்சை

மலையரையன் பெற்ற மலைச்சி, கலைச்சி,
நிலையறி வேதாந்த நிலைச்சி; அலையாத

அன்ன நடைச்சி, அருமறைச்சி, ஆண்டிச்சி,
கன்னல் மொழிச்சி, கருணைச்சி,-பண்ணுதமிழ்

வாய்ச்சி, சாடைச்சி, வடிவுடைய மங்கைச்சி,
பேய்ச்சி, இளமுலைச்சி, பேதைச்சி-காய்ச்சியபால்

வெண்ணெய் மொழிச்சி, வெளிச்சி, வெளிஇடைச்சி,
அண்ணுபுரம் தீயிட்ட அம்படைச்சி,-நண்ணிவரும்

கொப்புக் குழைச்சி, குவளைப் பெரு விழிச்சி,
அப்புச் சடைச்சி, சிவ ஆகமத்தி,-மெய்ப்பாம்

கருப்புச் சிலைச்சி, கலைச்சி, வலைச்சி,
மருப்புத் தனத்தி, மவுனத்தி,-பொருப்பு இடத்தி

தாமப் புயத்தி, சமர்த்தி, தருமத்தி,
நாமச் சிவபுரத்தி, நாரணத்தி,-தேமருவும்

காரணத்தி, பூத கணத்தி, தனபார
வாரணத்தி, அட்டதிக்கு மாரணத்தி,-பூரணத்தி

பாத பரிபுரத்தி, பங்கயத்தி, செங்கரத்தி,
சோதி மணிநிறத்தி, சொப்பனத்தி,-பாதிமதி

சூடுகின்ற சொக்கருடன் துய்ய புலித்தோலுடுத்திக்
காடுதனில் வீற்றிருக்கும் காரணியே!-நாடறியும்

சேணிச்சி, நல்ல சிறுத்தொண்டன் பிள்ளைஅறுத்து
ஊணிச்சி, நஞ்சு அமுதாம் ஊணிச்சி,-பாணிச்சி,

பாச அங்குசத்தி, பரத்தி, பருப்பதத்தி,
காசாம்பூ மேனிக் கனதனத்தி,-மாசு இலா

அம்பரத்தி, ஐம்புலத்தி, ஆனதுஒரு வேதாந்த
உம்பருக்கும் எட்டாத உத்தமத்தி,-செம்பொன்
வளைச்

செட்டிச்சி, வைகைதனில் சென்றுவெட்டி மண்
சுமந்த
ஒட்டச்சி, பூதிஅணி உத்தளத்தி,-அட்டதிக்கு

மின்னே! விளக்கே! விலையில்லாச் சீவரத்தினப்
பொன்னே! நவமணியே! பூங்கிளியே!-இன்னமுதே!

மாணிக்க வல்லியே! மாமரகதப் பணியே!
ஆணிக் கனகத்து அரும்பொருளே!-மாண்உற்ற

சிங்கார வல்லியே! செம்பொன் சிலைவளைத்த
கங்காளற்கு அன்பான கண்மணியே!-மங்காத

தெய்வக் குலக்கொழுந்தே! செம்பட்டு உடைத்
திருவே
ஐவருக்கும் தாயாய் அமர்ந்தவளே!-மெய்யருக்குச்

சித்தி கொடுக்கும் சிவாநந்தி! அன்பருக்கு
முத்தி கொடுக்கும் ஞானமூர்த்தியே!-எத்திசைக்கும்

தாயகமாய்ச் சூழ் தாவர சங்கமம் விளக்கும்
தூய சுடர் மூன்றான சூக்குமமே!-வேய்ஈன்ற

நித்திலமே! கற்பகமே! நின்மலமே! நன்மணியே!
சுத்த பரிபூரணியே! சுந்தரியே!-அத்தருடன்

வாதாடும் மங்கையே! மாமந்திர ரூபியே!
வேதாந்தியே! கமல மெல்லியலே!-நாதாந்த

மாயேஸ்வரியே! மங்கையே! மாமறைக்கும்
தாயாகி நின்ற சரஸ்வதியே!-காயாய்ப்

பழுத்த பழமாய்ப், பழச்சுவைகள் தானாய்,
முழுத்த பரஆனந்த முதலாய்,-எழுத்துமுதல்

ஆறு சமயங்களுக்குள், அவ்வவர்க்கும் வெவ்
வேறாய்,
வேறுபல ரூப விகற்பமதாய்க்,-கூறு அரிதாய்,

அங்கங்கும் தானாய் அமர்ந்தவளே! ஆதிஅந்தம்
எங்கெங்கும் தானாய் இருந்தவளே!-திங்கள்நுதல்

அஞ்சுகமே! தேனே! அணங்கே! அமுதமொழிக்
கிஞ்சுகமே! பிஞ்சுமதிக் கிள்ளையே! கொஞ்சுகுயில்

கன்னி, திரிசூலி, கபாலி, சிவகாமி,
மன்னு கவுரி, மகமாயீ,-பொன்னின்மலர்த்

தாளி, சதுரி, சவுந்தரி, முக்கண்ணுடைய
காளி, பகவதி, கங்காளி-தூளியதாத்

தக்கன் வலையறுத்த தத்துவத்தி, தற்பரத்தி,
அக்கினி கைஊர்ந்த அமர்க்களத்தி,-மிக்கபுகழ்

வீரசத்தி, மேருவினை வில்லா வளைத்த ஒரு
பாரசத்தி, வேதப் பராசத்தி,-தாரணிகள்

கொண்ட கார்இச்சிக்கும் குந்தளத்தி, மாமதனன்
சண்டை காரிச்சி, சகலத்தி,-துண்டமதிச்

செஞ்சடைச்சி, கஞ்சுளிச்சி, செம்படத்தி,
கங்கணத்தி,

பஞ்சசத்தி, கொந்தளத்தி, பைம்பணத்தி,
அஞ்சனத்தி,
முத்துவடக் கொங்கைச்சி, முல்லை மகிழ் நகைச்சி,

பத்தரவர் நெஞ்சகத்தி, பார்இடத்தி,-சுத்த
வெள்ளை

அக்கு வடத்தி, அறம்வளர்த்தி, அன்புடைத்தி,
செக்கர் இளம்பிறைச்சி, செண்பகத்தி, தக்கமணி

ஓலைக் குழைச்சி, உபதேசக் குண்டலச்சி,
மாலைக் கழுத்தி, மவுனத்தி, -ஞாலமெலாம்

அக்கரத்தி, கொக்கணத்தி, அண்டபகிர் அண்டத்தி,
முக்கணத்தி, நிஷ்களத்தி, மோட்சசத்தி,-மிக்கபுகழ்

ஏகாக்கரத்தி, இமயப் பருப்பதத்தி,
நாகாதி பூண்ட சிங்க நாதத்தி,-வாகு ஆன

பத்ம ஆசனத்தி, பரிமளத்தி, பாம்பு அணைத்தி,
கல்ப அந்தரத்தி, கருநிறத்தி,-வில்காம

வேடிச்சி, நல்லது ஒரு மீனவனுக்கு அன்றுமுடி
சூடிச்சி, கொக்கிறகு சூடிச்சி,-நாடிச்சீர்ப்

பாதந்தனைத் தேடும் பங்கயத்தில் வீற்றிருக்கும்
வேதன் தலையறுத்த வித்தகத்தி,-நீதிபுனை

பாடகத்தி, கீத ப்ரபந்தத்தி, வெள்ளி மன்றுள்
ஆடகத்தி, கூடலுக்குள் ஆதியே,-ஏடு எதிரே

ஏற்றுவித்து, முன்சமணர் எண்ணாயிரர் கழுவில்
வீற்றிருக்க வைத்த மறை வித்தகியே, நால்திசையும்

கொண்டாடப் பெற்றதொரு கோமளமே!
யாமளையே!
தண் தாமரைத் திருவே! தையலே!-மண்டலங்கள்

எங்கும்ஒத்து நின்றருளும் ஈஸ்வரியே! மாமதுரை
அம்கயற் கண் நாயகியே! அம்மையே!-துங்க

ஒளியே! பெருந்திருவே! ஓதிமமே! உண்மை
வெளியே! பரப்பிரம வித்தே!-அளிசேரும்

கொந்தளக பந்திக் குயிலே! சிவயோகத்து
ஐந்தருவே! மூவருக்கும் அன்னையே! எந்தம்இடர்

அல்லல்வி னைஎல்லாம் அகற்றியே, அஞ்சல்என்று
நல்ல சவுபாக்கியத்தை நல்கியே,-வல்லபத்தின்

ஆசு மதுரம் சித்ரம் வித்தாரம் என்று அறிஞர்
பேசுகின்ற உண்மைப் பெருவாக்கு-நேசமுடன்

தந்துஎனை ஆட்கொண்டு, சற்குருவாய் என்
அகத்தில்
வந்துஇருந்து, புத்திமதி கொடுத்துச்-சந்ததமும்

நீயே துணையாகி நின்று இரட்சி, அங்கயற்கண்
தாயே சரணம் சரண்!

---

# அஷ்டபந்தன மருந்து

திரு. ஜி. வாகீசம்பிள்ளை, சிதம்பரம்

இறைவன் எங்கும் இருக்கின்றான். எல்லா ஆன்மாக்களிலும் கலந்து இருக்கின்றான். ஆலயங்கள்தோறும் அம்மை அப்பனாக இருந்து ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்கின்றான், என்று சாத்திரங்கள் கூறுகின்றன. ஒன்றாய் உடனாய் வேறாய் என மூன்று கூறாக இருந்து, உயிர்களுக்கு நன்மை செய்கின்றான் இறைவன் என்பது, திருமுறைகளின் கருத்து ஆகும்.

பசுவினுக்குப் பால் உடல் முழுவதும் பரவியிருப்பினும், பசுவின்மடியின் மூலம் பால் வெளிப்படுவதுபோல, இறைவன் எங்கும் வியாபித்து இருப்பினும் ஆலயங்களில் மூர்த்திகள் மூலம் உருவந்தாங்கி ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்கின்றான். இறைவனை வழிபாடு செய்ய உருவத் திருமேனியை அமைக்கும்போது ஆசனம் மூர்த்தி, மூர்த்திமான் என மூன்று பாகுபடுத்தி அமைக்கின்றோம். ஆசனம் என்பது மூர்த்திக்குக் கீழே பீடம் அமைத்தல். அது சுண்ணாம்பு, சிமெண்டு இவைகளால் பீடக் கருங்கல்லை நழுவாமல் அமைத்தல், பீடத்தின்மேல் மூர்த்தி அமைத்தல், அதாவது விநாயகர், முருகன், சிவலிங்கம், அம்பாள், சண்டி முதலிய மூர்த்திகளைப் பதியவைத்தல், பதியவைத்து மூர்த்திகள் ஆடாமலும், அசையாமலும் இருப்பதற்குச் சுற்றிலும் சாத்துவதற்கு, அஷ்டபந்தனம் என்று பெயர்.

அஷ்டபந்தனம் என்றாலே எட்டுவிதமான மருந்துகளின் சேர்க்கை என்று பொருள். மூர்த்திகள் நகராமலும் அசையாமலும் சுற்றிலும் சாத்துவதுதான் அஷ்டபந்தனம் எனப்படும். சிறு பூச்சிகள்கூட நுழையச் சந்து இல்லாமல் அழுத்தித் தடவிவிடவேண்டும். அடுத்த பன்னிரண்டு ஆண்டோ, அதற்குமேலும் முப்பது ஆண்டுகள் வரையிலோ, கும்பாபிஷேகம் செய்யப்போகும் நாட்கள்வரை வலுவாக இருக்க வேண்டியது அஷ்டபந்தனம். ஆகையால், இடித்துச்சூடு ஏறினபிறகு மருந்து கைபொறுக்கும் சூட்டோடு சாத்த வேண்டும். அஷ்டபந்தன மருந்து சாத்தி அனுபவம் உள்ளவர்களைக் கொண்டு அதற்குரிய கருவிகளைக் கொண்டு சாத்த வேண்டும். உயர்ந்த மருந்துகளின் சேர்க்கையில்லாமல் மட்டரகமான மருந்துகளின் சேர்க்கையாக இருந்தால், சிலகாலத்தில் மருந்து அபிஷேக காலங்களில் கரைந்துவிடும். பின்னர் பூச்சி புழுக்கள் தோன்ற ஏதுவாகும். உயர்ந்தரக மருந்துகளினால் சேர்த்து நல்ல அஷ்டபந்தனம், முறைப்படி தயார் செய்தல் வேண்டும்.

கீழே சாமான்கள் பட்டியலும் செய்முறையும் விரித்துக் கூறப்பட்டுள்ளன. சிதம்பரம் நடராசர் கோயிலில் இதுவரை நடந்த கும்பாபிஷேகங்களுக்கு இம்முறையில்தான் தயார் செய்து சாத்தியுள்ளோம். நன்றாகவும் வலுவாகவும் முறையாகவும் உள்ளது என்பதையும் அறிந்துள்ளோம்.

செம்பஞ்சு தருவிக்க அங்கங்குள்ள கதர்க்கடை மூலம் ஆந்திரப்பிரதேசத்திலிருந்து தேவையானதைத் தருவித்துக் கொள்ளவேண்டும். யாவற்றையும் சேகரித்துக் கொண்டு, முதலில் *(1)*கருங்குங்கிலியத்தைக் கல் உரலில் போட்டு அப்பளப்பாரையால் இடித்துப் பொடிசெய்து சலித்து வைத்துக் கொள்ள வேண்டும். *(2)* கொம்பரக்கு அம்மியில் வைத்து அரைத்துப் பொடிசெய்து சலித்து வைத்துக்கொள்ளவேண்டும். *(3)* பூங்காவி *(4)* சுக்கான்கல், பெரியகல்லாகத் தருவித்துக் கொள்ளவேண்டும். பிறகு கல் உரலில் போட்டு அப்பளப்பாரை கொண்டு இடித்துப் பொடி செய்து சலித்து வைத்துக் கொள்ளவேண்டும். மேற்படி பொருள்கள் *1* முதல் *4* வரை இடித்து வஸ்திரகாயம் செய்து கொள்ள வேண்டும். தேன்மெழுகு ஒவ்வொரு கட்டி தயார்செய்யும்போது கத்தியால் சீவிப் போட்டுக் கொள்ளவேண்டும். இலிங்கத்தை நன்றாகப் பொடிசெய்து கல்வத்தில் அரைத்துக் கொள்ளவேண்டும். செம்பஞ்சுஒவ்வொரு கட்டி தயார்செய்யும்போதும் நன்றாகப் பிய்த்துப் போடவேண்டும். பட்டியலில் கண்ட மருந்துகளை ஒவ்வொரு உருண்டைக்கும் தனித்தனியே எடைபோட்டு அளவுப்படி மர உரலில் உலக்கையால் இரண்டுபேர் மாறி மாறி இடித்து வரவேண்டும். ஒருவர் 4 நிமிடத்துக்கு ஒரு முறை கிளறிவிடவேண்டும். வெண்ணெயைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கலந்து இடித்து, வரவேண்டும். இவ்வாறு அரை மணிநேரம் ஒரு கலவையை இடித்து வந்தால் லேகியம்போல் வந்துவிடும். அதை உருட்டி அளவு செய்து கொள்ளவேண்டும். தங்களுக்குத் தேவையான கட்டிகளைத் தயார் செய்துகொண்டு, பிறகு அந்தக் கட்டிகளை மறுபடியும் வெண்ணெ தடவி இடித்தால் லேகியம் மாதிரிவந்துவிடும். அரை மணிநேரம் இடிக்கவேண்டும். பஞ்சு தெரியாமல் இடிக்கவேண்டும். முதன் முறை

தயாரான கட்டிகளை மறுபடி இருமுறை இடித்து வைத்துக் கொண்டால் போதும். குறைந்தபட்சம் மூன்று முறையாவது இடித்து வைத்துக் கொள்ளவேண்டும். இந்தக் கட்டி களைக் கும்பாபிஷேக தினத்தன்று இடித்துச் சாத்தவேண்டும்.

அஷ்டபந்தன மருந்துக்குத் தேவையான
சாமான்கள் உருண்டை 1க்கு

| | | |
|---|---|---|
| 1. | கொம்பரக்கு | — 60 கிராம் |
| 2. | கருங்குங்கிலியம் | —173 ,, |
| 3. | சுக்கான்கல் | —300 ,, |
| 4. | பூங்காவி | — 90 ,, |
| 5. | செம்பஞ்சு | — 12 ,, |
| 6. | லிங்கம் | — 50 ,, |
| 7. | தேன்மெழுகு | — 75 ,, |
| 8. | வெண்ணெய் | — 60 ,, |
| | கூடுதல் | 820 கிராம் |

இவைகளைப் போட்டு வெண்ணெய் கலந்து இடித்தால் சேதாரம் போக, மூன்று இடி இடித்தவுடன் 750 கிராம் முதல் 800 கிராம் ஆகும். இந்த முறையே போதுமானது.

அஷ்டபந்தன மருந்து இடிக்க வெண்ணெய்
தேவை விபரம்

முதல்இடிக்கு 8 கட்டிக்கு ½ கிலோ வெண் ணெய்

இரண்டாவது இடிக்கு 24 கட்டிக்கு ½ கிலோ வெண்ணெய்

மூன்றாவது இடிக்கு 30 கட்டிக்கு ½ கிலோ வெண்ணெய்

குறிப்பு: தேன்மெழுகு நெ.1, மூன்று வகைகள் உள்ளது. அதில் நெ.1 வாங்க வேண்டும். கருங்குங்கிலியம் 2,3 வகை உண்டு. அதில் முதல் தரம் வாங்க வேண்டும். 1 உரலுக்கு 1 உருண்டை.

## நிர்வாக அதிகாரிகள் நியமனம்

1) சேலம் மாவட்டம், மேட்டூர்வட்டம், தங்கமாபுரிப்பட்டினம் அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி கோயில், தாரமங்கலம் அருள்மிகு கயிலாசநாதர் கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதி காரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (25.1.83)

2) திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், கணமங்கலம், அருள்மிகு சிதம்பரேசுவரர் கோயில், திருச்சி மாவட்டம், பெரம்பலூர்வட்டம், செட்டிகுளம் அருள்மிகு ஏகாம்பரேசுவரர் கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (24.1.83).

3) தென்னார்க்காடு மாவட்டம், விழுப்புரம் அருள்மிகு கயிலாசநாதர் கோயில், தும்பூர் அருள்மிகு நாகம்மன் கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (24.1.83).

4) மதுரை மாவட்டம், பெரியகுளம் வட்டம், அல்லிரதம், அருள்மிகு அழகர்சாமி மடம், வீரபாண்டி அருள்மிகு கௌமாரியம்மன் கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (24.1.83).

5) சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம், பாய்ச்சல், அருள்மிகு ஜெயங்கொண்டநாதர், மாரியம்மன், செல்லாண்டியம்மன் கோயில்கள், இராசிபுரம் அருள்மிகு செல்லாண்டியம்மன் கோயி லுடன் இண்ணக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

6) தஞ்சாவூர் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், நாலுவேதபதி அருள்மிகு அமரபதீசுவர சுவாமி கோயில், புஷ்பவனம் அருள்மிகு சுகந்தவனேசுவரசுவாமி கோயிலுடன் இணைக்கப்பெற்று, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப் பெற்றுள்ளார். (15.2.1983).

7) தஞ்சாவூர் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், கள்ளிமேடு, அருள்மிகு பத்திரகாளியம்மன் கோயில், புஷ்பவனம் அருள்மிகு சுகந்தவனேசுவரசுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பெற்றுள்ளார். (15.2.1983).

8) தஞ்சாவூர் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், புஷ்பவனம், அருள்மிகு இராமர் மடாலயம் புஷ்பவனம் அருள்மிகு சுகந்தவனேசுவரசுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (15.2.1983).

9) தஞ்சாவூர் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், வல்லபள்ளம் அருள்மிகு ஏகாம்பரேசுவர சுவாமி கோயில், புஷ்பவனம் அருள்மிகு சுகந்தவனேசுவரசுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பெற்றுள்ளார். (15.2.1983).

# சத்திய ஞானசபை விளக்கம்

"அருள்மொழியரசு"

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

**வள்ளலார் மாண்பு:**

உலகின்கண் ஆன்மாக்களின் உள்ளத்தில் அறியாமையாகிய இருள் மிகுந்தபோதெல்லாம் அதனை விலக்கும்பொருட்டு ஞானஒளிமயமான ஆன்றோர் அவ்வப்போது அவதரித்து அருளினார்கள்.

சாதி சமயம் மதம் முதலிய பிணக்கினாலாகிய பேரிருள் மூடியபோது, அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள், இறுதியில் உறுதி செய்யத் திருஅவதாரஞ் செய்தனர். சாகாவரம் பெற்று உலகிற்கு ஞானத் தந்தையாராக இவர்கள் விளங்குகின்றார்கள்.

"நோவாது நோன்பெனைப்போல் நோற்ற
வரும் எஞ்ஞான்றும்
சாவா வரம்எனைப்போல் சார்ந்தவரும்-
தேவாநின்
பேரருளை என்போலப் பெற்றவரும் எவ்
வுலகில்
யாருளர்நீ சற்றே யறை"

"அகத்தே கறுத்துப் புறத்துவெளுத்
திருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத் தடைவித் திடஅவரும்
இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந்
திடுதற் கென்றே எனையிந்த
யுகத்தே இறைவன் வருவிக்க
உற்றேன் அருளைப் பெற்றேனே"

பலகாலஞ் செய்த மாதவப் பயனால் இராமலிங்க அடிகள் பேருலகெல்லாம்போற்றத் திருவருள் செங்கோல் பெற்றுச் சன்மார்க்க ஆட்சிபுரிவாராயினார்கள். அவர்களதுபெருமை இமயமலையிலும் உயர்ந்தது. அடிகளார் உடல் தழைக்கச்சத்தியதருமச்சாலையையும், உணர்வு தழைக்கச் சத்திய வேதபாடசாலையையும், உயிர் தழைக்கச் சத்திய ஞானசபையையும் வடலூரில் நிறுவியருள் புரிந்தார்கள்.

**சோதி:**

மாற்றம் மனங்கழிய நின்ற வான் பொருளாகிய இறைவர் சோதி வடிவாக விளங்குகின்றனர். கடவுளை சோதி சொரூபர் என்று எல்லாச் சமயங்களும் கூறுகின்றன.

"திருவையா றகலாத செம்பொற் சோதி"
"விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்"
—அப்பர்.

"துத்தியம் செய நின்றநற் சோதியே"
"சோதியே சுடரே சூழொளி விளக்கே"
"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதி"
"கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை"
—மாணிக்கவாசகர்

"அலகில் சோதியான் அம்பலத் தாடுவான்"
—சேக்கிழார்

"தீபமங்கள சோதி நமோ நம"
"ஆயும் வேதகீத மேழிசை பாலி அஞ்செ
ழுத்தங்க முட்ட நின்று..துன்றுசோதி"

"சோதி யுணர்கின்ற வாழ்வு சிவமென்ற
சோக மதுதந்து.....எனையாள்வாய்"
—அருணகிரிநாதர்

"சுத்தநிர்க்குணமான பரதெய்வமே பரஞ்
சோதியே சுகவாரியே"
"சோதியே நந்தாச் சுகவடிவே வெளியே
ஆதியே நின்னை அறியவைத்தால்
ஆகாதோ?"

"வாமசோதி சோமசோதி வானசோதி ஞான
சோதி
வாகசோதி யோகசோதி வாதசோதி நாத
சோதி"
—இராமலிங்கர்

இந்த ஆன்றோர் அருள்வாக்குகளை ஒருங்கே உன்னுக.

**சோதியே சிவலிங்கம்:**

நம்முடைய உடம்பாகிய கோயிலுக்குள் சிவசோதி விளங்குகின்றது. சிவசோதி மேல் நோக்கியிருக்கின்றது. அருட்சோதி அதைச்சூழ்ந்திருக்கின்றது. ஆன்மசோதி அதனைத் தாங்கி

நிற்கின்றது. எனவே ஆன்மசோதியுள் அருட் சோதி; அருட்சோதியுள் சிவசோதி ''சோதியுட் சோதியுட் சோதி'' –

என்றார் அடிகள்.

இதனையே சிவலிங்கம் என்று உணர்க. மேல் நோக்கியுள்ள இலிங்கம் சிவசோதி; அதைச் சூழ்ந்துள்ள ஆவுடை அருட்சோதி; அதனைத் தாங்கும் பீடம் ஆன்மசோதி. எனவே உடம்பில் உள்ள உயிர் சிவலிங்கம் என்று அறிக.

''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்'

—திருமந்திரம்

சிவலிங்க வழிபாடும், சோதி வழிபாடும் ஒன்று என்று உணர்க. சிவலிங்க வழிபாட்டின் சூட்சுமம் சோதி வழிபாடு ஆகும்.

**சோதியும் முருகனும்:**

அருவும், உருவும், ஆதியின்மையும், பலதும் ஒன்றுமான பெரிய அருட்சோதியே ஆறு திருமுகங்களும், பன்னிரண்டு திருக்கரங்களும், பதினெட்டுத் திருக்கண்களும் உடைய கருணை வடிவங்கொண்டு வந்தது என்பதனை உய்த்துணர்க.

''அருவமும் உருவு மாகி
அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறுங்
கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு
உதித்தனன் உலகம் உய்ய''

—கந்தபுராணம்

ஆதலின் அருட்பெருஞ் சோதியே ஆறுமுகக் கடவுள் என்க.

**சோதியும் அருணையும்:**

மாலும் அயனும் பிணங்கியபோது, அவர்தட்கு இடையில் சோதி ஒன்று மண்ணையும் விண்ணையும் ஊடுருவி நின்றது. அதன் முதலையும் முடியையும் அவர்கள் தேடித் தேடித் திகைத்தனர் என்ற வரலாற்றின் நுணுக்கத்தையும் ஆய்க.

திருமால் (இலக்குமி) செல்வத்திற்கு நாயகர்; பிரமர் (கலைமகள்) கல்விக்கு நாயகர். சோதி என்பது ஞானம்: ஞானமாகிய சோதியைச் செல்வமும் கல்வியும் பிணக்குற்றுத் தேடின. காண முடியவில்லை. ஞானத்தை ஞானத்தினாலேயே அறிய வேண்டும்.

''அறிவாலறிந்து னிருதா ளிறைஞ்சும்
அடியாரிடைஞ்சல் களைவோனே''

—திருப்புகழ்

—கல்விப் பெருக்கினாலும், செல்வமுறுக்கினாலும் ஞான சோதியைக் காண இயலாது என்று உணர்க.

**சோதியும் இராமரும்:**

அறநெறி அருகி மறநெறி பெருகிய காலத்து, புன்னெறியை மாற்றி நன்னெறியை ஏற்றும் பொருட்டுக் கோசலை வயிற்றில் நீல சோதி ஒன்று வந்து தங்கி, இராமராகத் திருவவதாரஞ் செய்தது என்க. எனவே சோதியே இராமபிரான் என்பதனையும் உணர்க.

ஒருபகல் உலகெலாம் உதரத் துட்பொதிந்
தருமறைக் குணர்வரும் அவனை அஞ்சனக்
கருமுகிற் கொழுந்தெழிற் காட்டு சோதியை
திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை

—கம்பராமாயணம்.

**பெரியபுராணம்:**

அன்றியும் அரனார் இளையான் குடிமாற நாயனார் இல்லத்தில் இரவில் உணவு கேட்டு, அவர்கள் வித்திய நெல்லைக் கொணர்ந்து அமுதாக்கி அவரைத் துயிலுணர்த்தச் சென்ற பொழுது, இறைவர் சோதி வடிவாகத் தோன்றினார்.

அழுந்திய இடருள் நீங்கி,
அடியனேன் உய்ய என்பால்
எழுந்தருள் பெரியோய் சண்ட
அமுதுசெய் தருள்க வென்று
தொழும்பனார் உரைத்த போதில்
சோதியாய் எழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவி யாருந்
தொண்டருந் திகைத்து நின்றார்.

**திருவிளையாடல்:**

வந்திக்கு ஆளாக வந்த சொக்கலிங்கப் பெருமான், பாண்டியன் அடிக்க மண்ணை உடைப்பிற் கொட்டி மறைந்த இடத்திலும், பரஞ்சோதி முனிவர், இறைவரைச் சோதி என்றே குறிப்பிடுகின்றார்.

கண்டனன் கன்று வேந்தன்
கையிற் பொற்பிரம்பு வாங்கி
அண்டமும் அளவி லாத
உயிர்களும் ஆக மாகக்
கொண்டவன் முதுகில் வீசிப்
புடைத்தனன் கூடையோடு
மண்டனை உடைப்பிற் கொட்டி
மறைந்தனன் நிறைந்த சோதி

**சோதி வழிபாடு:**

சோதி வழிபாடு எல்லாக் காலத்தவர்க்கும், எல்லாத் தேயத்தார்க்கும், எல்லாமதத் தினர்க்கும், எல்லாச் சமயத்தார்க்கும், எல்லா மரபினர்க்கும் இசைந்த ஒன்றாய்ப் பிணக்கமின்றி இணக்கமுடன் ஒன்றுபட்டு வழிபடுவதற்கு உரியதாகும். காலையும் மாலையும் உச்சியும் சூரியனை வழிபடும் வழக்கமும், பாரசீகர்கள் நெருப்பை வழிபடும் வழக்கமும், நமது நாட்டில்

தொன்றுதொட்டு இருந்து வருகின்றன. முழு மதியன்று செய்யும் வழிபாடும் சோதி வழிபாடேயாகும்.

ஆதலினால், சமரச சுத்த சன்மார்க்க குருமூர்த்தியாகிய இராமலிங்க அடிகள் அகத்தே தாம் கண்ட அருட்பெருஞ் சோதியைப் புறத்தே அனைவருங் கண்டு உய்ய வேண்டும் என்று கருதி, அளவிலாத கருணையினால் வடலூரில் சத்திய ஞான சபையைப் பிரசோற்பத்தி ஆண்டு தைத்திங்கள் 13ஆம் நாள் (25-1-1872) வியாழக்கிழமை பூச நட்சத்திரத்தில் நிறுவியருள்புரிந்தார்கள்.

**சத்திய ஞானசபை விளக்கம்:**

(1) அன்பு என்ற சங்கிலியால் அகப்படுவது அருட்சோதி என்பதை உணர்த்தச் சபையைச் சுற்றிச் சங்கிலி ஒன்றை அமைத்தார்கள்.

''பக்தி வலையில் படுவோன் காண்க''
''அன்பெனும் வலைக்குட் படுபரம்பொருளே''

(2) அதை அடுத்து இடையிடையே அறிவு வடிவான வேற்படையின் குறியுள்ள இரும்புக் கம்பிகளுடன் கூடிய 52 கட்டைகளும் ஓம் என்ற மூலமந்திரத்துடன் கூடிய அகராதி க்ஷகாராந்தமாகவுள்ள மாத்ருகா மந்திரங்களை உணர்த்துகின்றன.

(3) முகப்பில் உள்ள மூன்று வாயில்களும் அருட்பெருஞ் சோதியை அடைவதற்குச் சாதனங்களாகவுள்ள கர்மயோகம், பத்தி யோகம், ஞானயோகம் என்ற மூன்று யோகங்களையும், அதை அடுத்துள்ள இரு சாளரங்கள் பாசஞானம் பசுஞானம் என்ற இரு ஞானங்களையும் உணர்த்துகின்றன.

(4) அகவல் மண்டபத்தின் இரு பக்கங்களில் கிழக்கும் மேற்கும் உள்ள வாயில்கள் பரஞானத்தையும் அபரஞானத்தையும் அறிவிக்கின்றன.

(5) அகவல் மண்டபத்திலேயுள்ள நான்கு சாளரங்களும் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடுதல் என்ற நான்கின் வழியாக உட்பொருளை உணர வேண்டும் என்று உணர்த்துகின்றன.

(6) அதனை அடுத்துள்ள திருமண்டபத்தில் மேற்புறம் விளங்குவது சிற்சபை (வெள்ளியம்பலம்), கீழ்புறத்தில் விளங்குவது பொற்சபை (பொன்னம்பலம்) வடபுறம் தென்முகமாகத் திகழ்வது ஞானசபை (அறிவு மன்றம்) என்க.

(7) ஞானசபையைச் சூழ்ந்துள்ள நீராழிப்பத்தி என்ற பிராகாரத்தில் உள்ள இருபத்திரண்டு வளைவுகளும், அதனையடுத்து இருபுறத்தும் உள்ள பக்க வழிகள் இரண்டுசேர்ந்த இருபத்து நான்கையும் ஆன்மதத்துவம் இருபத்துநான்கு என அறிக.

மண் நீர் தீ - காற்று வெளி என்னும் பூதங்கள் ஐந்து. சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் தன்மாத்திரைகள் ஐந்து. மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்து. வாக்கு பாணி பாதம் பாயு உபத்தம் என்னும் கன்மேந்திரியங்கள் ஐந்து. மனம் புத்தி அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் மூன்று. குணம் ஒன்று. ஆக ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கு.

(8) நீராழிப் பத்தியில் உள்ளடக்கியுள்ள ஏழு வாயில்களும் வித்தியா தத்துவங்கள் ஏழையுங் குறிக்கின்றன.

வித்தியா தத்துவங்கள் என்பன, காலம் நியதி கலை வித்தை அராகம் புருடன் மூலப்பகுதி என்பனவாம்.

(9) ஞானசபையில் தென்புறத்துள்ள கண்ணாடிக் கதவுகளுடன் கூடிய மூன்று வாயில்கள், ஞாயிறு திங்கள் நெருப்பு என்ற மூன்று விழிகளை விளக்குகின்றன.

(10) அதன் படிகள் ஐந்தும் நமசிவாய என்ற ஐந்தெழுத்தென உணர்க.

(11) பிராகாரத்துள்ள சாளரம் பதினான்கும் வித்தைகள் பதினான்கு என அறிக; அல்லது சாத்திரம் பதினான்கு என்க.

(12) ஞானசபையில் இடையில் உள்ளவை பன்னிரண்டு மெய்கண்ட சூத்திரங்களாகும்.

(13) ஞானசபையின் நடுவேயுள்ள அதிட்டான பீடத்தின் தென்திசையில் உள்ள ஐந்து படிகளும் சிவதத்துவங்கள் ஐந்தையும் உணர்த்தும். அவையாவன: சிவம் சத்தி சதாசிவம் ஈசுரம் சுத்தவித்தை. மேற்கு கிழக்கு வடக்கு கீழ்நோக்கியுள்ள திருக்களிற்றுப்படிகளாகிய ஐந்து ஐந்து வீதமுள்ள படிகள், சூக்கும பஞ்சாக்கரம், காரண பஞ்சாக்கரம், மகாகாரண பஞ்சாக்கரம், முத்தி பஞ்சாக்கரம் என்க.

(14) அதிட்டான பீடத்திற்கு இடையேயுள்ள நாற்கால் மண்டபம் சோதி ஞானபீடமாகும்.

(15) சோதிஞான பீடத்தின் நான்கு படிகளும், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்களாகும். அதன் வழியேறி அருட்பெருஞ்சோதியை அடைதல் வேண்டும்.

(16) சோதி ஞான பீடத்தின்மீது உள்ள நான்கு தூண்களும் ஞானத்தின் சரியை, ஞானத்திற் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என்ற ஞான பாதங்களாகும்.

(17) அதன் வடதிசையில் உள்ள ஓங்கார வளைவுக்கு இடையில் ஞானவெளியில் அருட்பெருஞ்சோதி விளங்குகின்றது.

(16) அதனை முறையே, கறுப்பு நீலம் பச்சை சிவப்பு மஞ்சள் வெண்மை என்று மறைத்துள்ள ஆறு திரைகளும், ஆணவம் கன்மம் அசுத்தமாயை கலப்புமாயை, சுத்த மாயை, திரோபவம் என்ற ஆறுமாகும். மேற் கூறிய ஆறு மறைப்புகளும் விலகியவுடன் பிரணவ வட்டத்துள் ஞான பீடத்தின்மீது விளங்கும் தனிப் பெருங்கருணையுடன் கூடிய அருட்பெருஞ் சோதி காட்சியளிக்கின்றது.

அன்புத் தளையாலும், அறிவு மயமாகிய பிரணவத்துடன் கூடிய ஐம்பத்திரண்டுஅட்சரங் களாகிய மாத்ருகா மந்திரங்களாலும் சூழப் பட்டு, கர்மயோகம், பத்தியோகம், ஞான யோகங்களின் வழியாகவும், பரஞான அபர ஞான வழியாகவும், பாசஞான பசுஞானங் களையறிந்து உட்சென்று, கேட்டு, சிந்தித்து, தெளிந்து, நிட்டைகூடிச் சிற்சபை பொற்சபை இரண்டையுந் தரிசித்து, ஞானசபையை அடை வதற்குத் தகுதி பெற்று, சோம சூரிய அக்கினி என்ற மூன்று கண்களும் திறக்கப் பெற்று, தூல பஞ்சாக்கர வழியேறி, ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கையும், வித்யா தத்துவங்கள் ஏழினையும், சிவதத்துவங்கள் ஐந்தையும் ஆக ஆறாறு முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து (''ஆறாறையும் நீத்ததன் மேல் நிலை யைப் பேறா அடியேன் பெறுமாறுளதோ'' என்றபடி), பதினான்கு வித்தைகளுக்கு இடை யிலுள்ள பன்னிரு மெய்கண்ட சூத்திரங்களை உணர்ந்து, அதன் பயனாகிய சூக்கும, காரண, மகாகாரண,முத்தி பஞ்சாக்கரங்களையுணர்ந்து சரியை, கிரியை, யோக ஞானமாகிய படிகள் மீது ஏறி, ஞானத்தில் சரியை, ஞானத்திற் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் கைவரப் பெற்று, ஆணவம் கன்மம் அசுத்தமாயை மிஸ்ரமாயை சுத்தமாயை திரோதானம் என்று ஆறு மறைப்புகளையும் அகற்றி, பிரணவ அருள் ஞானபீடத்தின்மீது தனிப்பெருங் கருணையுடன் கூடிய அருட் பெருஞ்சோதியைத் தரிசிக்க வேண்டும்.

எட்டுத்திசையும் பதினாறு கோணமும் எங்கும் ஒன்றாய்
முட்டித் ததும்பி முளைத்தோங்கு சோதியை
—பட்டினத்தடிகள்

இந்தத் தத்துவ இரகசியத்தை மன் பதைகள் அனைவரும் அறிந்து உய்யும் பொருட் டுத் தத்துவாதீதப் பொருளையறிந்த தயாநிதி யாகிய வள்ளற்பெருமானால் வடலூர்பெருப் வெளியிலே ஒப்பற்ற உண்மைக் கருணையால் இந்த சத்திய ஞான சபையை நிறுவியருளி னார்கள்.

இன்னும் சத்திய ஞான சபையில் பலப்பல நுட்பங்கள் உள. எழுத்து மூலமாக எவ்வளவு முடியுமோ அவ்வளவுதானே விளக்க முடியும்? கூர்த்த மெய்ஞ்ஞானத்தினால் கூர்ந்து கூர்ந்து சிந்தித்து, குருவருளாலும் திருவருளாலும் உணர்தற்பாலனவாகும்.

ஒரு பொருளைப் பலர் பல பார்வையாகப் பார்க்கின்றார்கள். ஒரு பெண்மணியைத் தந்தை பார்க்கின்ற பார்வை வேறு ; உடன் பிறந்தார் பார்க்கின்ற பார்வை வேறு; கணவன் பார்க்கின்ற பார்வை வேறு, மகன் பார்க்கின்ற பார்வை வேறு.

ஒரு பொருளைப் பலர் பல நிறக் கண் ணாடிகளை யணிந்து பார்க்கின்றார்கள். நீல நிறக்கண்ணாடியணிந்தவனுக்கு அப்பொருள் நீலநிறமாகவும், பஞ்சை நிறக் கண்ணாடி அணிந்தவனுக்குப் பச்சையாகவும், சிவப்பு நிறக் கண்ணாடி அணிந்தவனுக்குச் சிவப்பாக வும் அப்பொருள் காட்சிதரும். அதுபோல் ஒரு பொருளை யார் யார் என்னென்ன கருத்துடன் காண்பார்களோ அவரவர்கட்கு அப்பொருள் அவ்வவ் வண்ணமாகத் தோன்றும். ஆனால் தூய பளிங்குக் கண்ணாடியணிந்தவனுக்குப் பொருளின் உண்மைக் காட்சி புலனாகும்.

பௌர்ணமியன்று நடு இரவில் ஒரு தனி யிடமாகிய பள்ளத்தில் பற்றற்ற ஞானி ஒருவர் பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்றபடி அமர்ந்திருந்தனர். அவ்வழியே சென்ற கட் குடியன் அவரைக் குடிவெறியால் மயங்கியிருப்ப தாகவும், காமுகன் அவரை ஒரு பெண்ணை எதிர் பார்த்திருப்பதாகவும், கள்வன் அவரைக் களவு புரியக் காத்திருப்பதாகவும், மனைவிக்குப் பயந்தவன் அவரை மனையாளுக்கஞ்சி ஒளிந் திருப்பதாகவும் எண்ணினார்கள். ஆனால் அவ் வழியே சென்ற ஞானி அவரைப் பற்றற்ற பரம ஞானி என்று கண்டு வணங்கிச் சென்றனர்.

இதுபோல் வள்ளற் பெருமானுடைய சத்திய ஞான உணர்ச்சியில் எழுந்த தத்துவா தீதமாகிய சத்திய ஞானசபையையும், பலர் தத்தம் கருத்திற் கிணங்கக் காண்கின்றார்கள். ஆனால் வாய்மையும் தூய்மையும்உடையார்க்கு உண்மை விளங்கும்.

# ஆடவல்லானின் அழகிய செப்புத் திருமேனிகள்

'' கலைமாச் செல்வர் ''

திரு க. சி. கமலையா, சென்னை

—(முற்றொடர்ச்சி)

## புங்கனூர் நடராசர் :

புங்கனூர் நடராசர் செப்புத் திருமேனி திருவாலங்காட்டுச் செப்புத் திருமேனிக்கு ஒத்த எழில் கொழிக்கும் திருமேனியென்றும், சில வகைகளில் அதனினும் சிறப்பு மிக்கது என்றும் கருத்து தெரிவிக்கப்படுகிறது. அத்தோற்றம் கானல் நீரையொக்கும். புங்கனூர்த் திருமேனி யின் உயரம் 78 செ. மீ. அடியிலிருந்து முடி வரை உயரம் 63 செ. மீ. மேலிரண்டு கைகளும் 47 செ. மீ. தள்ளியிருக்கின்றன. ஊன்றிய திருவடியிலிருந்து அவ்விரு கைகளும் ஒரே அளவு உயரத்தில் உள்ளன. முயலகனோ தாமரை மேடையோ இத்திருமேனிக்கு அழகுஊட்டுவதா யில்லை. கால்கள் தொய்வின்றி விறைத்துக் காணப்படுகின்றன. ஊன்றிய திருவடி போது மான அளவு வளையாமல் ஆடும் வேகத்தைக் காட்டவில்லை. அரைக்கால் சட்டைகள் அள வுக்கு மிகைபடக் கவனம் செலுத்தப்பட்டு அழகைக் குலைப்பதாயிருக்கின்றன. இடுப்புக்கு மேலுள்ள பகுதி பார்வையாளரை ஈர்க்கிறது. அங்குகூட ஒரு விரலால் துடியைப் பிடித்திருப்ப தும் அனலேந்திய கையும் உவகையூட்டுவன வாயில்லை. சடைகள் கலைப்பாங்குடன் உள்ளன. எனினும் வேளாங்கண்ணிச் செப்புத் திருமேனியைப் போன்று எழிலுடனும்இயற்கை யாயும் அமைந்துள்ளன என்று சொல்ல முடி யாது. தலையின் இடப்பக்கத்திலுள்ள குறை மதி நிறை பொலிவுடன் கூடியதன்று. பறக் கும் சடையின் இடப்பக்கம் கங்கை காணப்படு கிறது.

புங்கனூர்ச் செப்புத்திருமேனி பற்றி பி. ஆர். சீனிவாசன் கருத்து பின்வருமாறு : ''தலைப்பகுதியும் தும்பிக்கைபோல் தொங்கும் கையும் மிக நேர்த்தியாயமைக்கப்பட்டுள்ளன. முடிமேலுள்ள இரண்டடுக்கு இறகுகள் நேரில் காண்பது போன்றிருக்கின்றன. இரு புறமும் பறக்கும் சடைகள் கலைப் பாங்குடனும், ஒரு புறம் கங்கையும், மறுபுறம் உள்ள வண்ணத் தோற்றமும் சுவையுடன் உள. முகத்தோற்றம் அழகு கொழிக்கிறது, உயிர்த் துடிப்புள்ளது''.

## கொற்றங்குடிக் கூத்தன் :

நாற்பத்தொன்று சுடர் ஒன்றில் ஐந்து தீ நாக்குகளையும் கொண்ட திருவாசியில் கொற்றங்குடிக் கூத்தப் பெருமான் காட்சி யளிக்கின்றான். கி. பி. 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இச்செப்புத் திருமேனியின் உயரம் 132 செ. மீ. தாமரை மேடையின் மேற்பகுதி யிலிருந்து உச்சி வரை உயரம் 114.5 செ. மீ. திருவடியிலிருந்து திருமுடிவரை உயரம் 85 செ. மீ. மேலிரண்டு கைகளும் 65 செ. மீ. தள்ளியிருக்கின்றன. ஊன்றிய திருவடியின் நடுப்பகுதியிலிருந்து மேலிரண்டு கைகளும் 68 செ. மீ. தள்ளியிருக்கின்றன. விரிந்து பரந் தாடும் சடைகள் கண்கொடுத்தவனிதச் செப்புத் திருமேனியில் காணப்படுபவைகளைக் காட்டிலும் பொலிவுறத் தோன்றுகின்றன. கங்கை வலப்பக்கமும் குழவிமதி இடப்பக்கத் துத் தலைமுடியிலும் இருக்கின்றன. விரல் களுக்கிடையில் துடி பிடிக்கப்பட்டிருக்கிறது. ஊன்றிய திருவடியின் முழங்காலில் ஒற்றைச் சதங்கை கட்டப்பட்டிருக்கிறது. ஆடும் பெரு மான் திருவுருவத்துக்கான அமைப்பும் அணி களும் உள. பெரிய அளவுச் செப்புத் திருமேனி யான கொற்றங்குடி நடராசரைத் திருவாலங் காட்டுத் திருமேனியுடன் ஒப்பிட்டு ஆய்தல் பயன்தரும்.

## குன்னியூர்க் குழகன் :

மேடையும் சேர்த்துக் குன்னியூர்ச்செப்புத் திருமேனி 116 செ. மீ. உயரம்; அகலம் 79 செ. மீ. மேலிரண்டு கைகளும் 58 செ. மீ. தள்ளியுள்ளன. அவ்விரண்டு கைகளும் ஊன் றிய திருவடியின் நடுப்பகுதியிலிருந்து 63 செ. மீ. தூரத்திலிருக்கின்றன. பலகையின் மீது படுத்திருக்கும் முயலகனை மிதித்து இறைவன் ஆடுகின்றான். 53 செ. மீ. நீளமும் 29 செ. மீ. அகலமும் 14 செ. மீ. உயரமும் உள்ள நீண்ட சதுரத் தாமரை மேடைக்குள் பலகை பொருந்தி நிற்கிறது. கோயிலின் கரு வறையின் அடிப்பகுதியைப் போன்று தாமரை

மேடை தோற்றமளிக்கிறது. கீழிரண்டு கைகளில் ஒன்று காக்கும் கை; மற்றொன்று வீசிய கை. மேல் வலது கையிலுள்ள தமருகம் பெருவிரலுக்கும் நடுஇரண்டு விரல்களுக்குமிடையே பிடிக்கப்பட்டுள்ளது. வயிற்றைச் சுற்றியுள்ள துணியும் காக்கும் முன்கையிலிருந்த பாம்பும் உடைந்து போயின. மேல் இடதுகையிலிருந்த அனலும் உடைந்து போயிற்று. முட்டை வடிவிலுள்ள திருவாசியில் 21 சுடர்களும், உச்சியிலுள்ள சுடரில் ஐந்து தீ நாக்குகளும் மற்றைய சுடர்கள் ஒவ்வொன்றிலும் மூன்று தீ நாக்குகளும் உள்ளன. முகம் உருண்டை. கவர்ச்சியானஅழகியதிருமேனியல்லவெனினும், உடைந்து போன - அல்லது விட்டுப்போன - அல்லது இப்போது காணப்படுகின்ற கூறுகளை வைத்து நோக்குதற்குரிய தகுதி வாய்ந்தது என்று கூறலாம்; குன்னியூர்க் கூத்தப்பெருமான் செப்புத் திருமேனி பெரிய அளவுத் திருமேனியும்கூட.

## அருங்காட்சியகத்து ஆலங்காட்டடிகள் :

சென்னை அருங்காட்சியகத்திலும் மற்றும் உலகின் பல அருங்காட்சியகங்களிலும் தமிழ்நாட்டுக் கோயில்களிலும் இருக்கின்ற நடராசர் செப்புத் திருமேனிகளுள் தலையாய சிறப்பு, திருவாலங்காட்டிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்டுச் சென்னை அருங்காட்சியகத்தை அணிசெய்யும் செப்புத் திருமேனியையே சாரும். இத் திருமேனி, ''மனித உருவில் சற்று அரைப்பங்குக்கும் பெரியதாகும். சிலந்திவலை நூலைப்போன்று மிருதுவானதும் நேர்த்தியானதுமான உடலுறுப்புகள் திருவாலங்காட்டுச் செப்புத் திருமேனிக்கு உயிர்த்துடிப்பும் எழிலும் கொழிக்கும் தோற்றத்தை அளிக்கின்றன. வேளாங்கண்ணித் திருமேனியை அதனுடன் ஒப்புநோக்கின், வேளாங்கண்ணித் திருமேனிக்கு அத்தகைய பொலிவும் இல்லை; சற்றுப் பருமனும் கூட.''

பார்க்கக் கொடுத்து வைத்தவர் நெஞ்சங்களில் மகிழ்ச்சி ஊற்றைச் சுரக்க வைக்கும் மாமணியன்றோ திருவாலங்காட்டுச் செப்புத் திருமேனி! கலை நீர்மை ததும்பாநிறைகுடமன்றோ ஆடும்பெருமான் அழகுருவம். அதன் மாண்பும் மிடுக்கும் எழிலும் ஏற்றமும் சொல்லொணாக் கவிதையன்றோ. ஆடவல்லான் முல்லைப் புன்னகை கொப்புளிக்கும்—வற்றா ஊற்றையொக்கும் — உறுப்புகளின் செழுமையிலும் உடற்கூறு நூலுக்கேற்ப முழுமையிலும் காண்போரைச் சொக்க வைக்கும் திருமேனி. ஆடும் அழகன் உருவம் பிரணவ வடிவமான பீடத்தில் அமைந்துள்ளது. ஆன்மாக்கள் இளைப்பாறும் ஊன்றிய திருவடியிலும், அருள் பாலிக்கும் தூக்கிய திருவடியிலும், சிலம்பைக் காணலாம். ஆடிய காலையும் அதிற் சிலம்போசையையும் பார்க்கவும் கேட்கவும் அன்பர்களை அழைக்கின்றான் இறைவன். 'பாதச் சிலம்பொலி காட்டிய பண்பு' என்பார் மாணிக்க வாசகர்.

திருவாலங்காட்டுச் செப்புத் திருமேனியின் மாண்பு அதன் எளிமையில் உளது.'அருமையில் எளிய அழகே போற்றி' என்றும் வணங்குவார் வாதவூரர். காக்கும் கையும் மார்பைக் கடந்து குறுக்கே செல்லும் வீசிய கையும் எடுப்பாய் இருக்கின்றன. அத்தகைய அமைப்பு, பார்வையாளர் ஆண்டவன் ஆடும் திறனைக் காணவும், சுழன்றாட இறைவன் இடுப்பை வளைத்துள்ள பாங்கை நுகரவும், உதவுகிறது. வானோரும் பார்த்துப் பரவசமடையும் கண்ணுக்கினிய வண்ணத்தோற்றம். வயிற்றைச் சுற்றி வளைந்தாடிப் பறக்கும் கச்சை ஒடிந்து விட்டது. அனலேந்தும் மேல் இடது கை வலப்பக்கமுள்ள இரு கால்களுக்கும் மூன்று கைகளுக்கும் ஈடுகொடுக்கும் திறனைச் சொற்களில் வடித்துக் காட்ட முடியாது. துடியைப் பிடித்திருப்பதுவே பாவலரைக் காவியம் படைக்கத் தூண்டும். உருண்டையான முகத்தில் இறைவன் இடது காதில் தோடணிந்திருக்கிறான். ''தலையைச் சுற்றியுள்ள பட்டை எளிமையாய் அமைந்துள்ளது. இந்தச் செப்புத் திருமேனியின் சிறப்பு அதனுடைய தலையலங்காரக் கோலம்''. ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரை இத்திருமேனியின் உயரம் 117 செ. மீ. மேலிரண்டு உள்ளங்கைகளும் ஊன்றிய திருவடியின் நடுவிலிருந்து 90 செ. மீ. தள்ளியுள்ளன. அக்கைகளும் ஒன்றுக்கு மற்றொன்று அதே அளவில் தள்ளியிருக்கின்றன. தலையும் தலையலங்காரத்தின் மேலுள்ள படமெடுத்த பாம்பும் குன்றா அழகுக் குறைமதியும் செப்புத் திருமேனியின் வடிவை அழகுக்கு அழகு செய்வது போலுள்ளன. உலகப் புகழ்பெற்ற சிலைவடிக்கும் கலைஞர் அகஸ்த் ரொதீன் பிரெஞ்சு மொழியில் போற்றிப் பரவும் வசன கவிதை, திருவாலங்காட்டு ஆடும் கூத்தன் செப்புத் திருமேனியின் கலைச் சிறப்பைக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றயும் ஐம்புலன்களும் மகிழ உதவும்.

''காற்றின் அசைவினால் உந்தப்பட்டு வாழ்க்கை என்ற நீரோட்டமும் விண்ணும் வெயிலும் - ஏன், உயிரும்கூட ஓவற நிரம்பி வழிகின்றன. கீழைநாட்டுக்கலை இவ்வாறு நமக்குத் தோற்றமளிக்கிறது. மனித உடம்பின் தெய்விக அழகை மிகப் பழைய காலத்திலேயே நுணுகி ஆய்ந்து கற்றுத் தெரிந்திருந்தார்கள். மனிதன் தோன்றியபொழுது இருந்ததுபோலவே இருந்தான் என்பது மட்டுமல்ல. நம்முடைய மனித உருவில் மாற்றம் ஏதும் இல்லையென்பதை மனத்தில் கொள்ள வேண்டும். ஆனால் இன்றைய அடிமைத்தனம் ஒவ்வொரு பொருளிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொண்டதாக நம்புகிறது. நாம் வியக்கின்றோம். ஆனால் சுவைபோன சுவடு தெரியவில்லை. இத்தலையாய படைப்பில் நிழல் மெதுவாக ஈடுபட்டு இதுகாறும் தங்கியிருந்த அவ்விருளிலிருந்து எழும் கடும் நோயை நம்மீது மாயமாய்த் தோயவிடுகிறது. வயிற்றிலிருந்து மார்புகளைப் பிரிக்கும் இவ்விரண்டு கைகளும் அருமையினும் அருமை. உண்மையில் மெடிசிஸ் வீனஸ் கைகளால் தன் வனப்பைப் பாதுகாக்கின்ற குறிப்புக்கு எடுப்பிலும் ஏற்றத்திலும் இக்கைகள் காட்டும் குறிப்பு எள்ளளவும் குறையாது. நீண்ட சதைப் படைப்புகளைக் கொண்ட

கால்கள் காண்பவரை ஏங்க வைக்கும் புரியாப் புதிர். நிழலின் பின்னணி துடைகளில் படும் ஒளியினால் மேலும் பொலிவுறுகிறது. இத் தோற்ற விமைப்பு கலைஞர்களால் வெகுவாகக் கையாளப்பட்டாலும், இங்கே வழக்கத்திற்கு மாறாயுள்ளது.

இயற்கை இங்குள்ளது; எனினும் எட்டிப் பிடிக்க முடியாதது. எல்லாவற்றுக்கும் மேலாக எவரும் கண்டறியாத ஒன்று இருப்பதாகத் தோன்றுகிறது. அளக்க முடியா ஆழங்கள். வாழ்க்கையின் ஆழம். நேர்த்தியில் அழகு தவழ் கிறது. நேர்த்திக்கும் மேலாக மெச்சு புகழ் உருவ அமைப்பு. ஒவ்வொன்றும் எல்லை கடந்து நிற்கிறது. இதை மென்மை என்கின்ற னர். ஆனால் இது வலிமை மிக்க மென்மை. இதை எடுத்தியம்பச் சொற்களில்லை. இன்பத் தின் தேக்கம் போன்ற இதழ்கள்; ஒத்த சிறப் புடைய துடிக்கும் நாசிகளின் எல்லைகளைக் கொண்டவை. பாம்பு போன்று வளைந்திருக் கும் வாய், ஈரம் கசியும் மகிழ்ச்சி அலைகளுடன் உறவாடுகிறது. மூடியும் பாதி துருத்திக் கொண்டிருக்கும் கண்கள்; கண்களின் வனப்பு மிக்க அமைதி; அமைதியான பார்வை; அவ் வமைதியின் மோன ஆனந்தம்; வியத்தகு நாசுக்குடன் மாணிக்கக் கண்ணாடிபோல் அமைந்தவை இக்கண்கள். மென்மையான எண்ணங்களின் உறைவிடம்போல் தோன்றும் வாய்; உணர்ச்சிக் குமிழிகளின் எரிமலையும்கூட. இவ்வாயின் வழியே தேனீக்கள் உள்ளே நுழை வதும் வெளியே வருவதும்போல் ஊழிக்காலம் வரை உயிர் உள்ளே போவதும் வெளியே வருவதுமாய் இருக்கிறது. இனிமையான மணங்கமழ் மூச்சு''.

ஆலங்காட்டடிகளின் செப்புத் திருமேனி யைக் காணத்திருத்தலப் பயணம் மேற்கொள் கின்றனர். உலகெங்கணுமுள்ள கலையன்பர்கள் நடராசச் செப்புத் திருமேனிகள் வடிக்கப்பட்ட காலத்தை வரையறுக்க ஆழ்ந்த ஆய்வுதேவை. பல நூற்றுக்கணக்கான நடராசத் திருமேனிகள் குறிப்பிடத்தக்க முறையில் அமையத்தொடங் கின காலத்தைக் கணக்கிடவும் ஆய்வு உதவும். திருவாசியின் வடிவம். சுடர்களின் எண்ணிக்கை, சுடரின் தீ நாக்குகள் பற்றிய விவரம், சோடனை, அணிகள், உடை, கங்கை உடை மையும் இல்லாமையும், சடையலங்காரம் ஆகி யவை, காலத்தை வரையறுக்க வழி கோலும்.

## திரு. வி. க. வும், புறநானூறும்

'' இங்கே எனக்கு ஒரு பாட்டு நினைவுக்கு வருகிறது. அது நக்கீரர் தமிழ்; புறநானூற்றிலிருப்பது. அதைச் சொல்கிறேன் :

தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி,
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்;
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கும்;
உண்பது நாழி,யுடுப்பவை யிரண்டே ;
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே;
செல்வத்துப் பயனே யீதல்,
துய்ப்பேம் எனினே தப்புந பலவே!

செல்வப் பெருக்கு ஒரு பக்கம்; ஏழ்மை இன்னொரு பக்கம். ஏழ்மை என்ன சொல்கிறது? ' ஏ! பெருக்கே! உனக்கும் எனக்கும் இயற்கைப் படைப்பில் வேற்றுமை இல்லை ; இயற்கைத் தேவையும் ஒன்றே. நீ எனக்கு அறவழியில் பங்காதல் வேண்டும் ; யானே கொள்ளப் புகுந்தால் நீ தப்ப மாட்டாய்' என்பது பாட்டின் உட்பொருள். இதிலே ஏகாதிபத்தியம் இருக்கிறது ; சமதர்மம் இருக்கிறது ; அறப்புரட்சி இருக்கிறது; மறப்புரட்சியும் இருக்கிறது. இது தமிழ் ; இது தமிழ்ப்பாட்டு ! இப்பாட்டு இன்று பிறந்ததன்று; நேற்றுப் பிறந்ததன்று. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. இது ஷேக்ஸ்பியருக்கும் ஷெல்லிக்கும் நூறாம் பாட்டன் காலத்தில் பிறந்தது. எத்துணை அருமை ! எத்துணை இனிமை ! எத்தகைய கருத்துச் செறிவு ! தெளிவு !''

—திரு. வி. க. சொற்பொழிவு.

# திருமால்நெறித் திருத்தலங்கள்

[ ந. ரா. முருகவேள், M.A., M.O.L. ]

## முன்னுரை :

நமது இந்தியப் பாரததேசம் உலகிலேயே மிகவும் ஒப்புயர்வற்ற சிறப்புடையது. பிற தேசங்களை நோக்க, நமது இந்தியப் பாரத நாடு மிகவும் புண்ணிய பூமியாகும். தொன்று தொட்டுப் பெரியவர்கள் பலரும், இதனை உணர்ந்து நன்கு வற்புறுத்தியிருக்கின்றார்கள். வினைப் பயன்களை நுகரவும், இறையருளைப் பெறவும், பெருந்தகைமை, கொடைவண்மை, தூய்மை, அமைதி, உள்ளொளி, ஆன்மிகம் முதலிய உயரிய குணநலங்களைப் பெறவும், இப்புண்ணிய பூமியிற் பிறப்பது பெருந்துணை புரிகின்றது. எனவே, தேவர்களும்கூட இப் புண்ணிய பூமியில் வந்து பிறக்க விரும்புகின்ற னர் என்கின்றார் மணிவாசகர். இங்ஙனம் விண்ணுலகத்துத் தேவர்களும் மண்ணுலகிற் போந்து வழிபட்டுள்ள தலங்கள் எண்ணில் லாதன பல, நம் பாரத தேசத்திலும் தமிழ் நாட்டிலும் உள்ளன.

அத்தெய்வத் திருத்தலங்களின் பெருமைகளை அறிந்து கொள்ளவும், அங்கெல்லாம் சென்று கண்டு இறைவனைத் தரிசித்து வழி பட்டு உய்யவும், நாம் முயலுதல் வேண்டும். தெய்வத் திருத்தலங்களின் சிறப்பும், தல வழிபாட்டின் மேன்மையும் நாம் பெரிதும் உணர்ந்து போற்றுதற்குரியன. ஆழ்வார்களும், நாயன்மார்களும் தலயாத்திரை செய்து, தலங்கள்தோறும் சென்று, இறைவனைப் பாடிப் பரவி வழிபட்டு மகிழ்ந்திருக்கின்றனர். அத்தகைய அருளாளர்களும் ஞானிகளுமே, தலயாத்திரையையும், தலவழிபாட்டையும் இன்றியமையாப் பெருஞ் சிறப்பியற் கடமை யாகக் கருதிக் கடைப்பிடித்திருக்கின்றனர் என் றால், நம்மனோர்க்கெல்லாம் தலவழிபாடு எவ்வளவு முதன்மை வாய்ந்தது என்பதனைச் சொல்ல வேண்டுவதில்லை.

## தலயாத்திரை :

தலயாத்திரையும் வழிபாடும் மேற்கொள் ளுவதனால், நாம் எய்தும் பல்வகை நலங்களுக்கு அளவேயில்லை. துன்பமும் துயரமும் நிறைந்த இவ்வுலகில், நம்முடைய குறுகிய வாழ்நாளில் நாம் அடையக்கூடிய ஏதோ ஒரு சில இன்பங் களில் உண்மையானதும், உயர்ந்ததும், ஒப் புயர்வற்றதும், தலயாத்திரைகளால் பெறும் இன்பமே எனலாம். தலயாத்திரையால் நாம் நம் கவலைகளை மறக்கின்றோம். நம் மாசுகள் அகன்று ஓரளவேனும் புனிதம் அடைகின்றோம். காணாதஇடங்களையும், காட்சிகளையும்கண்டு களிக்கின்றோம். கேளாத செய்திகள் பலவும் கேட்டுணர்ந்து, கிளர்ச்சியும் வளர்ச்சியும் பெறு கின்றோம்.

நாட்டின் பல பகுதிகளில் உள்ள பல மக்களைக் கண்டு பழகி, நாட்டு வளப்பங்களை அறிந்து கொள்கின்றோம். தலவழிபாட்டால் நம் உள்ளமும் உணர்வும், புத்துணர்ச்சியும் எழுச்சியும் பெறுகின்றன. நம் உள்ளம் விரி வடைகின்றது. உணர்வு பண்படுகின்றது. இறையருளும் பக்தியும் படிமுறையே நம்மிடம் வளர்ந்து ஓங்குகின்றன. நாம் நம் முன்னோர் களுடைய அருமை பெருமைகளையும், அழகிய வரலாறுகளையும், அரும்பெரும் செயல்களை யும் கண்டும் உணர்ந்தும் களிப்புறுகின்றோம்.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் போன்ற சான்றோர்கள் பாடிய சிறந்த திருத்தலங் களுக்குச் சென்று தரிசிக்குங்கால், நமக்கும் அவர்களின் அருளாற்றல் ஓரளவு பதிகின்றது. காலமும்இடமும்வேறுபட்டுக்கடந்திருப்பினும், நாம் அவர்களோடு மானதத் தொடர்பு கொள்ளுகின்றோம். அவர்களை நாம் நேரே காண இயலாவிட்டாலும், அவர்களின் அருள் தொடர்பு பெற்ற தலங்களையும் கோயில்களை யும் காணுகின்றபோது, ஒருவகையில் அவர் களை நேரே காண்பது போன்ற உணர்ச்சியும் மகிழ்ச்சியும், நமக்கு ஏற்படுகின்றன.

மனிதன் ஒருவன் எய்துதற்காம்
வாழ்வின் இன்பம் பலவற்றுள்,
புனித நமது பாரதத்திற்
பொலியும் திவ்ய தேசங்கள்,
எனும்நற் றலங்கள் கண்டுதொழும்
இன்பிற் சிறந்த தொன்றில்லை;
நனிநன் றுயர்ந்த அப்பேற்றை
நலமே அடைய முயன்றுய்வோம்! (1)

பொங்குநற் பக்தி வெள்ளப்
புணரியில் திளைத்து மூழ்கி,
நன்குயர் ஆழ்வார் கள்தாம்
நலமிகப் பணிந்தி றைஞ்சி,
மங்களா சாசனம் செய்
வைணவத் தலங்கள் யாவும்,
இங்குநாம் கண்டு போற்றல்
இனியநற் கடமை யாகும். (2)

—ந.ரா.மு.

திவ்விய தேச யாத்திரை செய்தலின் சிறப்பைத்திருமங்கையாழ்வார் ''பதியே பரவித் தொழும் தொண்டர் தமக்குக் கதியே'' என்பதனால் இனிது விளக்குகின்றார். ''கண்டியூர் அரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லை என்று மண்டினார் உய்யலல்லால் மற்றையார்க்கு உய்யலாமே?'' என்பதனால், திவ்விய தேசங்களில் ஈடுபடாதவர்களுக்கு உய்யும் விரகு இல்லை என்றும், அவ்வாழ்வார் அருளிச் செய்கின்றார்.

ஆதலின், பொய்கையாழ்வார் முதலாகத் திருமங்கையாழ்வார் முடிவாக உள்ள ஆழ்வார்கள் பதின்மரும், பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்கொடியான ஆண்டாளும் பாடிய திவ்வியப் பிரபந்தங்களில் மங்களா சாசனம் செய்யப் பெற்றுள்ள நூற்றெட்டுத் திவ்விய தேசங்கள் பற்றிய சில குறிப்புகள், இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

## தொண்டை நாடு 22

### 1. திருக்கச்சி அத்தியூர் :

இது செங்கற்பட்டு - அரக்கோணம் இருப்புப் பாதையில் உள்ள காஞ்சிபுரம் என்னும் நகரத்தின் ஒரு பகுதியாகிய, சிறிய காஞ்சிபுரத்தில் உள்ள வரதராசப் பெருமாள்கோயில். இங்கு உள்ள எம்பெருமானுக்குத் தேவராசன், தேவப்பெருமாள், பேரருளாளன் முதலிய பெயர்களும் வழங்கும். மேற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம், பெருந்தேவித் தாயார், புண்ணியகோடி விமானம், அனந்த தீர்த்தம், வேகவதி நதி. பிருகு, நாரதர், பிரம்மா, அனந்தாழ்வான், கஜேந்திரன் முதலியவர்களுக்குப் பிரத்தியட்சம். பாசுரங்களில் பொதுவாகக் கச்சி என்று குறிக்கப்படும் இடங்களில் இத்தலமே கொள்ளப்படும். கோயில் (திருவரங்கம்), திருமலை (திருவேங்கடம்), பெருமாள்கோயில் (அத்தியூர்) என்னும் முக்கிய வைணவத் தலங்கள் மூன்றனுள், இஃது ஒன்று. ஐராவதம் என்னும் யானையே மலைவடிவம் கொண்டு இங்குப் பெருமாளைத் தாங்கியதனால், இது அத்திகிரி என்றும், அத்தியூர் என்றும் பெயர் பெற்றது. இந்த அத்திகிரியை உத்தரவேதியாகக் கொண்டு பிரமதேவர் அசுவமேதயாகம் செய்ய, அதில் தோன்றிய புண்ணியகோடி விமானத்தில் பெருமாள் எழுந்தருளி வரம் கொடுத்தபடியால், வரதராசப் பெருமாள் என்ற சிறப்புக் காரணப்பெயர் ஏற்பட்டது. அத்திகிரியின் அடிவாரத்தில் அழகிய சிங்கப் பெருமாள் எழுந்தருளி இருக்கின்றார். மிகவும் சிறந்த பெரிய புகழ் பெற்றகோயில்.

''அத்தியூ ரான்புள்ளை யூர்வான் அணிமணியின்
துத்திசேர் நாகத்தின் மேல்துயில்வான்-முத்தீ
மறையாவான், மாகடல்நஞ் சுண்டான்
இறையாவான் எங்கள் பிரான்'' [தனக்கும்

—பூதத்தாழ்வார்.

சிறந்தஎன் சிந்தையும் செங்கண் அரவும்
நிறைந்தசீர் நீள்கச்சி யுள்ளும்-உறைந்ததுவும்
வேங்கடமும் வெஃகாவும் வேளுக்கைப்
தாங்கடவார் தண்துழா யார். [பாடியுமே

—பேயாழ்வார்

### 2. திரு அட்டபுயகரம் :

இது செங்கற்பட்டு - அரக்கோணம் கிளை இருப்புப் பாதையில், காஞ்சிபுரம், நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவில் ஆடிசன்பேட்டைத் தேரடிக்கு அருகில் உள்ளது. ஆதிகேசவப் பெருமாள், மேற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், அலர்மேல் மங்கைத் தாயார், ககன ஆகிருதி விமானம், கசேந்திர புஷ்கரிணி, சரபன் என்னும் அசுரனுடன் போர் செய்யப் பெருமாள் அட்ட புயங்களைத் தரித்தகோலம். கசேந்திரனுக்குப் பிரத்தியட்சம், பேயாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாசனம். அஷ்டபுஜம், அஷ்டபுயங்கம் எனவும் வழங்கும்.

தொட்ட படைஎட்டும்தோலாதவென்றியான்
அட்ட புயகரத்தான் அஞ்ஞான்று-குட்டத்துக்
கொள்முதலை துஞ்சக் குறித்தெறிந்த
தாள்முதலே நங்கட்குச் சார்வு. [சக்கரத்தான்

—பேயாழ்வார்,

### 3. திருத்தண்கா :

இது காஞ்சிபுரம் நிலையத்தில் இருந்து இரண்டுகல் தொலைவில் உள்ளது. விளக்கொளிப் பெருமாள் கோயில்என வழங்கும். ஒருசிலர் விளக்கடிகோயில்' எனத் தவறாக வழங்குவர். விளக்கொளிப் பெருமாள், தீபப் பிரகாசன், திவ்வியப் பிரகாசன். மேற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், மரகதவல்லித் தாயார், ஸ்ரீகர விமானம், சரசுவதி தீர்த்தம், சரசுவதி தேவிக்குப் பிரத்தியட்சம். வேதாந்த தேசிகர் என்னும் வைணவ சமயப் பெருஞ் சான்றோர் திருவவதாரம் செய்த தலம்.

''பொன்னை மாமணியை ஆணி ஆர்ந்ததோர்
மின்னை வேங்கடத் துச்சியிற் கண்டுபோய்,
என்னை ஆளுடை ஈசனை எம்பிரான்
தன்னை, யாம் சென்று காண்டும் தண்காவிலே

### 4. திருவேளுக்கை :

இது காஞ்சிபுரம் நிலையத்தில் இருந்து இரண்டு கல் தொலைவில், ஓர் ஏரியின் நடுவில் அமைந்து உள்ளது. ''வேள் இருக்கை'' என்னும் இரு சொற்கள் வேளுக்கையென மருவியது. வேள்-விருப்பம். இறைவன் விரும்பி எழுந்தருளி இருக்கும் இடம் என்பது பொருள். முகுந்தநாயகர் கோயில் என வழங்கும். கிழக்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம். கனக விமானம், கனகதீர்த்தம், முசுகுந்த அரசனுக்கும் பிருகுமுனிவருக்கும் பிரத்தியட்சம். பேயாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

''மன்னும் மதிட்கச்சி வேளுக்கை ஆளரியை
மன்னிய பாடகத்தெம் மைந்தனை''

—திருமங்கையாழ்வார்

## 5. திருப்பாடகம் :

இது பெரிய காஞ்சிபுரத்தில் உள்ளது. பாண்டவ தூதர் கோயில் என வழங்கும். கண்ணபிரான் பாண்டவர்கள் பொருட்டுத் துரியோதனனிடம் அத்தினாபுரிக்குத் தூது சென்றபோது, அவன் வஞ்சகமாக அமைத்த ஆசனத்தில் இருந்து விசுவரூபம் எடுத்த நிலையில், மிகவும்பெருமை தோன்ற இருக்கும் தலம். பாடு-பெருமை, பாடு அகம்-பாடகம். பாண்டவ தூதர்கிழக்கே, திருமுக மண்டலம், வீற்றிருக்கும் கோலம், உருக்குமிணி, சத்தியபாமை, பத்திர விமானம். மச்சதீர்த்தம், ஜனமேஜய மகாராஜனுக்கும், அரீத மாமுனிக்கும் பிரத்தியட்சம். பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசானம்.

கல்லார் மதிள்சூழ் கச்சி
நகருள் நச்சிப் பாடகத்துள்
எல்லா உலகும் வணங்க
இருந்த அம்மான் இலங்கைக்கோன்
வல்லாள் ஆகம் வில்லால்
முனிந்த எந்தை விபீடணற்கு
நல்லா னுடைய நாமம்
சொல்லில் நமோ நாராயணமே

— திருமங்கையாழ்வார்

## 6. திருநீரகம் :

இது காஞ்சிபுரத்தில் உள்ளது. ஜகதீசப் பெருமாள் சந்நிதியென வழங்கும். ஜகதீசன், கிழக்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம். நிலமங்கைவல்லி நாச்சியார், ஜகதீச விமானம், அக்குரூர தீர்த்தம், அக்குரூரர்க்குப் பிரத்தியட்சம். இது உலகளந்த பெருமாள் கோயிலின் உள்ளே உள்ள திவ்விய தேசங்களுள் ஒன்று. என்றும் பதினாறாக நீண்ட ஆயுள் பெற்ற மார்க்கண்டேயர் பிரளயக் காட்சியைக் காண வேண்டித் தவம் புரிந்து அவ்வாறே அருள் பெற்ற சிறப்புடையது.

நீரகத்தாய்! நெடுவரையின் உச்சி மேலாய்!
நிலாத்திங்கள் துண்டத்தாய்! நிறைந்தகச்சி
ஊரகத்தாய்! ஒண்துறைநீர் வெஃகா உள்ளாய்!
உள்ளுவார் உள்ளத்தாய்! உலகம்ஏத்தும்
காரகத்தாய்! கார்வானத் துள்ளாய்! கள்வா!
காமருபூங் காவிரியின் தென்பால்மன்னும்
பேரகத்தாய்! பேராதென் நெஞ்சின் உள்ளாய்!
பெருமான்உன் திருவடியே பேணினேனே!

—திருமங்கையாழ்வார்

## 7. நிலாத் திங்கள் துண்டம் :

இது காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் கோயிலில் உள்ளது. 'நிலாத் திங்கள் துண்டத்தான்' எனத் திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளது. மேற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம். நேரொருவர் இல்லாவல்லித் தாயார். புருஷசூக்த விமானம், சந்திர புஷ்கரிணி, சிவனுக்குப் பிரத்தியட்சம்.

## 8. திருவூரகம் :

இது காஞ்சிபுரத்தில் உள்ளது. உலகளந்த பெருமாள் கோயில் என வழங்கும். மாவலிச் சக்கரவர்த்தியிடம் சென்று மூவடி நிலம்கேட்டுத் திரிவிக்கிரம அவதாரம் எடுத்து மூவுலகங்களையும் அளந்த நிலை. உலகளந்த பெருமாள்-மேற்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம், அமுதவல்லி நாச்சியார், ஸ்ரீகரவிமானம், சேட தீர்த்தம். உரகம் என்னும் ஆதிசேடனுக்குப் பிரத்தியட்சம். உரகம் என்னும் சொல்நீண்டு ஊரகம் என மருவியது. ஊரகம் என்னும் இந்த ஒரு திவ்வியதேசத்திலேயே திருநீரகம், திருக்காரகம், திருக்கார்வானம் என்னும், வேறு மூன்று திவ்வியதேசங்களும்கூட இருக்கின்றன. உரகம் - பாம்பு. ஆதிசேடன் வழிபட்ட தலம். உரகம் வழிபட்டு அருள் பெற்றதனால், ஊரகம் என வழங்குகின்றது. இக்கோயிலிலேயே, திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர், பட்டராக இருந்து பணிபுரிந்து வந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

## 9. திருவெஃகா :

இது காஞ்சிபுரத்தில் உள்ளது. யதோக்தகாரி சந்நிதி என வழங்கும். இத்தலத்து எம் பெருமானுக்கு வேகாசேது என்று வடமொழியில் பெயர். அதன் ஒரு பகுதியாகிய 'வேகா' என்பது 'வெஃகா' என்று ஆயிற்று. பெருமாள் சரசுவதி தேவிக்குத் தாம் சொல்லியபடி அருள் செய்தமையினாலும், திருமழிசையாழ்வாரின் சீடராகிய கணிகண்ணர் என்பவர் 'பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்' என்றும், 'பைந்நாகப் பாய் படுத்துக்கொள்' என்றும் சொல்லியவண்ணம் கேட்டு நடந்து அருள்புரிந்தமையினாலும், இவருக்குச் சொன்னவண்ணம் செய்த பெருமாள் எனப் பெயர் ஏற்பட்டது என்பர். பொய்கையாழ்வார் அவதரித்த தலம். பொய்கையாழ்வார், பேயாழ்வார் திருமழிசைவார், திருமங்கையாழ்வார், மங்களாசாசனம்,

நின்றது எந்தை ஊரகத்து,
இருந்தது எந்தை பாடகத்து,
அன்று வெஃகணைக் கிடந்தது,
எண் இலாத முன்எலாம்,
அன்றுநான் பிறந்திலேன்
பிறந்தபின் மறந்திலேன்,
நின்றதும் இருந்ததும்
கிடந்ததும் என் நெஞ்சுளே

## 10. திருக்காரகம் :

இது, காஞ்சிபுரம் உலகளந்தபெருமாள் கோயிலின் தெற்குப் பிராகாரத்தில் உள்ள திவ்வியதேசம். கருணாகரன், தெற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம். பத்மாமணி நாச்சியார். வாமன விமானம், அக்ரூரதீர்த்தம், காரக முனிவர்க்குப் பிரத்தியட்சம், திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

''காரகத்தாய்! கார்வானத் துள்ளாய்! கள்வா!''
(2059)

## 11. திருக்கார்வானம் :

இதுவும் காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் கோயிலுக்குள்ளேயே உள்ளது. நவநீத சோரன். கமலவல்லி நாச்சியார். மேற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், புஷ்பக விமானம், கௌரி தடாகம். பார்வதிக்கும் மகாபுலி அசுவத்தாமன் ஆகியோருக்கும் பிரத்தியட்சம். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

''காரகத்தாய்! கார்வானத் துள்ளாய்! கள்வா''
(2059)

## 12. திருக்கள்வனூர் :

இது காஞ்சிபுரம் காமாட்சியம்மை கோயிலுக்குள் இருக்கின்றது. ஆதிவராகப்பெருமாள். மேற்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம். அபயநாயகி நாச்சியார். வாமனவிமானம், நித்திய புஷ்கரிணி. அசுவத்த நாராயணனுக்குப் பிரத்தியட்சம். பூமியைச் சுருட்டிப் பாதாளத்துக்கு எடுத்துச் சென்ற இரணியாக்கனை வதைத்துப் பூமியை மீட்டருளிய நிலை. திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

''காரகத்தாய்! கார்வானத்தாய்! கள்வா!''
(2059)

## 13. திருப்பவளவண்ணம் :

இது பெரிய காஞ்சிபுரத்தில் உள்ளது. பவள வண்ணப் பெருமாள் - பவளவல்லி நாச்சியார். பிரவாள விமானம் - சக்கரதீர்த்தம்-மேற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம். அசுவினி தேவர்களுக்குப் பிரத்தியட்சம். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம். இக்கோயிலுக்கு அருகில் பச்சைவண்ணர் கோயில் இருக்கின்றது.

பங்கயத்தாய் !பாற்கடலாய்!பாரின் மேலாய்!
பனிவரையின் உச்சியாய்! பவள வண்ணா!
எங்குற்றாய் எம்பெருமான்! உன்னை நாடி
ஏழையேன் இங்ஙனமே உழிதர் கேனே (2060)

## 14. திருப்பரமேச்சுவர விண்ணகரம் :

இது காஞ்சிபுரத்தில் உள்ளது. வைகுண்டப் பெருமாள்கோயில் என வழங்கும். பரமேச்சுவரவர்மன் என்னும் பல்லவ மன்னன் அமைத்த விஷ்ணுகோயில் ஆதலின், இதற்குப் பரமேச்வர விண்ணகரம் என்று பெயராயிற்று. விண்ணகரம் என்பது, விஷ்ணு கிரகம் என்பதன் மரூஉ ஆகும். இக்கோயிலில் பல்லவ வரலாற்றுச் சிற்பங்கள் நிரம்பிக் காணப்படுகின்றன. பரமபதநாதன் - மேற்கே திருமுகமண்டலம் - வீற்றிருந்த கோலம். வைகுந்த வல்லித் தாயார்- அமுத விமானம், கயிரவ தீர்த்தம். மேல்தளத்தில் சயனக்கோலமும், அதற்கு மேல்தளத்தில் நின்ற திருக்கோல உருவமும் உள்ளன. சனகாதிகளுடைய சாபம் அடைந்த வைகுந்த உலகத்தின் துவாரபாலகர்களாகிய சயர், விசயர் என்னும் இருவரும், பல்லவன் வில்லவன் என்னும் அரச குமாரர்களாய் உதித்து அரசாட்சி செய்து வருங்கால், இங்கு மகாவிஷ்ணுவைப் பூசித்து அருள்பெற்றனர் என்பது வரலாறு. திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

பல்லவன் வில்லவன் என்றுலகில்
பலராய்ப்பல வேந்தர் வணங்குகழல்
பல்லவன் மல்லையர்கோன் பணிந்த
பரமேச்சுர விண்ணகரம் அதுவே
(1128-1137)

## 15. திருப்புட்குழி :

இது செங்கற்பட்டு - அரக்கோணம் கிளை இருப்புப்பாதையில், காஞ்சிபுரத்திற்கு ஏழு கல் தொலைவில் உள்ளது. விசயராகவன்-கிழக்கே திருமுகமண்டலம். வீற்றிருந்த திருக்கோலம். மரகதவல்லித் தாயார். விசயகோடி விமானம். சடாயுதீர்த்தம். சீதைப்பிராட்டியை எடுத்துச் சென்ற இராவணனை எதிர்த்து, கழுகரசனாகிய சடாயு சிறகு இழந்து வருந்த, அவ்வழியே சீதையைத் தேடி வந்த இராமபிரான், சடாயுவினால் சீதையை இராவணன் தூக்கிச் சென்ற செய்தியை அறிந்து, சடாயுவைத் தன் கரத்தால், குழிதோண்டித் தகனம் செய்து முத்தியளித்த தலம். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம். 'திருப்புள்' என்பது இங்கு சடாயு என்னும் பறவையைக் குறித்தது.

'அலங்கெழு தடக்கை ஆயன்வாய் ஆம்பற்கு
அழியுமால் என்உள்ளம்!
புலங்கெழு பொருநீர்ப் புட்குழி யாடும்
போதுமோ நீர்மலைக்கு' என்னும்(1115)

## 16. திருநின்றவூர் :

இது சென்னை - அரக்கோணம் இருப்புப் பாதையில் உள்ளது. 'தின்னனூர்' என்று வழங்குகின்றது. பக்தவத்சலம், வருணவரதன், பக்தர்ஆவிப்பெருமாள், கமலவல்லித் தாயார், என்னைப் பெற்ற தாயார். ஸ்ரீநிவாச விமானம். பழைய பாலாறுநதி. கிழக்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம். தருமத்துவசன் என்னும் சூரிய குலத்தரசன் பூசித்துத் தான் இழந்த நாட்டை மீளவும் பெற்றான். வருண தேவனுக்குப் பிரத்தியட்சம், திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

நீண்டஅத்தக் கருமுகிலை, எம்மான் தன்னை
நின்றவூர் நித்திலத்தைத் தொத்தார் சோலை
(1089)

நின்றவூர் நின்ற நித்திலத் தொத்தினை....
கண்ண மங்கையுட் கண்டுகொண்டேனே
(1642)

## 17. திருஎவ்வுளூர் :

சென்னை-அரக்கோணம் இருப்புப் பாதையில் 'திருவள்ளூர்' என்று வழங்கும் இடத்தில் உள்ள திவ்வியதேசம்,. வீரராகவப் பெருமாள், திருஎவ்வுள் கிடந்தான். கிழக்கே திருமுக மண்டலம். சயனத் திருக்கோலம், கனகவல்லித் தாயார் (வசுமதி), விசயகோடி விமானம். இருத்தாபநாசந தீர்த்தம், வீட்சாரண்யம், மட்சிகாரண்யம் (ஈக்காடு), சாலிகோத்திர முனிவருக்குப் பிரத்தியட்சம். பிரத்தியும்நன் என்னும் அரசன் தவம்புரிந்து புத்திரப்

பேறு அடைந்த தலம். சண்டாள சாங்கத்தியம் செய்த கவுசிகன் என்னும் அந்தணன், இந்தத் தலம் அடைந்து, இருத்தாபநாசந தீர்த்தத்தில் மூழ்கி, திருஎவ்வுட் கிடந்தானைச் சேவித்து, நாராயண தியானபரமான மனம் அடைந்து, பரமபதம் சேரப் பெற்றான். அருகில் உள்ள ஈக்காடு என்னும் இடத்தில் இருந்த தரும சேனன் என்னும் அரசனிடம் அவதரித்துக் கனக வல்லித் தாயார் என்று பெயரிடப் பெற்று வளர்ந்த இலட்சுமிதேவியார், தக்க பருவம் அடைந்தபோது அவ்வரசனால் வீரராகவப் பெருமாளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டாள். தை அமாவாசை இங்கு மிகவும் விசேடம். திருமங்கை யாழ்வார் மங்களாசாசனம். சாலிகோத்திர முனிவரை இறைவன் தாம் 'சயனிப்பது எவ் வுள்?' எந்த இடம் என்று வினவியதனால், திரு எவ்வூளூர் என்பது, திருவள்ளூர் என மருவியது.

நாகத் தணைக்குடந்தை, வெஃகா, திருஎவ்வுள்,
நாகத் தணையரங்கம் பேரன்பில்-நாகத்து
அணைப்பாற் கடல்கிடக்கும் ஆதிநெடுமால்
அணைப்பார் கருத்தன்ஆ வான் (3519)

என்னுடைய இன்னமுதனை எவ்வுள் பெரு
மலையை.....(3815)

முன்ஓர் தூது வானரத்தின்
வாயில் மொழிந்து, அரக்கன்
மன்ஊர் தன்னை வாளியினால்
மாள முனிந்து, அவனே
பின்னர்த் தூது, ஆதிமன்னர்க்கு
ஆகிப் பெருநிலத்தார்
இன்னார் தூதன் எனநின்றான்
எவ்வுள் கிடந்தானே (1058-1067)

## (18) திருநீர்மலை :

சென்னை-தாம்பரம் இருப்புப் பாதையில் உள்ள, பல்லாவரம் என்னும் இடத்தில் இருந்து 3 கல் தொலைவில் உள்ளது. உந்தூர்தியுண்டு. மலையடிவாரத்தில் நீர்வண்ணர், நீலமுகில் வண்ணர். கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம். அணிமாமலர்மங்கை நாச்சியார். மணிகர்ணிகைத் தீர்த்தம். தோயகிரி விமானம். மலையின்மேல் அரங்கநாதர், தெற்கே திருமுக மண்டலம். சயனத்திருக்கோலம், திருவரங்க நாயகித் தாயார். தொண்டைமான் சக்கர வர்த்தி, பிருகுமுனிவர், மார்க்கண்டேயர் ஆகி யோர்க்குப் பிரத்தியட்சம். நின்றான் இருந்தான் கிடந்தான் சந்நிதிகளும் இங்கே உண்டு. பூதத் தாழ்வார் திருமங்கையாழ்வார் மங்களாசாச னம். இதற்குத் தென்மேற்கில் பிரகலாதாழ் வாருக்குப் பிரத்தியட்சமான சாந்த நரசிம்ம சுவாமி வீற்றிருக்கும் மங்களகிரியும், அதற்குப் பக்கத்தில் வால்மீகி முனிவர்க்குப் பிரத்தியட்ச மான இராமபிரான் வீற்றிருக்கும் பச்சைமலை யும் இருக்கின்றன.

அன்றாயர் குலக்கொடியோடு, அணிமா
மலர்மங்கையொடு அன்பளவி, அவுணர்க்கு
என்றானும் இரக்கம் இலாதவனுக்கு
உறையும் இடமாவது, இரும்பொழில்சூழ்
நன்றாய புனல் நறையூர் திருவாலி
குடந்தை தடந்திகழ் கோவல்நகர்
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தாற்கு
இடம்மாமலை யாவது நீர்மலையே
(1078-87)

## (19) திருஇடஎந்தை :

இது 'திருவடந்தை' என மருவி வழங்கு கின்றது. தாம்பரத்திற்கு அடுத்த வண்டலூர் என்னும் நிலையத்தில் இருந்து, 16 கல் தொலை வில் உள்ளது. உந்தூர்தி உண்டு. சென்னை யிலிருந்து மாமல்லபுரம் செல்லும்பேருந்து மூல மாகவும், இத்திவ்வியதேசத்தை அடையலாம். நித்தியகலியாணப் பெருமாள், கோமளவல்லி நாச்சியார். கலியாணவிமானம், வராக தீர்த் தம், கலியாண தீர்த்தம், கிழக்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம், மகாபலிச் சக்கரவர்த்தி தவம் செய்து பேறுபெற்ற தலம். மார்க்கண்டேயருக்குப் பிரத்தியட்சம். காலவ முனிவர் தன் பெண்கள் 360 பேரையும் தினம் ஒரு பெண்ணாக, யக்ஞவராகப் பெருமாளுக்குத் திருக்கல்யாணம் செய்து கொடுத்த தலம். அத னால் இப்பெருமாளுக்கு 'நித்தியகலியாணர்' எனப் பெயர் ஏற்பட்டது. காலவமுனிவரின் பெண்கள் 360 பேரையும் சேர்த்து ஒருத்தி யாக்கி, அகிலவல்லிநாச்சியார் (பூமிதேவி) என்று, தமது இடப்பக்கத்தில் வைத்திருப்ப தனால், இத்தலம் இடஎந்தை ஆயிற்று. மூலவர் வராகமூர்த்தியாக விளங்குகின்றார். திருமழிசை யாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாச னம்.

திவளும் வெண்மதிபோல் திருமுகத்து அரிவை
செழுங்கடல் அமுதினிற் பிறந்த
அவளும் நின் ஆகத்து இருப்பது அறிந்தும்,
ஆகிலும் ஆசை விடாளால்;
குவளையங் கண்ணி கொல்லியம் பாவை
சொல்லும் நின்தாள் நயந்திருந்த
இவளை, உன் மனத்தால் என்நினைந்து இருந்தாய்
இடஎந்தை எந்தைபிரானே (1108-1117

## (20) திருக்கடல் மல்லை:

செங்கற்பட்டு நிலையத்தில் இருந்து, 18 கல். பட்சிதீர்த்தம் என்னும் திருக்கழுக்குன்றத் தில் இருந்து 9 கல். தலசயனப்பெருமாள், கிழக்கே திருமுகமண்டலம், சயனத் திருக் கோலம். நிலமங்கைநாச்சியார். கனகஆகிருதி விமானம். கருடநதி, புண்டரீக முனிவருக்குப் பிரத்தியட்சம். பூதத்தாழ்வார் திருவவதாரத் தலம். இங்குப் பல்லவர் காலத்துக் கருங்கற் சிற்ப வேலைகள் நிரம்ப உள்ளன. பஞ்ச பாண்டவர் தேர்கள், கடற்கரைக்கோயில் முதலியன பார்க்கத்தக்கன. ஊர்க்கோயில் தலசயனம். கடற்கரைக்கோயில் சலசயனம். தலசயனப்பெருமாள் கோயிலுக்கு அரைக்கல் தொலைவில் ஞானப்பிரான் (வராகமூர்த்தி) கோயில் ஒன்று உள்ளது. பூதத்தாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

புலன்கொள்நிதிக் குவையோடு
புழைக்கைம்மா களிற்றினமும்
நலங்கொள்நவ மணிக்குவையும்
சுமந்தெங்கும் நான்றொசிந்து
கலங்கள் இயங்கும் மல்லைக்
கடல்மல்லைத் தலசயனம்
வலங்கொள்மனத் தார்அவரை
வலங்கொள்என் மடநெஞ்சே (1088-110

## (21) திருவல்லிக்கேணி :

சென்னையில் ஒரு பகுதி. 'மயிலைத் திருவல்லிக்கேணி' என்று புகழப் பெற்றுள்ளது. பார்த்தசாரதிப் பெருமாள். கிழக்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம். வேதவல்லித் தாயார், உருக்குமிணிப் பிராட்டியாரோடும், அநிருத்தன் பிரத்தியும்நன் பலராமன் சாத்யகி ஆகிய தனது குடும்பத்தினரோடும், தொண்டைமான் சக்கரவர்த்தியின் பிரார்த்தனைக்கு இரங்கித் திருவேங்கடமுடையான் கண்ண பிரானாகச் சேவை சாதித்த தலம். பிருந்தாரண்யம், ஆனந்த விமானம், இந்திர-சோம-மீன-அக்கினி-விஷ்ணு-தீர்த்தங்கள். ஐந்தும் சூழ்ந்த கைரவிணிசரஸ் (அல்லிக்கேணி). வியாசர் பிரதிஷ்டை செய்து ஆத்திரேயர் ஆராதித்த மூர்த்தி. சுமதி என்னும் அரசனுக்குச் சித்திரை மாதத்தில் காட்சி கொடுத்துப் பெருவிழாக் கொண்ட தலம். பிருகு அத்திரி மரீசி மார்க்கண்டர் சுமதி ஜாபாலி சப்தரோமர் என்னும் ஏழு முனிவர்கள் தவம் புரிந்த தலம். இலட்சுமி தேவியார் இங்கே பிருந்தாரண்யத்தில் திருவவதாரம் செய்தருளி, பிருகு முனிவரால் வேதவல்லித் தாயார் என்று திருநாமம் இடப்பெற்று அவரது ஆசிரமத்தில் வளர்ந்து, கிழக்கே திருமுகமண்டலமாய்ச் சயனத் திருக்கோலத்திலுள்ள மந்நாதப் பெருமானை மணம் புரிந்து கொண்ட தலம். அத்திரி முனிக்கும், பிரகலாதனுக்கும், நரசிங்க உருவத்துடன் (தெள்ளிய சிங்கர்) மேற்கு முகமாய் வீற்றிருந்த கோலத்துடனும், மதுமந்தனுக்குச் சக்கரவர்த்தித் திருமகனாய்த் தெற்கு முகமாக நின்ற கோலத்துடனும், சர்ப்பரோமனுக்குத்தேவப்பெருமாள் உருவமாய்க் கிழக்கு முகமாக வீற்றிருக்கும் கோலத்துடனும், சேவை சாதித்த தலம். முற்கல முனிவரால் கைரவிணி (அல்லிக்கேணி) தீர்த்தத்தில், மீன் இல்லாதிருக்கச் செய்யப் பெற்ற தலம். தொண்டைமான் சக்கரவர்த்திக்கும் பார்த்தனுக்கும் பிரத்தியட்சம். பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாசனம். திருமழிசையாழ்வார், முதல் ஆழ்வார்களைச் சந்தித்த தலம்.

விற்பெரு விழவும் கஞ்சனும் மல்லும்
வேழமும் பாகனும் வீழச்
செற்றவன் தன்னைப், புரமெரி செய்த
சிவன்உறு துயர்களை தேவைப்,
பற்றலர் வீயக் கோல் கையில்கொண்டு,
பார்த்தன்றன் தேர்முன் நின்றானைச்
சிற்றவை பணியால் முடிதுறந் தானைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே (1)

பள்ளியில் ஓதி வந்த தன்சிறுவன்
வாயில்ஓர் ஆயிர நாமம்,
ஒள்ளிய ஆகிப் போத ஆங்கதனுக்கு
ஒன்றும்ஓர் பொறுப்பிலன் ஆகி,
பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண்புடைப்பப்
பி றையெயிற்று அனல்விழிப் பேழ்வாய்த்
தெள்ளிய சிங்கம் ஆகிய தேவைக்
திருவல்லிக் கேணிக்கண் டேனே. (2)

மீனமர் பொய்கை நாண்மலர் கொய்வான்
வேட்கையி னோடுசென் றிழிந்த
கானமர் வேழம்கையெடுத்து அலறக்
கராஅதன் காலினைக் கதுவ
ஆனையின் துயரம் தீரப்புள் ஊர்ந்து
சென்றுநின் றாழி தொட்டானைத்
தேனமர் சோலை மாடமா மயிலைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே (3)

பரதனும் தம்பி சத்துருக் கனனும்
இலக்கும னோடு மைதிலியும்
இரவும்நன் பகலும் துதிசெய்ய நின்ற
இராவணாந் தகனை எம்மானை
குரவமே கமழும் குளிர்பொழில் ஊடு
குயிலொடு மயில்கள் நின்றால,
இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாத்
திருவல்லிக் கேணிக் கண்டேனே (4)

## (22) திருக்கடிகை :

இது சென்னை-அரக்கோணம்-பெங்களூர் இருப்புப் பாதையில், சோளங்கிபுரம் (சோளசிங்கபுரம்) நிலையத்தில் இருந்து 2 கல் தொலைவில் உள்ளது. கடிகாசலம் எனவும் வழங்கும். யோகநரசிம்மர், கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், தக்கான் (பக்த உசிதசுவாமி), அக்காரக்கனிப்பெருமாள், அமிர்தவல்லித் தாயார், சிம்ம கோஷ்ட ஆகிருதி விமானம், அமிர்த தீர்த்தம், தக்கான்குளம், சிறிய திருவடிக்குப் பிரத்தியட்சம், கோயில் சுமார் 400 அடி உயரமுள்ள மலைமேல் இருக்கின்றது. சந்நிதிக்கு எதிரில் மற்றொரு குன்றில் சிறிய திருவடி (ஆஞ்சநேயர்) கோயில் உள்ளது. தேவேந்திரனின் வேண்டுகோளின்படி பலராமன் தன் கலப்பை ஆயுதத்தை எறிந்து செருக்கு அடக்கிய பருவதம். இரணியனைக் கொன்று உக்கிர சொரூபமாக இருந்த நரசிம்ம சுவாமியைப் பிரகலாதாழ்வார் துதிசெய்து சாந்தப்படுத்திய தலம். கடிகை-நாழிகை. இத்தலத்தில் ஒரு நாழிகை நேரம் மட்டும் தங்கியிருந்து தியானித்தாலும் முத்தி சித்திக்கும். ஆதலால் இதற்குக் கடிகாசலம் என்று பெயர் வழங்குவதாயிற்று. பேயாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

மிக்கானை மறையாய் விரிந்த
விளக்கை, என்னுள்
புக்கானைப் புகழ்சேர்
பொலிகின்ற பொன்மலையைத்
தக்கானைக் கடிகைத்
தடங்குன்றின் மிசையிருந்த
அக்காரக் கனியை
அடைந்துய்ந்து போனேனே! (1731)

பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்
கொண்டங் குறைவார்க்குக் கோயில்போல்-வண்டு
வளங்கிளரும் நீள்சோலை வண்பூங் கடிகை
இளங்குமரன் றன்விண் நகர். (3444)

(தொடரும்)

# ஆகமங்கள் தமிழில் இருந்தனவா?....

[ திரு மு. அருணாசலம் ]

சைவப் பேராசிரியர் பலர், ஆகமங்கள் ஆதியில் தமிழில் தான் செய்யப்பட்டிருந்தன என்று சொல்லி வந்திருக்கிறார்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இவை செய்யப்பட்டன. இவற்றில் ஒரு தனித்தன்மை பொருந்திய சமயக் கோட்பாடுகள் அடங்கி இருந்தன. இயற்கை உற்பாதங்கள் காரணமாகவும், அரசியல் மாறுதல் காரணமாகவும், இவை அழிந்து போயின. வடமொழியில் இவற்றைப் பெயர்த்தவர்கள் இவற்றில் கண்ட தமிழ்ச் சமயக் கருத்துக்களைத் தங்கள் வேதச் சமயக் கருத்துக்களில் பொருத்திக் கொண்டார்கள். ஆகமங்கள் வேதத்தில்ருந்து தோன்றியன என்பது ஏற்க இயலாத கூற்று. ஆகமம் என்ற பெயரே, அதாவது (புதியதாக வந்தது, வேறு மொழியில் இருந்து வந்தது) மேற்குறிப்பிட்ட கருத்துக்கு ஆதரவைக் காட்டுகிறது. அன்றியும் தந்துஎன்றால் நூல், அதாவது புத்தகம் என்றும் பொருள்படும். ஆகவே தந்திரம் என்பதுகூட, தமிழிலிருந்து வந்திருக்கலாம் என்பதாகச் சொல்லுகிறார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்தில் முன்னாளில் தத்துவத்துறைப் பேராசிரியராக இருந்த எஸ்.எஸ். சூரியநாராயண சாஸ்திரி அவர்கள் விரிந்த மனப்பான்மையோடு பின்வருமாறு எழுதுகிறார்:

''இந்தக் கொள்கைக்கு நிரம்ப ஆதரவு சொல்ல முடியும். யாகங்களை நிறுத்திய செய்கை, அக்கினிபூசைக்குப் பதிலாகத் தியானம், குறியீடுகள், தெய்வப் பிரதிமைகள் இவற்றின்மூலம் வழிபாடு செய்தல் ஆகியவை எல்லாம் வேதத்துக்குச் சம்பந்தமில்லாத பிறவற்றால் விளைந்தவை என்றே கருதக்கூடும். வேதத்துக்குப் புறம்பான மக்கள் என்போர் வேறு மக்களினத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம். அல்லது அவர்கள் ஆரியர்களைச் சேர்ந்தவர்களாக இருந்தும், வீர உணர்ச்சிமிக்கவர்களாய்த் தங்களுக்கென்று புதிய வாழ்க்கை அமைத்துக்கொண்டு புதிய கருத்துக்களைப் பின்பற்றி மீண்டும் தங்கள் இனத்தில் வந்து சேர்ந்தோ அல்லது அதனோடு சேர்க்கப்பட்டவர்களாகவோ இருந்து இதன் பயனாய்த்தங்கள் மூலஇனத்தின் பண்பாட்டை மேலும் வளப்படுத்தி இருக்கக்கூடும்''. (ஸ்ரீகண்டருடைய சிவாத்துவைதம் என்றநூல், 1972—4ஆம் பக்கத்தின் அடிக்குறிப்பு).

3,500 ஆண்டுகளுக்கு முன்பு பரதகண்டத்தில் சிவலிங்க வழிபாடு பரவி இருந்தது என்பதை மொகஞ்சதாரோ அகழ்வாராய்ச்சியில் கண்ட சிவலிங்கவடிவம் நமக்கு உணர்த்துகிறது. அங்குக் காணப்பட்ட எழுத்துக்களை ரஷ்யக்குழு, பின்லாந்து தேசத்துக்குழு, இந்தியத் தேசத்துக்குழு ஆகிய மூன்று குழுக்களும் தனித்தனியாக அவற்றின் பொருளைக் காணத் தலைப்பட்டார்கள். அவர்கள் தனித்தனியாகக் கண்ட முடிவு, அந்த சிந்துவெளி நாகரிகத்தில் ஆரியப் பண்பாடு எதுவும் இல்லை என்றும்; வடமொழிச் சாயல் அங்கு ஒன்றும் இல்லை என்றும், அது திராவிட நாகரிகம் என்று இன்று பெயர் சொல்லுகின்ற நாகரிகத்துக்கு முன்னோடியாக உள்ள ஒரு நாகரிகமேயாகும் என்றும். ஒருமுகமாகச் சொல்லப்பட்டது. இன்று திராவிடக் குடும்பம் என்பதில் பழம் பெருமையுடையது என்று சொல்லத்தக்கது, பண்பாட்டினாலும், மொழி அமைப்பினாலும், தமிழ் ஒன்றுதான் என்பது அனைவருக்கும் ஒப்ப முடிந்தது. ஆகவே இத் தமிழ் நாகரிகத்தோடு, அந்தசிந்துவெளி நாகரிகத்தை இணைப்பதில் கருத்து வேற்றுமை இருக்கமுடியாது.

ஒன்று நினைவிருக்கவேண்டும். உலகில் எல்லா ஆராய்ச்சியாளரும், அவர்கள் எந்த நாட்டினராக இருந்தபோதிலும், வடமொழிதான் சர்வ வியாபகமும் உயர்வும் உடையது என்று கருதுகின்ற ஒரு மரபில் அவர்கள் வளர்ந்திருக்கிறார்கள். தமிழானது வடமொழியைவிட அதிகம் பழமை உடையது என்று கருதாவிட்டாலும்கூட, அதை ஒத்த பழமை உடையது என்று கருதத்தக்க அளவுக்கு அவர்களுக்குத் தமிழ் அறிவும் இல்லை, தமிழைப்பற்றி அவர்கள் கேட்டதும் இல்லை. ஆகவே வடமொழியே ஆட்சிபுரிந்த அந்த நிலையில், சிந்துவெளி நாகரிகம் தமிழ் என்றோ, தமிழுக்கு முன்னோடி என்றோ கருத இயலாது, ''திராவிடத்துக்கு

முன்னோடி'' என்று அவர்கள் சொன்னார்கள். பண்டைய மரபிலும் வடமொழி இலக்கியங்களிலும் திராவிடம் என்றால் தமிழ் என்றுதான் பொருள். ஆனால் அந்த அகழ்வுகளில் இருந்து புலனாகின்ற சிவலிங்க வழிபாடானது பண்டைய தமிழ்ச் சாத்திரங்களினால் விதிக்கப்பட்டிருந்தது என்று நாம் சொன்னால் அதில் ஆட்சேபம் இருக்க முடியாது. அத் தமிழ்ச்சாத்திரங்களை இன்று ஆகமம் என்று சொன்னால் தவறு இல்லை.

இருந்தபோதிலும், இப்படி தமிழ் ஆகமங்கள் இருந்தன என்று சொல்வதற்கு எந்த விதமான திட்டமான சிறு ஆதாரம்கூட இல்லை என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். ஆயினும் இத்தனையும் வெறும் ஊகம்தான் என்று சொல்லி, இக்கருத்தைத் தள்ளிவிட முடியாது. மேலும் சிவாகமக் கருத்துக்கள், சில அம்சங்களில் வேதாந்தக் கருத்துக்கு வேறானவை அல்லது மாறானவை. இவ்வாறு இவற்றுக்குத் தனித்தன்மை உண்டு என்பதும்கூட, இவை தமிழ் ஆகமங்களே என்பதற்கு ஆதரவாகும்.

அன்றியும், குமரிக்குத் தென்பகுதியிலுள்ள நிலப்பகுதியைக் கடல் விழுங்கி விட்டது என்பதை ஆய்வாளர்கள் இன்றெல்லாம் ஏற்றுக் கொண்டு வருகிறார்கள். இப்பகுதிக்கு லெமூரியா என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இப்பகுதியில் ஏராளமான இலக்கியச் செல்வம் இருந்தது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. ஆதலால் கடலுள் போன இத்தமிழ்ச் சாத்திரங்கள் அன்று அங்கு இருந்தன. ஆனால் மற்ற நூல்களோடு கூட இவையும் அழிந்தன என்பது உண்மையாதல் கூடும். இவற்றுக்கு ஒருபால் ஆகமம் என்ற பெயரே இருந்திருக்கலாம். அல்லது வேறு எந்தப் பெயரேனும் இருக்கலாம்.

திருமூலர் திருமந்திரத்தில் பல இடங்களில் தாம் சிவபெருமான் திருவடியைச் சிந்தை செய்து ஆகமம் செப்புவதாகச் சொல்கிறார். இது தமிழ் ஆகமமாகத்தானே இருக்க முடியும்.

> ''நந்தி இணையடி நான்தலை மேற்கொண்டு
> புந்தியின் உள்ளே புகப்பெய்து போற்றிசெய்
> தந்தி மதிபுனை அரனடி நாள்தொறும்
> சிந்தைசெய் தாகமஞ் செப்பலுற் றேனே''
> (73)

> ''பெற்றநல் ஆகமங் காரணம் காமிகம்
> உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்
> மற்றவ் வியாமள மாகும்கா லோத்தரம்
> துற்றநற் சுப்பிரம் சொல்லும் மகுடமே''(63)

இந்த ஒன்பதினுள் வியாமளம் என்பது தேவியாமளம், சாக்த ஆகமம். அன்றியும் இறைவன் தம்மைத் தமிழில் சொல்லுமாறு படைத்திருக்கிறான் என்றும் சொல்லுகிறார்.

> பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
> முன்னைநன் றாகமுயல் தவஞ் செய்கிலர்
> என்னைநன் றாகஇறைவன் படைத் தனன்
> தன்னைநன் றாகத் தமிழ் செய்யுமாறே (81)

இவற்றால் நாம் ஒரு முடிவுக்கு வர இடமுண்டு. அதாவது முன்னமே இருந்த தமிழ் ஆகமங்கள் மறைந்துபோன காரணத்தால், தாம் புதிதாகத் தமிழ் ஆகமங்கள் செய்ய முற்பட்டிருக்கிறார் என்பதாகும்.

இந்த நிலை தமிழ் ஆகமங்கள் மறைந்து போனதால்தான் ஏற்பட்டது என்பது தெளிவு. தமிழ் ஆகமங்கள் மறைந்து போகவே அவற்றின் ஸ்தானத்தில் வடமொழி ஆகமங்கள் தோன்றின. ஆதலால் திருமூலர் இப்போது புதிதாக ஆகமசாரத்தைத் தமிழினாலே மீண்டும் சொல்லுகிறார். ஆகமம் என்ற வடமொழிச் சொல்லுக்கு ''இன்று தமிழிலிருந்து புதிதாக வடமொழிக்கு வந்தது'' என்று பொருள்பண்ணிக்கொள்ளலாம்.

சரித்திர காலம் முதலாகத் தமிழ்நாடு தெய்வவழிபாடு உடையநாடு என்பது தெரிந்த செய்தி. தமிழுக்கு இலக்கணம் செய்யவந்த தொல்காப்பியம் ஐந்திணை ஒழுக்கத்தைப் பற்றிக் கூறும்போது தெய்வ வழிபாட்டைத் தவறாது சொல்கிறார். குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்று திணைகளைப் பிரித்து அவற்றுக்குரிய தெய்வங்களாக முருகன், திருமால், இந்திரன், வருணன், கொற்றவை என்போரை அவர் குறிப்பிடுகிறார். 'என்ப' 'என்மனார் புலவர்' என்றெல்லாம் அவர் சொல்லி வருபவற்றால், இக்கருத்துக்கள் அவருக்கு முன்னமே நெடுங்காலமாக மக்களிடையே வழங்கிவந்தன என்பதை உணர்தல் வேண்டும். இனி இந்தத் திணைகளுக்குரிய மக்கட் பகுதிகளை அவர் குறிப்பிடும்போது, இயற்கையாக அந்த ஐந்து திணைக் குரிய வாழ்க்கையும், தொழிலும் உடையவர்களாகவே அவர் மக்களைக் குறிப்பிடுகின்றார். அன்றி, சாதி பற்றி மக்களை அவர் வேறுபடுத்தவில்லை. மேலே ஐந்து தெய்வங்களைக் குறிப்பிட்ட இடத்தில் தொல்காப்பியர் சிவனைச் சொல்லவில்லை. அவர் கருத்தின்படி ஒவ்வொரு தெய்வமும், ஒரு நிலப் பிரிவுக்கு உரியதாய் இருக்க, எல்லா நிலப்பிரிவுகளும் சிவனுக்கு உரியனவாதலால், தனித்துச் சிவனைக் குறிப்பிட வேண்டிய நிலை இல்லை என்று கொள்ளலாம். எனினும் ''கொடிநிலை கந்தழி வள்ளி'' எனத் தொடங்கும் சூத்திரத்தின்கீழ் நச்சினார்க்கினியர் ''ஒரு பற்றுக்கோடுமின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள்'' என்று குறிப்பிடுகிறார். உய் என்பதன் அடியாகப் பிறந்தது உயிர் என்னும் பெயர். அவ்வுயிர்க்கு உடல் போல் அமைந்தது மெய். ஒருவரது உடலைத்தான் முதலில் காண்கிறோம். உயிர் உடலில் அடங்கியுள்ளது. மெய்யெழுத்துக்களை இயக்குவது அகரத்தோடு தொடங்கும் உயிரெழுத்துக்கள். இறைவனும் எல்லா உயிர்களையும் உடஉடனாய் இருந்து இயக்குகிறார் என்பது, "மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்," ''மெய்யின் வழியது உயிர் தோன்று நிலையே'' எனத் தொல்காப்பியம் கூறுகிறது. இவையெல்லாம் ஆகமங்களின் ஞானப் பகுதிக் கருத்துக்கள்.

சிவம் என்ற சொல், செம்மை என்னும் பொருள் படும். இது தமிழ்ச் சொல்லுக்குரிய பொருள். இது செம்மை என்ற நிறத்தையும், செம்மை யாகிய நன்மை (மங்களம்) தருதல் என்ற பொருளையும் குறிக்கும் என்று ஆன்றோர் கூறியுள்ளனர். பிற்காலத்தில் வேதத் தெய்வமாகிய உருத்திரன், தமிழ்மக்களுடைய தொடர்பினால் தமிழ்த் தெய்வமாகக் கருதப்பெற்றிருந்த சிவத்தோடு ஒற்றுமைப் படுத்திய காலத்தில், சிவம் என்றசொல் வடமொழியில் கொள்ளப்பட்டது என்று டாக்டர் சட்டோபாத்தியாயா, ''சங்கராச்சாரியர் வரையில் இந்து சமயப் பிரிவுகள் வளர்ந்த வரலாறு'' என்ற நூலில் எழுதியுள்ளார். ''இந்திய மொழியியல் பற்றிய புல ஆய்வு'' என்ற விரிந்த தமது நூலில், டாக்டர் கிரயர்சன் என்ற அறிஞர் சிவம் தமிழ்ச்சொல் எனவும்; இதிலிருந்துதான் ஆரியர் கூறும் உருத்திர சிவத்துக்கு ஆதாரம் ஏற்பட்டதெனவும், அவர்கள் தத்துவக் கருத்தும் இதற்கேற்ப மாறுதல் அடைந்தது எனவும் எழுதியுள்ளார்.

வேத ஆராய்ச்சியாளர் பலரும் இந்தியாவின் ஆதி இலக்கியம் என்று கருதப்படும் முதல் வேதமாகிய ரிக் வேதத்திலும், மற்றவற்றிலும், திராவிட (தமிழ்) மொழிக்கூறுகள் (ஒலியாகவும் கருத்தாகவும்) காணப்படுகின்றன என்று கருதுகிறார்கள். சிவம் என்ற ஒலியும் அதுபற்றிய கருத்தும் வேதங்களில் காணப்படுவது உண்மையே. வேதங்களின் இடைப்பகுதியாகிய கிருஷ்ண யசுர்வேதத்தின் இடைப்பகுதியாயுள்ள 11வது அனுவாகத்தில் மத்திய சுலோகத்தில்நமசிவாயச, சிவதராயச என்ற தொடர்கள் வருகின்றன. இது சிவனைக்குறிக்கின்ற மந்திரம் என்றும், இங்கு வரும் 'நமசிவாய' என்ற தொடரே சிவபிரானின் திருவைந்தெழுத்து என்ற கருத்தும் சொல்லப்பெறும். இதை நன்கு சிந்திக்கும்போது தமிழ் மக்களிடையே வழங்கிய கருத்து வேதத்திலும் புகுந்திருக்கிறது என்று முடிவு செய்தல் பிழையாகாது.

அன்றியும் புவியியலை ஆராய்ந்தவர்கள், உலகத்திலேயே, இந்தியாவின் தென்பகுதி தான் மிகப் பழமையான நிலப்பரப்பு என்றும், இதுதான் ஆதிமனிதன் தோன்றிய முதலிடம் என்றும் கூறுவார்கள். மேலும் தற்போதுள்ள கன்னியாகுமரி முனைக்குத் தெற்கே 'இலெமூரியா' என்று இன்று பெயர் சூட்டப்பட்ட ஒரு பெரிய நிலப்பரப்பு இருந்தது, கடலில் மூழ்கியது என்ற கருத்தும் அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்பெறுகிறது. இந்த நிலப்பரப்பில் மகேந்திரமலை என்ற மலை இருந்தது என்றும், அங்கிருந்துதான் சிவபிரான் தமது ஐந்து முகங்களால் ஆகமங்களை, பக்குவம்பெற்ற முனிவர்களுக்கு உபதேசித்தார் என்றும் வரலாறுகள் உள்ளன. இதையேதான் மாணிக்கவாசகர் திருவாசகத்தில் மூன்றிடங்களில் குறிப்பிடுகிறார்.

வரலாற்றுக் காலத்திற்கு முன்னர் ஆகமங்கள் தமிழரால் தமிழில் இயற்றப்பெற்றவை எனவும்; அவற்றின் பெரும்பகுதி கடல் கோளால் அழிந்தது எனவும்; புதைபொருள் ஆராய்ச்சிச் சங்கத்தின் செயலாளர் டி.சவரிராயன் கூறியுள்ளார். சிறந்த தமிழறிஞர்களான சூரியநாராயணசாஸ்திரியும் (பரிதிமாற் கலைஞர்), மறைமலைஅடிகளும், கா.சுப்பிரமணியபிள்ளையும், ஆகமங்கள் தமிழிலேயே ஆதியில் இருந்தன என்பதை அறுபது ஆண்டுகளுக்கு முன்பே வலியுறுத்தியிருக்கிறார்கள்.

ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ

# நிர்வாக அதிகாரிகள் நியமனம்

1959ஆம் ஆண்டின் தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டம் 45(1) பிரிவின்கீழ், உரிய முறையிலும் சிறந்த நிலையிலும் நிர்வாகம் நடைபெறுதற் பொருட்டு, பின்வரும் கோயில்களுக்கு நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

1. சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், குமாரபாளையம், தட்டான்குட்டை, அருள்மிகு சண்முகவேலாயுதசுவாமி கோயில், சங்ககிரி அருள்மிகு சோமேசுவரர் கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (22.12.82).

2. காஞ்சிபுரம் வட்டம், காஞ்சிபுரம் நகரம், மூங்கில்மண்டபம் அருள்மிகு வரசத்திவிநாயகர் கோயில், காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (23.12.82).

3. சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், செங்கோடன்பாளையம் அருள்மிகு மாரியம்மன்கோயில், திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீசுவரர் கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (23.12.82).

4. சேலம் மாவட்டம், நாமக்கல்வட்டம், அனிச்சம் பாளையம் அருள்மிகு வேங்கடரமணசுவாமி கோயில், பாண்டமங்கலம் அருள்மிகு பிரசன்னவேங்கடரமணசுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

5. இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், தேவகோட்டை, திருவரங்கபுரம் அருள்மிகு முத்துமாரியம்மன் கோயில், எருவாஞ்சேரி அருள்மிகு ஆதீனமிளகிய அய்யனார் கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.(24.1.83)

ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ ஶ

# தூங்காமல் தூங்கும் சுகம்

திரு. நீ. தங்கவேலன், வேலூர்.

மன்னராக இருந்து மணிமுடியைத்துறந்து பட்டினத்தாரின் சீடரானவர் பத்திரிகிரியார் என்னும் சித்தர். அவர் பாடிய பாடல்கள் 'மெய்ஞ்ஞானப் புலம்பல், எனப்படும். இந்த உயிர், மெய்ஞ்ஞானத்தைப் பெற்றுப் பிறவா நிலையடைந்து இறையோடு ஒன்றி நிற்பது எந்தக் காலமோ? என்று ஏங்கிப் புலம்புவது போல் அமைந்தவை அவருடைய பாடல்கள்.

நான் என்றும் எனது என்றும் எண்ணிச் செயற்படும் ஆணவத்தை அடக்கி அழித்து, ஓயாமல் அலைந்து கொண்டிருக்கும் ஐம் புலன்களைச் சுட்டு அறுத்து, தூங்காமல் தூங்கிச் சுகத்தைப் பெறுவது எந்தக் காலமோ? என்று ஏங்குகிறார் பத்திரகிரியார்.

''ஆங்காரம் உள்ளடக்கி,
ஐம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமல் தூங்கிச்
சுகம் பெறுவது எக்காலம்?''

நூங்காமல் நூங்குவது என்றால் என்ன? மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து பொறிகள் நம்மிடம் உள்ளன. மெய்யாகிய உடம்பால் நாம் தொட்டு அறிகிறோம்.வாயால் சுவைத்து அறிகிறோம். கண்ணால் பார்த்து அறிகிறோம். மூக்கால் முகர்ந்து அறிகிறோம். செவியால் கேட்டு அறிகிறோம். இவ்வாறு ஐந்து வகையாக அறிகின்ற அறிவே ஐம்புலன் எனப்படும்.

இந்த ஐந்து புலன்களை ஐந்து பொறி களின் வழியாக அறிவது எதுவோ அதுவே மனம் எனப்படும். மனம் இல்லாமல்-மனத்தின் தொடர்பு இல்லாமல் - கண் பார்ப்பதில்லை; காது கேட்பதில்லை; வாய் சுவைப்பதில்லை; மூக்கு முகர்வதில்லை; உடல் உற்று அறிவதில்லை.

ஐந்து பொறிகளின் மூலமாக உணர்கின்ற ஐந்து புலன்களை மனம் அறிவுக்குத் தெரிவிக் கிறது. அறிவு உடனே கட்டளை இடுகிறது. அந்தக் கட்டளைக்கு ஏற்ப நாம் செயற்படு கிறோம். ஐந்து பொறிகள் அமைந்த உடல் நாம் காணக் கூடியது; பரு உடல் என்பது. அறிவும் நாம் காண முடியாதது; நுண்ணுடல் என்பது. அந்த நுண்ணுடல் இயங்கக் காரண மாக இருப்பது காரண உடல் என்பது. பழைய வினைகளின் சேர்க்கை அல்லது பழைய வாசனைகளின் சேர்க்கை என்பது இந்தக் காரண உடல்தான்.

விழிப்புநிலை, கனவுநிலை, தூக்கநிலை என்னும் மூன்று நிலைகளை நாம் எல்லோரும் அறிவோம். விழிப்புநிலை என்பது நாம் விழித்துக் கொண்டிருக்கும் நிலை. உடம்பும் மனமும் அறிவும் இயங்கிக் கொண்டிருக்கும் நிலை. உடம்பைப் பற்றிய நினைவு நமக்கு நீங்காமல் இருக்கும் நிலை.

கனவுநிலை என்பது நாம் கண் அயர்ந்து கனவு காண்கின்ற நிலை. அந்த நிலையில் ஐம் பொறிகளோடு கூடிய நம் பருஉடல் இயங்கா மல் அசைவற்றுக் கிடக்கிறது. மனமும் அறிவு மாகிய நுண்ணுடல் மட்டும் இயங்குகிறது. அதனால்தான் நாம் கனவு காண முடிகிறது. கனவு கண்டு விழித்தபின் கண்ட கனவை நினைத்துப் பார்க்க முடிகிறது.

மூன்றாவது நிலையாகிய தூக்க நிலையில்- அதாவது கனவு காணாமல் ஆழ்ந்து உறங்கு கின்ற நிலையில், மனமும் அறிவுமாகிய நுண்ணுடலும் இயங்காமல் அசையாமல் இருக் கிறது. உடம்பையும் மனத்தையும் அறிவையும் மறந்த நிலையில் நாம் தூங்குகிறோம். அப் போது காரண உடலும்கூட செயலற்றுக் கிடக் கிறது. நாம் விழித்த உடன்தான் காரணஉடல் மனத்தையும் அறிவையும் தூண்டி நம்மை ஆட்டி வைக்கிறது.

நாம் ஆழ்ந்து உறங்குகின்ற நிலையில், நம் உயிர் பருஉடலையும் நுண்ணுடலையும் காரண உடலையும் விட்டு விலகி நிற்கிறது.

அதனால்தான் நாம் அப்போது ஒன்றையும் அறிய முடியாத நிலையில் இருக்கிறோம். ஒன்றும் அறியாமல் தூங்குவதே நமக்கெல்லாம் சுகமாக - ஆனந்தமாக இருக்கிறது! ஆனால் அந்தச் சுகமும் ஆனந்தமும் நிலையற்றவை; நொடிப் பொழுதில் மாறக் கூடியவை.

நிலையாக மாறாமல் இருக்கும் ஆனந்தத்தையும் சுகத்தையும் அறிய நாம் விழித்த நிலையிலேயே தூங்க வேண்டும். அதாவது விழிப்பு நிலையிலேயே நம் உயிர், பரு உடலையும் நுண்ணுடலையும் காரண உடலையும் விட்டு விலகி நிற்கச் செய்ய வேண்டும். அது எப்படி முடியும்?

நம் உயிரில் உயிராய் இருக்கின்ற இறைவை உணர்ந்து பழகினால்; அந்த இறையோடு ஒன்றிய நிலையில், உயிர் மூன்று உடல்களையும் விட்டு விலகி நிற்கும். அப்படி நிற்கின்ற நிலையே அறிதுயில் நிலை எனப்படும். அந்த நிலையில் தோன்றுவதே அழியாத சுகமாகும்; நிலையான பேரின்பமாகும். தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுகின்ற நிலை அதுதான்.

அந்த நிலையில் இரவும் பகலும்கூட நமக்குத் தெரியாது நம்மிடம் உள்ள ஐம் பொறிகள் ஐம்புலன்களை அறியா. நாம் பேச்சும் மூச்சும் அற்றநிலையில் இருப்போம். அந்த நிலையைப் பெறுவது எந்தக் காலமோ என்று தான் புலம்புகிறார் பத்திரகிரியார்.

''அல்லும் பகலும் எந்தன்

அறிவை அறிவாய் அறிந்து

சொல்லும் உரை மறந்து

தூங்குவதும் எக்காலம்?''

அந்த நிலையை அடைவதற்கு நான் என்னும் முனைப்பும், எனது என்னும் பற்றும் அற்றுப் போக வேண்டும். பிற உயிரையும் தன்னுயிர்போல் எண்ணி, எந்த உயிரையும் வதைக்காமல், கொல்லாமல் வாழ வேண்டும். கஞ்சா, அபின், கள் போன்றபோதைப்பொருள்களை நாடாமல் இருக்க வேண்டும். மண், பெண், பொன் என்னும் மூன்றிலும் தோன்றும் ஆசைக்கு இடம் தராமல் இருக்க வேண்டும். இந்த உடம்பைவிட்டு உயிர் பிரிந்து போகுமுன், உயிரைப் பற்றியிருக்கும் 'நான்' என்னும் ஆணவம் இறந்து விட வேண்டும். நமக்குத் தரியாமலே நமக்குள் இருந்து நம்மை ஆட்டுவிக்கின்ற அந்த இறையை அறிய வேண்டும். நம் உள்ளம் அறிய முடியாதவாறு ஒளிந்திருக்கும் அந்தத் தலைவனை, கள்ளமற்றுத்தெளிந்து நாம் காண வேண்டும். அவ்வாறு காண்கின்ற நாள் என்று வருமோ? என்று புலம்புகிறார் பத்திரகிரியார்.

''மன்னுயிரைக் கொன்று

வதைத்துண்டு வாழாமல்

தன்னுயிர்போல் எண்ணித்

தவம் முடிப்பது எக்காலம்? (1)

கஞ்சா அபினியுடன்

கள்ளுண்டு வாடாமல்

பஞ்சாமிர்தம்தான்

பருகுவதும் எக்காலம்? (2)

தோன்றாறை ஜெயும்

தொடர்ந்துவந்து சுற்றாமல்,

ஊன்றாசை வேரைஅடி

ஊடறுப்பது எக்காலும்? (3)

ஊன்நிறைந்த காயம்

உயிர் இழந்து போகுமுன்னே,

நான்இறந்து போகஇனி

நாள்வருவது எக்காலம்? (4)

என்னை அறியாமல்

இருந்தாட்டும் சூத்திரநின்

தன்னை அறிந்து

தவம்பெறுவது எக்காலம்? (5)

உள்ளம் அறியாது

ஒளிந்திருந்த நாயகனைக்

கள்ளமனம் தெளிந்து

காண்ப(து) இனி எக்காலம்?'' (6)

ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களின்ன்று நம் உயிர் விடுபட்டு இறையோடு ஒன்றுகின்ற நிலையை அடைய வேண்டும் என்பதே நம் வாழ்க்கையின் குறிக்கோளாக இருக்க வேண்டும். அதுவே நமது இலக்காக இருக்க வேண்டும். அந்த இலக்கை அடைய, நம் மனத்தையே ஒரு வில்லாக்கி, நம் பொறிகளையே நாணாக்கி, நம் அறிவையே அதில் அம்பாக வைத்து எய்ய வேண்டும். அப்படி அம்பு எய்து இலக்கைப் பெறுகின்ற நாள் எந்த நாளோ? என்று ஏங்கிப் புலம்புகிறார் பத்திரகிரியார்.

''மனதை ஒரு வில்லாக்கி

வான்பொறியை நாணாக்கி,

எனதறிவை அம்பாக்கி,

எய்வ(து) இனி எக்காலம்?''

அந்த ஏக்கமும் புலம்பலும் நமக்கெல்லாம் வருகின்ற நாள் எந்த நாளோ?

# எம்பெருமானார்

கவிஞர் திரு. மனசை ப. கீரன், B.A., B.T.

## முன்னுரை

வைணவ சமயத்தின் ஆசாரியப் பெருமக்களில், மிகவும் தலைசிறந்த ஒருவராகத் திகழ்பவர், இராமாநுசர் ஆவர். இவ் இருள்தரும் மாஞாலத்தைத் தெருள்தரும் மாஞாலமாகச் செய்தருள்வதற்காக இராமாநுசர் திருவவதரித்து அருளினார். 'கலியும் கெடும் கண்டு கொள்மின்' என்ற நம்மாழ்வார் பாசுரத்தை மெய்ப்பிப்பதற்காகவே தோன்றியருளிய சான்றோர், இராமாநுசர் எனல் பொருந்தும். இவரை ''எம்பெருமானார்'' என்று வைணவ உலகம் போற்றி வருகின்றது. திருவாய்மொழி ஆயிரத்தையும் ஈன்றளித்த முதல்தாய் நம்மாழ்வார் என்றால், அவற்றை உலகிற் பரப்பி வளர்த்துச் செழிப்பித்த இதத்தாய் இராமாநுசரே எனப் பெரியோர்கள் இவரைப் புகழ்ந்து போற்றுவர். வைணவ சமய வரலாற்றில், இராமாநுசர் இணையற்ற பெருமையும் சிறப்பும் கொண்டவராவர். இவருக்கு முன்னர்ப் 'பரம வைதிக சித்தாந்தம்' என்று வழங்கப் பெற்று வந்த வைணவப் பெருஞ் சமயமானது, இவருக்குப் பின்னர், எம்பெருமானார் தரிசனம் என்று, இவர் பெயராலேயே சிறப்பித்து வழங்கப்பெறுவதாயிற்று.

இராமாநுசர் திருவனந்தாழ்வான் (ஆதிசேடன்) அவதாரம் என்றும், விஷ்வக்சேனர் அவதாரம் என்றும், பெரியோர்கள் சிறப்பித்துரைப்பர். திருவரங்கத்தமுதனார், இவரைத் திருமாலின் திருக்கைகளிலுள்ள சுதர்சனம் என்னும் சக்கரம், பாஞ்சசன்யம் என்னும் சங்கு, நாந்தகம் என்னும் வாள், சார்ங்கம் என்னும் வில், கௌமோதகி என்னும் கதை ஆகிய ஐந்து படைகளின் அவதாரமாகப் புகழ்ந்து பாடிப் போற்றியிருக்கின்றார்.

## தோற்றமும் பெயர்களும்

இராமாநுசர் தொண்டை நாட்டைச் சேர்ந்த திருபெரும்பூதூரில் ஆசூரிகேசவப்பெருமாள் என்னும் தந்தையாருக்கும், பூமிப் பிராட்டியார் என்னும் தாயாருக்கும், சாலிவாகன சகம் 939ல் பிங்கள ஆண்டு சித்திரைத் திங்கள், வளர்பிறை, பஞ்சமிதிதி, திருவாதிரை நாள்கூடிய நல்லோரையில் தோன்றியருளினார். இவரது தாய்மாமனாகிய பெரிய திருமலைநம்பிகள், இவருக்கு இளையாழ்வார் என்று பெயரிட்டார். இளையாழ்வான் என்பது இராமனுக்குத் தம்பி என்னும் பொருளில், இலக்குவனைக் குறிக்குமாதலின், இதுவே இராம அநுஜன் (இராமாநுஜன்) எனவும் வழங்கும். (அநுஜன்–பின் பிறந்தவன், தம்பி).

இவருக்கு எதிராசர், உடையவர், எம்மானார் என்னும் வேறுபல சிறப்புப் பெயர்களும் உண்டு. இவர் இல்லறத்தைத் துறந்து, துறவறம் மேற்கொண்டபோது, இவருக்கு எதிராசர் (துறவரசர்) எனப் பெயர் அமைந்தது. இவர் திருவரங்கம் சென்றபோது, பெரிய பெருமாள் (அரங்கநாதர்) தமது திருப்பொலிந்த சேவடியை இவர்தம் சென்னிமேல் பொறித்து, ''உபய விபூதிச் செல்வத்தையும் உமக்கும் உம்முடையாருக்கும் தந்தோம், இனி நம்முடைய கோவிலைத் திருத்திப் பணிகொள்ளக் கடவீர்'' என்று பணித்தருளினார். அன்று முதல் 'உடையவர்' என்னும் சிறப்புப் பெயர் இவருக்கு வழங்கத் தலைப்பட்டது.

''தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைத்தான் வாழியே'' என்றபடி, திருவரங்கத்தில் இராமாநுசர் பல சிறந்த ஏற்பாடுகளைச் செய்துவைத்தார். நாள்விழா, பட்சவிழா, மாதவிழா, ஆண்டுவிழா என்னும் வெவ்வேறு பலவகைச் சிறப்பு விழாக்கள், அங்கு எக்காலத்தும் செம்மையாக நிகழும்படி செய்து வைத்தருளியவரும் இராமாநுசரே யாவர். திருக்கோட்டியூர் நம்பிகள்பக்கல் 18 முறை திருவரங்கத்தினின்று விடாது தொடர்ந்து நடந்து சென்று, திருவெட்டெழுத்து (அஷ்டாட்சரம்) மந்திரம் உபதேசிக்கப்பெற்றார். நம்பிகள், அம்மந்திரத்தினை வேறு எவர்க்கும் உரைக்கலாகாது எனக் கட்டளையிட்டிருந்தும், உலகத்து உயிர்களின்மேற் கொண்ட பரிவு இரக்கத்தினால், அதனை அனைவருக்கும் வெளிப்படையாக எடுத்துரைத்து உபதேசம் செய்தருளினார். அஃதறிந்து திருக்கோட்டியூர் நம்பிகள் முதலில் சினங்கொண்டாராயினும், இவர்தம் தூய திருவுள்ளத்தின் இயல்பினை உணர்ந்து வியந்து, எம்பெருமானார் (எங்கள் எல்லோருக்கும் தலைவர்) என்ற சிறப்புப் பெயரை வழங்கியதுடன், இனி நம் வைணவ சமயம் இவர் பெயரால் ''எம்பெருமானார் தரிசனம்'' என்றே வழங்கக்கடவதாக என்றும் பணித்தருளினார்.

பிரம்ம சூத்திரத்திற்குப் போதாயன விருத்தியைத் தழுவி, இவர் எழுதிய பாஷ்யத்தின் சிறப்பைக் கண்டு மகிழ்ந்த கலைமகள், இவருக்குப் பாஷ்யகாரர் என்னும் சிறப்பை வழங்கியருளினாள். திருமாலிருஞ்சோலைப் பெருமாளுக்குத் தான் நேர்ந்துகொண்ட நூறு தடாவெண்ணெயும், அக்கார அடிசிலும் சமர்ப்பித்ததினால், ஆண்டாள் நாச்சியாரால், அர்ச்சகர் மூலமாக இவருக்குக் 'கோயில்

அண்ணர்' என்னும் சிறப்புப் பெயர் வழங்கப் பெற்றது.

## யாதவப் பிரகாசரும் எம்பெருமானாரும்,

இவர்தம் இளமைக் காலத்தில் திருப்பெரும் பூதூரினின்று கல்வியிற் கரையிலாத காஞ்சிமா நகரம் சென்று, அங்கே பெருந்தேவித்தாயார் சமேத தேவராசப் பெருமாள் கைங்கரியத்தில் ஈடுபட்டு வந்தார். அப்போது காஞ்சிபுரத் திற்கு அருகில் உள்ள திருப்புட்குழி என்னும் தலத்திலிருந்த யாதவப்பிரகாசர் என்பவர்பால், சிலகாலம் வேத வேதாந்தங்களைப் பாடங் கேட்டு வந்தார். அப்போது அவ்வாசிரியர் சொல்லிவந்த பல பொருள்கள் இவருக்கு உடன்பாடின்றி மனத்துக்குப் பொருந்தாமல், மாறுபாடாகவே தோன்றி வந்தன.

ஒருசமயம் யாதவப்பிரகாசர் ''தஸ்ய யாத கப்யாஸம் புண்டரீகமேவ மட்சிணி'' எனவரும் வேதவாக்கியம் ஒன்றுக்கு, ''இறை வன் குரங்கின் பின்புறம் போன்ற சிவந்த கண் களை உடையவன்'' என்று பொருள் கூறினார். அது கேட்டு இராமாநுசர் அளவற்ற துக்கம் அடைந்தார். திருமகள்நாதனின் சிறந்த கண் களுக்கு உவமையாக, மிகவும் இழிந்த குரங் கின் பின்புறத்தையோ கூறுவது? இது பெரும் அபசாரமல்லவா? என்று கருதிச் சிந்தை மிக நொந்தார். அதற்கு ''இறைவன் சூரியனைக் கண்டு மலரும் செந்தாமரை மலரைப்போன்ற அழகிய சிவந்த கண்களை உடையவன்'' என் பதே, உரிய பொருத்தமான பொருளாகும் அன்றோ? எனப் பணிவுடன் வினவிக் கூறினார். யாதவப் பிரகாசர் அதனைக் கேட்டுச் சினமும் அழுக்காறும் கொண்டார். அதனால் இருவரும் பிரிய நேர்ந்தது.

## திருக்கச்சி நம்பிகள்

பின்னர் இராமாநுசர் தமது தாயாரின் கருத்தின்படி, காஞ்சிபுரத்தில் தேவராசப் பெருமாள் கைங்கரியத்தில் ஈடுபட்டிருந்த திருக்கச்சி நம்பிகள் என்னும் பெரியவரை அடைந்து, அவர்பால் பக்தியுடன் பழகி ஒழுகி வந்ததுடன், அவர் அருளிச் செய்தபடி சாலைக் கிணற்றினின்று நீர்கொணர்ந்து, நாள்தோறும் தேவப்பெருமாளுக்குக் கொடுத்துப் பணிவிடை புரிந்து வந்தார்.

ஒருசமயம் இராமாநுசரின் திருவுள்ளத் தில் சில நினைவுகள் ஐயங்களாக நிலவிவந்தன. அவற்றைப் பற்றித் தேவராசப் பெருமாளின் திருவுள்ளக் கருத்து யாது என அறிய விரும்பி னார். தம் ஐயங்களுக்கு உரிய விடைகளைத் தேவப்பெருமாளிடம் கேட்டுத் தமக்குத் தெரி விக்கும்படி, இவர் திருக்கச்சி நம்பிகளை வேண் டிக் கொண்டார். அவரும் அங்ஙனமே, தேவப் பெருமாளிடம் விண்ணப்பித்துக் கொண்டார். அதற்குத் தேவப் பெருமாள் பின்வரும் ஆறு வார்த்தைகளைக் கூறியருளினார்.

(1) பரத்துவப் பொருள் யானே.
(2) சித்து அசித்து ஈசுவர பேதமே தரிசனம்
(3) உபாயம் பிரபத்தியே
(4) யாக்கையின் முடிவில் என்னை நினைத் தல் வேண்டுமென்பதில்லை
(5) யாக்கையின் முடிவில் வீடுபேறு
(6) இளையாழ்வான் பெரியநம்பியின் திரு வடியைப் பற்றக் கடவன்

என்பனவே அவையாகும்.

## நூல்கள்

இராமாநுசர் நவநிதிகள் போலவும், நவ ரத்தினங்கள் போலவும்,

(1) ஸ்ரீபாஷ்யம்
(2) வேதாந்த தீபம்
(3) வேதாந்த சாரம்
(4) வேதாந்த சங்கிரகம்
(5) கீதா பாஷ்யம்
(6) சரணாகதி கத்தியம்
(7) ஸ்ரீரங்கபாஷ்யம்
(8) ஸ்ரீவைகுண்ட கத்யம்
(9) நித்யம்

என்னும் ஒன்பது நூல்களை அருளிச் செய்தார்.

## பிரபந்ந காயத்திரி

திருவரங்கத்து அமுதனார் என்னும் வைணவப் பெரியார், இராமாநுசரைப் போற் றித் துதித்து அருளிச் செய்த 'இராமாநுச நூற் றந்தாதி' என்னும் துதிநூல், பெரியோர்களால் பிரபந்ந காயத்திரி எனப் புகழ்ந்து துதிக்கப் பெற்று, திவ்வியப் பிரபந்தங்களில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

எம்பெருமானாரின் பெருமை எல்லையற் றது. அது நிலத்திலும் பெரியது; கடலினும் ஆழ்ந்தது; வானினும் விரிந்தது. வைணவ சமயத்தின் ஆழ்வார்களும் ஆசாரியர்களும் ஆகிய அனைவரின் சிறப்பும் பண்புநலங்களும், இராமாநுசர் பக்கல் ஒருங்கே திரண்டு ஓர் உருவாய் அமைந்திருந்தன.

## அவயவ அவயவி

எம்பெருமானார்க்கு நம்மாழ்வார் தலை; நாதமுனிகள் திருமுகம்; உய்யக் கொண்டார் கண்; மணக்கால்நம்பி கன்னம்; ஆளவந்தார் மார்பு; பெரியநம்பி கழுத்து; திருக்கச்சிநம்பி கைகள்; திருக்கோட்டியூர்நம்பி நெஞ்சு; திரு வரங்கப் பெருமாள்அரையர் வயிறு; திருமலை யாண்டான் முதுகு; எம்பார் இடுப்பு; பட்டரும் நஞ்சீயரும் பின்னிருக்கை; நம்பிள்ளை தொடை; வடக்குத்திருவீதிப்பிள்ளை முழங்கால்; பிள்ளை லோகாசாரியர் திருவடி; திருவாய்மொழிப் பிள்ளை பாதரேகை; மணவாள மாமுனிகள் பாதுகை; சேனாபதி ஜீயர் ஊர்த்வபுண்டபுரம்; கூரத்தாழ்வான் புரிநூல்; முதலியாண்டான் திரி தண்டம்; வடுகநம்பி காஷாயம்; திருக்குருகைப் பிரான் பிள்ளான் தோமாலிகை; பிள்ளை உறங்கா வில்லிதாசர் நிழல்; என்று உருவகம் செய்து, பெரியோர்கள் இவர்தம் பெருமையை வியந்து, விளக்கிக் கூறுவர்.

## முடிவுரை

இங்ஙனம் ஆசாரியர்கள் எல்லோரையும் தமக்கு உறுப்பாகக் கொண்டு, இணையற்ற பெருமையினராக விளங்குபவர் எம்பெருமா னார்; எம்பெருமானார்திருவடி வாழ்க! அவர் தம் புகழ் வளர்க!

எம்பெருமானார் தரிசனம் தழைத்தினிது ஓங்குக!

# திருக்கழுமல மும்மணிக்கோவை

ந.ரா. முருகவேள், M.A., M.O.L.

**முன்னுரை :**

பட்டினத்து அடிகளார் தாம் வாழ்ந்து வந்த காவிரிப்பூம்பட்டினத்திற்கு அருகில் உள்ளதும், சைவ சமய ஆசிரியர்களில் தலை சிறந்தவராகிய திருஞான சம்பந்தர் தோன்றி வாழ்ந்து அருள்பெற்றதும் ஆகிய திருக்கழு மலம் என்னும் சீர்காழியில், பேரன்பும் பெரும் பத்தியும் கொண்டிருந்தார். அதனால் அத் தலத்தின்மீது ''திருக்கழுமல மும்மணிக் கோவை'' என்னும் சிறந்த துதிநூலைப் பாடி யருளியிருக்கின்றார். திருஞானசம்பந்தர்பால் அவருக்கிருந்த அன்பின் திறம் எத்தகையது என்பதனை, அந்நூலின் முதற்பாடலே அறி விக்கின்றது.

**'தோடுடைய செவியன்'**

திருஞான சம்பந்தர், சீர்காழிப் பிரம தீர்த்தக் கரையில், ''எச்சில் மயங்கிட உனக்குப் பால் கொடுத்தவர் யார்?'' என்று சிவபாத இருதயர் ஆகிய தம் தந்தையார் அச்சுறுத்தி வினவியபோது, அதற்கு விடையாக 'எனக்குப் பால் கொடுத்தருளியவர் இவர்தான்' என்று, தம்முடைய கையினாற் சுட்டிக் காட்டியபோது பாடியருளியது 'தோடுடைய செவியன்' என் னும் தேவாரத் திருப்பாடல், என்று பெரிய புராணத்திற் சேக்கிழார் சுவாமிகள் தெளி வுறப் பாடியுள்ள செய்தியினை, நாம் நன்கறி வோம்.

ஆனால் ஒரு சில ஆராய்ச்சியாளர்கள், 'இந்நிகழ்ச்சியைக் குறிக்கும் அகச்சான்று ஒன்றும் அப்பாடலிலோ, அன்றி அத்திருப்பதி கத்திலோ காணப்படவில்லை' எனக் கூறித் தமது ஐயப்பாட்டுணர்வைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றனர். மிகச் சிறந்த பேரறிஞரும், சமய உணர்வில் தலைசிறந்த சான்றோரும், தத்துவ வித்தகரும் ஆக விளங்கியிருந்த பேரா சிரியர் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை அவர்கள்கூட, 'இவ்வருள் நிகழ்ச்சியினை வலி யுறுத்தும் அகச்சான்று எதுவும் இத்திருப்பதி கத்திற் காணக் கிடைத்திலது' என்று ''திருஞானசம்பந்தர் காலம்'' என்னும் தம்மு டைய ஆராய்ச்சி நூலிற் குறித்திருக்கின்றார்.

சேக்கிழார் சுவாமிகள் கி. பி. 12-13ஆம் நூற்றாண்டினர். திருஞானசம்பந்தரோ கி.பி. 7ஆம் நூற்றாண்டில் விளங்கியவர். தமக்கு முன்னே 600 ஆண்டுகட்கு முற்பட்ட ஒருவரின் வரலாற்றை விளக்கிப் பாடமுற்படும் சேக் கிழார் பெருமான், அவ்வரலாற்றை யுணர்த் தும் சான்றுகளையும் வாயில்களையும் ஒருங்கு தொகுத்து வைத்துக்கொண்டு, நெறி முறை களிற் பிறழாமல் நன்கினிது ஆராய்ந்து செவ் விதில் தெளிந்த பின்னரே, அதனை விவரித்துப் பாடுதலில் தலைப்பட்டிருக்கின்றார்:

''தோடுடைய செவியன்'' என்னும் திருப் பதிகம் தோன்றிய சூழ்நிலையினைச் சேக் கிழார் சுவாமிகள் உணர்ந்து கொள்ளத் துணை புரிந்தவர், ஒப்பற்ற துறவியும் நற்பெருங் கவிஞரும், சிறந்த சிவஞான அனுபவச் செல்வ ரும் ஆகிய பட்டினத்தடிகளாரே ஆவர் என நாம் கொள்ளலாம்!

**சூழ்நிலையும், வரலாறும்:**

திருஞானசம்பந்தர்பாற் பேரன்பு பூண்டு, அவர்பாற் பெரிதும் ஈடுபட்டுப் பண்புற்ற நிலை யில், கி. பி. 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந் திருந்த பட்டினத்தடிகளார்தாம், முதன் முத லாகத் 'தோடுடைய செவியன்' என்னும் திருஞானசம்பந்தரின் திருப்பதிகம் தோன்றிய சூழ்நிலையையும், வரலாற்றினையும், ஈடு இணையற்ற முறையில் பின்வருமாறு இனிது விளக்கியருளினார்.

''தாதையொடு வந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
அன்னா யோ!என் றழைப்ப, முன்நின்று
ஞான போனகத்து அருள் அட்டிக் குழைத்த
ஆனாத் திரளை அவன்வயின் அருள,
அந்தணன் முனிந்து, தந்தார் யார்? என
அவனைக் காட்டுவன் அப்ப! வானார்
தோஓ டுடைய செவியன் என்றும்
பீஇ டுடைய பெம்மான் என்றும்,
கையிற் சுட்டிக் காட்ட;
ஐய! நீ வெளிப்பட்டு அருளினை ஆங்கே!''

**நம்பியாண்டார் நம்பிகள் :**

இவ்வாறு பட்டினத்தார் விளக்கியிருப்பது கண்டு, அதனை ஒட்டியே கி. பி. 11ஆம் நூற்றாண்டில் விளங்கியவரும், திருமுறைகளைத் தொகுத்து ஒழுங்கு செய்து வழங்கியவரும் ஆகிய நம்பியாண்டார் நம்பிகள், ''செஞ்சடை வெண் மதியணிந்த சிவன் எந்தை திருவருளால், வஞ்சியன நுண்ணிடையாள் மலையரையன் மடப்பாவை நற்கண்ணி, அளவிறந்த ஞானத்தை அமிர்தாக்கிப் பொற்கிண்ணத்து அருள்புரிந்த போனகம் முன் நுகர்ந்தனையே'' எனவும்,

''தோடணி காதினன் என்று
தொல்லமரர்க்கு எஞ்ஞான்றும்
தேடரிய பராபரனைச்,
செழுமறையின் அகன்பொருளை
அந்திச்செம் மேனியனை,
அடையாளம் பலசொல்லி,
உந்தைக்குக் காண அரன்
உவனாம்என் றுரைத்தனையே''

எனவும், ''வேதத் தலைவனை மெல்விரலால் 'தோட்டியல் காதன் இவன்' என்று தாதைக்குச் சூழ் விசும்பிற் காட்டிய கன்று'' எனவும் அருளிச் செய்வாராயினர்!

இங்ஙனம் தமக்கு முற்பட்ட நம்பியாண்டார் நம்பிகளும், அவருக்கும் முற்பட்ட பட்டினத்தடிகளும் விளக்கியிருக்கும் செய்திகளை, ஆதரவும் சான்றுமாகக் கொண்டே, சேக்கிழார் சுவாமிகள் 'தோடுடைய செவியன்' பதிக வரலாற்றினைப் பெரியபுராணத்தில் விளக்கிப் பாடினார். எனினும் இவ்விருவர் கூற்றுக்களை மட்டுமே முழுவதும் ஆதரவாகக் கொண்டு, சேக்கிழார் சுவாமிகள் பாடிவிட்டனர் அல்லர்.

தாம் நம்பியாண்டார் நம்பிகளைப் பின்பற்ற, நம்பியாண்டார் நம்பிகள் பட்டினத்தடிகளைப் பின்பற்றியது போலவே, பட்டினத்தடிகளும் தமக்கு ஏதேனும் ஓர் ஆதரவும் பற்றுக்கோடும் கொண்டுதான், மேலே காட்டிய திருக்கழுமல மும்மணிக்கோவையின் பாடலை அருளிச் செய்தாராதல் வேண்டும், எனச் சேக்கிழார் சுவாமிகள் தெளிவுறத் துணிந்திருந்தார். பிறர் பலரெல்லாம் கூறுவன ஒருபுறம் இருக்க, இதுபற்றித் திருஞானசம்பந்தர், தாமே ஏதேனும் எங்கேனும் குறிப்பிட்டுள்ளனரா? எனத் திருமுறைகளையெல்லாம் சேக்கிழார் கூர்ந்து நோக்கி நுனித்து ஆராய்ந்தார்.

**பொற்கிண்ணத்து அடிசில் :**

திருஞானசம்பந்தர், தமக்கு ''இறைவன் தோடு அணிந்த காதினன் ஆகவும், அம்மையப்பராகவும் காட்சி கொடுத்தான்; பொற்கிண்ணத்தில் அடிசில் (பால்) அளித்தான்; அதனைத் தம் தாதையார் ஆகிய சிவபாத இருதயர் கண்டு பொல்லாது என முனிவுற்றார். இந்நிலையில் தம்மை இறைவன் ஆட்கொண்டு அருளினான்'' எனப் பிறிதோரிடத்தில், வேறொரு திருப்பதிகத்தில்,

''போதையார் பொற்கிண்ணத்து
அடிசில்பொல் லாதுஎனத்
தாதையார் முனிவுறத்
தான்எனை ஆண்டவன்,
காதையார் குழையினன்
கழுமல வளநகர்ப்
பேதையாள் அவளொடும்
பெருந்தகை இருந்ததே''

என்னும் திருப்பாடலாற் கூறி, வெளியிட்டிருப்பதனைச் சேக்கிழார் சுவாமிகள் பட்டினத்தடிகளார் கூற்றுகளோடு ஒப்புநோக்கியுணர்ந்து உண்மை தெளிந்து நின்றார். தம்முடைய ஆராய்ச்சிக்குச் செம்மையான புறச்சான்றும், அகச்சான்றும் உண்டு எனக்கண்டு தெளிந்ததன் பின்னரே, அதனை விவரித்துப் பெரியபுராணத்திற் பாடியருளினார்.

இவ்வாற்றால், நாம் அனைவரும் சம்பந்தரின் முதற்றிருப்பதிக வரலாறு முழுவதும் பழுதின்றி உணர்ந்து கொண்டு மகிழ்தற்கு, முதன் முதலாக இதனை விவரித்து விளக்கம் செய்தருளிய பெருமை, பட்டினத்தடிகளார்க்கே உரியதென்பதும்; சம்பந்தர் ஞானப்பால்உண்ட அருள் நிகழ்ச்சிக்கு அவர்தம் பாடலிலேயே அகச்சான்று உள்ளது என்பதும், நம்மால் ஐயமின்றிச் செவ்விதில் தெளியப்படும்.

**பாழறையும், பள்ளியறையும் :**

திருக்கழுமல மும்மணிக்கோவையின் 4-ஆம் பாடலில், பின்வருமாறு அடிகளார் பாடியிருக்கும் அழகிய கருத்து பெரிதும் சுவைத்து மகிழத்தக்கது. ''கருவுற்றுப் பிறந்த காலம் தொடங்கி, என்னுடைய உள்ளமாகிய மாளிகையானது, காமம் வெகுளி பொய் முதலிய குப்பைகள் நிரம்பிக் கிடந்தது. அதனை யான் பெரிதும் முயன்று போக்கித் தூய்மை செய்தேன். அம்மாளிகையின் ஒருசார் மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளாகிய எருமைக் கடாக்கள் கட்டி வைக்கப்பட்டிருந்தன. அதனால் ஒரு தொழுவம்போல் அம்மாளிகை பெரிதும் பழுதுபட்டுக் கிடந்தது; யான் அக்கடாக்களைக் கட்டவிழ்த்து விட்டு அகற்றி ஒழித்தேன்; பின்பு அம்மாளிகையை அன்பினால் மெழுகினேன்; அதில் அருள்விளக்கு ஏற்றினேன்; அதனால் அம்மாளிகையில் அடர்ந்து செறிந்த இருள் ஒழிந்தது; அம்மாளிகையில் மெய் (உண்மை) என்னும் விதானத்தை விரித்தேன். அங்கே என்னுடைய சிந்தை ஒரு பாழறையாகக் கிடந்தது. அதனை ஒரு நல்ல தூய அழகிய பள்ளியறை ஆக்கினேன். ஆக்கியபின் அதன்கண் தியானமாகிய செந்தாமரைப் பூந்தவிசினை இட்டு அமைத்தேன். இப்போது என்னுடைய மனமாகிய மாளிகை இருள் செறிந்து பாழடைந்து கிடந்த நிலைமை மாறி, புத்தம் புதிய பொலிவும் தூய்மையும் பெற்று, குடியிருக்கத் தகுந்த ஒரு சிறந்த அழகிய மாளிகையாகத் திகழ்கின்றது. ஆதலின் புகலி நாயகனே! பிரளயவிடங்கனே! அம்மாளிகையில் எழுந்தருளிக் குடியிருப்பதற்கு நீ,

அமையாக் காட்சி இமயக் கொழுந்தையும் உடனே கொண்டு, இங்கு எழுந்தருளுதல் வேண்டும்'' என்பது, இப்பாடலின் திரண்ட கருத்து. நம் மனமாகிய மாளிகையைப் பாழறையாக்காமல், பள்ளியறையாக்கி, அங்கே சிவமும் சக்தியுமாகிய இருவரையும் குடியமர்த்தி வாழச் செய்தல் வேண்டும் என்பது, இப்பாடலில் அழகுற விளக்கப் பெற்றுள்ளது.

தோணிபுரம் :

பட்டினத்தடிகளார் 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற முறையில் கலத்தினும் காலினும் பெருவாணிபம் புரிந்து வந்தவர். ஆதலின், தம்முடைய வாழ்க்கையைக் கடற் பரப்பிற் செல்லும் ஒரு மரக்கலத்தோடு தொடர்புறுத்தி உருவகப்படுத்திப் பின்வருமாறு அழகுறப் பாடுகின்றார்: ''உலகம் ஒரு பெருங் கடல் போன்றது. அதன்கண் பல்வேறு வகையான சமயங்களாகிய துறைகள் பற்பல உள்ளன. இங்ஙனம் பல துறைகளை உடைய உலக வாழ்க்கையாகிய பெரிய கடலில், உடம்பின் தோலாகிய பலகையில், என்பு என்னும் ஆணிகளைப் பொருத்தி, நரம்பு ஆகிய கயிறுகளால் கட்டி, முதுகந்தண்டு ஆகிய பாய்மரத்தினை அமைத்து, ஐம்பொறிகளாகிய வாயிற்படிகளை உடைய உடம்பு என்னும் மாயமாகிய நாவாயில் (தோணியில்), பாவ புண்ணியங்களாகிய சரக்குகளை ஏற்றிக்கொண்டு, காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சர்யம் ஆகிய காவலர்களையும் ஏவலர்களையும் இருக்கச் செய்து, நெடுநீர் என்னும் பெரிய கயிற்றில், சோம்பல் என்னும் நங்கூரத்தைச் சேர்த்து, மனம் என்னும் பாயை விரித்து, அளவற்ற ஆசை என்ற கடுமையான சூறைக்காற்று வீச, சுவர்க்கம் நரகம் முதலான பல்வேறு தீவுகளுக்கு மாறி மாறிச் சென்று அலைந்து, கூற்றுவன் என்னும் பெரிய பாறையில் தாக்குண்டு, உடம்பாகிய மரக்கலம் சிதைந்து அழிய, கடல் நீரில் மூழ்கி அறிவு அழிந்து மயங்கிக் கிடக்க, இயமன் என்னும் சுறாமீன் பிடித்து இழுக்க, கொடிய நரகம் ஆகிய படுகுழியில் அழுந்தி, யான் அடைகின்ற துன்பங்களுக்கு ஓர் அளவேயில்லை'' என்று, மனித வாழ்க்கையின் பலவகை அவலங்களையும் துயரங்களையும், பட்டினத்து அடிகளார் அழகுறக் குறிப்பிட்டருளுகின்றார். இங்ஙனம் வாழ்க்கைக் கடலில் தத்தளிக்கும் தம்மைச் சீர்காழியிலுள்ள சட்டைநாதப் பெருமான் ஆகிய மீகாமன், கடலினின்று எடுத்துக் கரை ஏற்றி, பிரணவமாகிய தோணியில் உய்த்துக் காப்பாற்றி அருளினன் என்றும்; அதனால் தோணிபுரம் என்னும் சீர்காழியில் பிரணவமாகிய தோணியில் எழுந்தருளியுள்ள தோணியப்பருடைய திருவடிகள்தான் புகலிடம் எனத் தெரிந்து கொண்டேன்'' என்றும், பட்டினத்தார் பாடியிருப்பது, பல்காற் படித்து மகிழ்தற் குரியது. சீர்காழிக்குரிய பன்னிரண்டு திருப்பெயர்களுள் ஒன்றாகிய தோணிபுரம் என்னும் பெயரினைத் தழுவி அமைக்கப் பெற்றுள்ள, இப்பாடலின் சொற்பொருள் நலங்கள் பெரிதும் சுவைத்து மகிழத்தக்கன.

திருவருட் செல்வம்:

''காழி நாயகனே! பொன்மலையைச் சேர்ந்த கருங் காக்கையும் பொன்னிறம் அடையும் என்றும்; நிறைமதியின் குளிர்ந்த நிலவால் உடலின் வெப்பம் தீரும் என்றும்; ரசகுளிகையானது செம்பிலுள்ள களிம்பை நீக்கிப் பொன்னாக்கும் என்றும்; கருட தியான சித்தி கைவரப் பெற்றோர் பார்வையினாலேயே பாம்பின் கொடிய விடம் தீரும் என்றும்; ஞாயிற்று ஒளியின் முன்னர் இருள் அகன்றொழியும் என்றும்; உலகிற் பழமொழிகள் வழங்கும். ஆதலின் நின்னை அடைந்த என்னைக் குற்றங்களெல்லாம் நீக்கிக் குணங்களெல்லாம் அமையுமாறு செய்து, திருவருட்செல்வம் பெருகுமாறு உதவிப் பேரின்பம் அளித்தருளுதல் வேண்டும்'' என்று பிறிதொரு பாடலில் அடிகளார் இறைவனை வேண்டித் துதிக்கின்றார்.

அருள் புரிந்து காக்க !

''வேதம் போன்ற கோபுரங்களையும், சிவாகமம் போன்ற மணிமேடைகளையும், இந்திரன் கண்கள் போன்ற மந்திர வாவிகளையும் கொண்ட, திருக்கழுமலத்தில் எழுந்தருளியுள்ள பெருமானே! நின் அருமை பெருமைகளை அறிந்து கொள்ளாமல், மனிதர்களைப் போலவே இறந்தும் பிறந்தும் உழலுகின்ற எளிய தேவர்களை, ஒரு பொருளாகக் கருதி, இவ்வுலக மக்கள் சிலர் வீணே வழிபட்டு வருகின்றனர். அவர்களின் செயல், கறவாத கல்லாலான பசுவினுடைய வாயில் பசும்புல்லைச் செருகி நீர் அருத்தி, அவற்றினால் அக் கற்பசுவினிடமிருந்து பால் கறக்க விரும்பி அதன் மடியை வருடுகின்ற பேதைகளின் செயல்போலவும்; நச்சுத்தன்மை வாய்ந்த எட்டி மரத்தின் கனியைப் பெற விரும்பி, அதனை அரும்பாடு பட்டு வளர்க்கும் அறிவிலிகளின் செயல்போலவும்; உலையில் அரிசி இடுவதற்கு விரும்பி, வெற்று உமியைக் குற்றும் வீணர் செயல்போலவும்; களர் நிலத்தை உழுது எருப்பெய்து விதை விதைத்து விளைபயன் கொள்ள முயலும் பித்தர்களின் செயல்போலவும் உள்ளது. அவர்களைப் போல வாழ்நாள் அனைத்தும் வீணாளாக்கி, இம்மையும் மறுமையும் செம்மையில் பொருந்தாமல் இடருற்று வருந்தாது, நின் சேவடித் தாமரைப் பூவினைப் புனைந்து, நாத் தழும்பு ஏற ஏத்தி, அன்புநீர் நிறைந்த இதயமாகிய திருக்குளத்தில் மலர்ந்துள்ள, தாமரையின் மணம்போலும் நின்னைக் கண்டு வணங்கிப் பெருமிதம் உற்று, பண்டை வாதனைகள் தீர்ந்து, நிறைகுடம்போல, யான் அசைவற்று இருக்க அருள் புரிந்து காப்பாயாக'' என்னும் கருத்தமைந்த பாடல், பல்காற் பயின்று சுவைத்து மகிழத்தக்கது.

மூவகைத் தேகம்:

திருக்கழுமலத்தில் தண்ணீர்ப் பந்தர், அன்னசத்திரம், நாடக அரங்குகள், கலைபயில்

கழகங்கள், பலர் பயில் மன்றங்கள் முதலியன அமைந்துள்ளன என்றும்; அவைகளின்இயல்புகள் இவை இவை என்றும்; கவிதைச் சுவை அமைய இந்நூலின் 25ஆம் பாடலில், பட்டினத்தடிகளார் பின்வருமாறு பாடி அருள்கின்றார். அதன்கண், ''பெருமானே! இவ்வுலகத்திற் கெல்லாம் பேரரசர் நீர். ஆதலால் எண்ணில்லாத பிரமாக்கள் ஆகிய உழவர்கள், இவ்வுலகமாகிய வயலில், சராசரத் தொகுதியாகிய விதைகளை விதைத்து, மரங்கள் மிருகங்கள்பறவைகள் மானிடர்கள் ஆகிய பயிரை வளர்த்தனர். அளவில்லாத திருமால்கள் ஆகிய காவலாளர்கள், அப்பயிரை நன்கு பாதுகாத்தனர். அப்பயிர் விளைவு முற்றியதும் காலதேவனின் ஏவலர்களாகிய பணியாளர்கள், புன்புலால் யாக்கை ஆகிய தழை வைக்கோல்களை அகற்றி, உயிராகிய நெல்லைப் பிரித்துப் பூதசாரதனு-பூதமகாதனு - பூதபரிணாமதனு என்னும் மூன்று வகைஉடம்பு ஆகிய வண்டிகளில் ஏற்றி, சுவர்க்கம் உலகம் நரகம் என்னும் இடங்களில், சிற்சில காலம் அவ்வுயிர்களை இருக்க வைக்கின்றனர். அவ்வுயிர்களுள் ஒரு சிலவற்றை, நீ நின் திருவடியாகிய வீட்டில் சேர்த்துக் கொள்கின்றாய். இவ் அருட்செயலைக் கூர்ந்து நோக்கி ஆராய்ந்தால், ஆறில் ஒரு கூறு அரசருக்கு உரிய வரிப் பொருளாகும் என்னும் நீதியினை, நீயும் கடைப்பிடிக்கின்றாய் போலும்! என்று தெரிகின்றது'' என்னும் கருத்தமையப் பாடியருள்கின்றார்.

இப்பாடலில் உடம்பாகிய வைக்கோலினின்று உயிராகிய நெல்லைப் பிரித்து, அந்நெல்லை மூன்று வகை வண்டிகளில் ஏற்றிப், பொன்நிலம் நிரயம் இந்நிலம் என்னும் இடங்களுக்கு அனுப்பி வைப்பதாக, அடிகளார் பாடியிருப்பது அறிதற்குரியது. உயிர்களுக்குப் பூதனாசரீரம் (தூலதேகம்), புரியட்டக சரீரம் (சூக்கும தேகம்), யாதனா சரீரம் (தூலசார தேகம்) என்னும் மூன்று வகை உடம்புகள் உண்டு. நிலம் நீர் தீ வளி வெளி என்னும் ஐந்து பூதங்களால் அமைந்தது பரு உடம்பு. இது நனவு நிலைக்கு உரியது. சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் மனம் புத்தி அகங்காரம் என்னும் எட்டினால் அமைவது நுண்ணுடம்பு; இது கனவு நிலைக்கு உரியது. யாதனா சரீரம் என்பது, உயிரானது துறக்க நிரயங்களுக்குச் சென்று, இன்பதுன்பங்களை நுகர்தற்குஏற்றது. இவைகள் பூதமகாதனு பூதசாரதனு பூதபரிணாமதனு எனவும் வழங்கப்படும். இச் செய்திகளைக் ''கண்ட நனவைக் கனவுணர்வில் தான்மறந்து'' என்னும் சிவஞானபோத வெண்பாவும், ''பூதனா சரீரம் போனால் புரியட்டரூபம் தானே'' என்னும் சிவஞான சித்தியார் செய்யுளும் விளக்கும். இவற்றை,

''புலாலுடை யாக்கைப் பலாலம்அது அகற்றி,
அற்றம்இல் உயிர்எனப் பெற்றநெற் றிரளைப்
பூத சாரதனு, பூத மகாதனு,
பூத பரிணாமம் புகலுறும் யாக்கைஆம்
மூவகைப் பண்டியின் மேவர ஏற்றி,
பொன்னிலம் நிரயம் இந்நிலம் என்னும்
இடந்தொறும் ஆங்கவை அடங்க வைத்து''

என்று அடிகளார் அருளிச் செய்துள்ள வரிகளால் இனிது உணரலாம். இவ்வரிகளில் அமைந்துள்ள சைவசித்தாந்த தத்துவ நுண் பொருள்கள் தகவுற அறிந்து மகிழத்பாலன.

**வாழ்க்கை நிலையாமை :**

இவ்வாறே 28ஆம் பாடலில், இந்திரசாலம் கனவு பேய்த்தேர் என்னும் மூன்றையும், இவ் வுலகின் நிலையாமையை வற்புறுத்துவதற்குரிய உவமைகளாக, அடிகளார் எடுத்துக் காட்டியிருக்கின்றார் :

''அறிதுயில் அமர்ந்த அச்சுதன் வாழ்க்கையும்,
அழியா இன்பம்என்று ஒழியாதுஉரைப்பினும்,
கற்றவர் கருத்தின் உற்று நோக்குழி,
இந்திரசாலம் முந்துநிள் கனவு
வெண்தேர் போல உண்டெனத் தோன்றி,
இலவாம் ஆதலின் நலம்அல''

என்று அடிகளார் குறிப்பிட்டிருப்பது ''நீரில் எழுத்தும் நிகழ்கனவும் பேய்த்தேரும் ஓரின் அவை இன்றாமாறு ஒப்பு'' என்று சிவஞான போதமும், ''கண்ட இந்திரமாசாலம் கனாக் கழுதுஇரதம் காட்டி, உண்டுபோல் இன்றாம் பண்பின் உலகினை அசத்தும் என்பர்'' என்று சிவஞான சித்தியாரும் கூறுவதனை, நினைவூட்டுகின்றது.

**குழவியர் மழலை :**

இவ்வாறே ''எழுத்தின் உறழாது, வழுத்து பொருள் இன்றிக் குறிப்பொடு படாது, வெறித்த புன்சொல்லே ஆயினும், பயந்த தம் சேயவர் (குழந்தைகள்) சொலும் மொழி, குழலினும் யாழினும் அழகிதாம்'' எனவரும் வரிகள், புறநானூற்றில் அவ்வைப் பிராட்டியார் அருளிச்செய்த ''யாமொடுங் கொள்ளா, பொருளொடும் புணரா; பொருளறி வாரா ஆயினும், தந்தையர்க்கு அருள் வந்தனவால், புதல்வர் தம் மழலை'' என்னும் வரிகளை நினைவூட்டுகின்றன. இங்ஙனம் இந்நூலின் ஒவ்வொரு பாடலும் செவ்விய சொற்பொருட் சுவைகள் துளும்பி நிரம்பித் திகழ்கின்றன.

(முற்றொடர்ச்சி)

# திருமந்திர யோகம்

'கவியோகி' 'மகரிஷி'
தவத்திரு சுத்தானந்த பாரதியார் அவர்கள், சிவகங்கை

### அபக்குவச் சீடர்

ஞானமில்லாதவர் காஷாயங் கட்டிப் பிச்சையுண்டு, ஈனத் தொழிலே செய்து, சோற்றாண்டிகளாகத் திரிந்தால், நாட்டின் மானமும் நன்மையுமே கெட்டுப் போகும். ஆதலால் ஈனப் பதர்கள் துறவுக்கோலம் கொள்ளக் கூடாது; ஒழுக்கமில்லாதவர்களின் வேடத்தைக் கழற்றிவிட வேண்டும். அதுவே நாட்டிற்கு இனிதாம்.

ஞானமில்லார் வேடம் பூண்டிந்த நாட்டிடை
ஈனமதே செய்து இரந்துண் டிருப்பினும்
ஆன நலங்கெடும் அப்புவி; ஆதலால்
ஈனவர் வேடங் கழிப்பித்தல் இன்பமே!

நல்ல செயலால் இன்பமும், தீயதால் துன்பமும் ஒரு நாட்டிற்கு வரும். ஆதலால் அரசன் மக்களை நல்வழி நடக்கச் செய்க; போலிகளைக் கண்டித்துத் திருத்துக. பழிகுலத்தரான இழிகுலத்தார் வேடத் துறவைக் கண்டிக்க வேண்டும். பொய்த்தவம் செய்தவர் புண்ணியராகார். அவர் நரகத்திற் புகுவார். சத்திய ஞான யோகத்தாலேதான் மெய்த்தவம் நிலைக்கும். பொய்வேடர் ஊரை ஏமாற்றி உண்பதால் மெய்த்துறவிகளின் பிச்சையையும் திருடியவராவார். பொய்யர் மெய் வேடம் போலவே நடந்தாலும் பயனில்லை. உணர்ந்து அறிந்த உத்தமருக்கே, உய்வுதரும் துறவு பயனாகும். தவம் புரியும் ஞானிகளுக்கே துறவுக் கோலம் தகும். அவமிக்கவர் துறவுக் கோலத்திற்குத் தகார். விபூதி, ருத்ராக்கம், குண்டலம் எல்லாம் ஓதியுணர்ந்து நிற்கும் தீதில்லாச் சிவயோகிகளுக்கே தகும். ஆனால் உடல் வேடம் உயிருக்குத் துணையில்லை; உயிர் கழன்றால் வேடம் உடனே கழலும். உயிரை வைத்தே உடல். உடல் உயிர் தாங்கி; உயிர் உடலைத் தாங்குகிறது. இந்த உண்மையை அறியாதார் கடலில் அகப்பட்ட கட்டைபோல் உறுதியற்றுக் குணதொந்த அலைகள் மோதி அலைவர்.

உடலில் துவக்கிய வேடம் உயிர்க்காகா;
உடல்கழன்றால் வேடம் உடனே கழலும்
உடலுயிர் உண்மையென் றோர்ந்து கொள்ளாதார்
கடலில் அகப்பட்ட கட்டை யொத்தாரே

சிவவேடர் மையல், மடமையிருள், மனமாயம், மாதர்வலைப்படுதலின்றி, அகம் பாவச் செயலற்றுத் திருவருளைப் பற்றித்தாமே தாமாய்ச் சுதந்தரராக இருப்பார். வெளி வேடம் என்ன பயன்? இறைவனைப் பற்றி அருளின்பந் தேடுக. அருளின்பந் தரத்தக்க குருவேண்டும்; அதைப் பெறத்தக்க பக்குவச் சீடன் வேண்டும்.

கொள்ளினும் நல்ல குருவையே கொள்ளுக;
உள்ள பொருள் ஆவியுடன் ஈக
எள்ளத் தனையும் இடைவிடாதே நின்று
தெள்ளி யறியச் சிவபதந் தானே

உடல் பொருள் ஆவியெல்லாம் அர்ப்பணம் செய்து, நல்லகுருவை அடைந்து, இடைவிடாமல் அவன் காட்டும் வழியே நின்று அறிவைத் தெளிந்தறிந்தால், சிவபதம்தானே கூடும். ஆனால் உண்மைக் குருவை உலகோர் அறிந்து மதிப்பதில்லை.

குருட்டிடை ன நீக்கும் குருவினைக் கொள்ளார்;
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்;
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழி விழுந்தாரே

சுருதி, யுக்தி, அனுபவங்களுக்கு ஒத்து வராமல் கண்டதைச் சொல்லி மனம்போனபடி நடந்து, தன்னையே கடவுள் அவதாரம் என்றும், தன்னைச் சரண்புகுந்தாலே இன்பம், இல்லையேல் துன்பம் என்றுமிரட்டி, அச்சுறுத்திச் சுயேச்சாதிகாரம் செலுத்தும்போலிக் குருமார் உண்டு. அவர் பகட்டிலும் வேடத்திலும், அவர் தரகரான அடிமைப்பட்டாளங்களின் வாய் வெடிகளிலும், அற்புதக் கதைகளிலும் சிக்கி, மனிதர் விழுந்து, பணத்தையும் கொட்டி, கைகட்டி நிற்கிறார்கள். இப்படி அவதார தர்பார்

நடத்தும் போலிக் குருமார், ஒருநாள் சாவின் வாயில் விழுந்து மறைகிறார்கள்; பிறகு அவர் வளர்த்த போலிச் சீடர் சொத்துக்காகவும் பதவிக்காகவும், அடித்துக் கொண்டு கட்சி கட்டுகின்றனர். அல்லது தமது போலிக் குருவைக் கடவுள் என்றும், உடலுடன் மறைந்து உலகெங்கும் உலாவுகிறார் என்றும், அன்பரைக் காக்க அருவாக வருகிறார் என்றும், பொய் கட்டிப் புராணங்கள் எழுதி, உலகில் பொய்யைப் பரப்புகிறார்கள். இவர்களால் மனிதர், மனித வணக்கமே செய்து, கடவுளை மறக்கிறார்கள். எல்லாம் வல்ல இறைவனுக்குப் பதிலாக, செத்துப் போன மனிதனின் படத்தையோ, சிலையையோ வைத்து ஆடிப்பாடி அமளி செய்கிறார்கள். இந்தக் கூத்தினாலே தான் மனித சமுதாயம் இன்னும் குருட்டு நம்பிக்கையில் சுழன்று, தெய்வத்தன்மை பெறாதிருக்கிறது. சுத்தான்ம சொரூபத்தைக் காட்டி, சுத்தோஹம்பாவனையிற் கூட்டி 'இதுதான் இன்பம்' என்று உணர்த்துவோனே குருவாவான். தன் உடலைக் காட்டி இதை வணங்குவதே இன்பம் என்பவன், தானும் அகம்பாவத்தால் ஏமாந்து பிறரையும் ஏமாற்றுகிறான். தானும் ஞானமில்லாக் குருடனாகிப் பிறரையும் மூடக் குருடராக்குகிறான். குருடும் குருடும் குருட்டு விளையாடல் செய்து, பாமர மக்களின் மதியை மயக்கி, முடிவில் குருடும் குருடும் அஞ்ஞான அந்தகாரக் குழியில் அல்லது புதை குழியில் விழுந்தொழிகிறார்கள்.

மனமாயக் கண்ணாடி நிழலையும் காணாதவர், இன்னது பொருள், இன்னது நிழல், இன்னது மெய், இன்னது பொய், போலித் தோற்றம் என்று அறியாதவர், வினைப்பயன் போகும் வழி இன்னது என்று விளங்கிக்கொள்ள மாட்டார்கள்; முன்புறம் ஒழுங்காக நேர்மையாக வரமாட்டார்கள். கொல்லை வழியை விரும்பிச் சென்று, பாவஞ் செய்வார்கள். ஏனென்று அரற்றினால் என்ன என்று கேட்கவும் துணிவில்லாமல், அடிமை வழியே செல்வர் கொல்லை வழியே குதிப்பர். சாதகன் மனமும் சொல்லும் செயலும் அருள்வழியே நிற்க வேண்டும். வாயொன்று சொல்லி, மனமொன்று சிந்தித்துத் தானொன்று செய்து வந்தால், உறுதி கெட்டலைய வேண்டியதுதான். இறைவனருளை உயிர்க்கனல் என்று தெளிந்து உணர்ந்தால், உலகை முகத்துதி செய்துஅடிமை வாழ்வுவாழ வேண்டியதில்லை. பிறர் தன்னைப் பற்றி எது நினைத்தாலும் சரி, ஞானி அருள் வெளியில் உலாவுவார். தவத்திடை நிற்பார். சிவத்திடை நிற்பார். அவர் கர்மங்கூட சிவத்திடை நிற்கும்; அவர்கள் சிவமயமாகக்கருதியே சிவசேவை செய்வர். அவர்கள் செய்வதெல்லாம் சிவபுண்ணியமே. தவவழி நில்லாதவர் பவவழி நின்று, வினைப் பயனை அனுபவிப்பார்கள். அவர்கள் செயல் சுயநலச்செயலாகும். கன்றல், கோபித்தல், தீயனகருதல், தீயன செய்தல், கண்டதைத் தின்பது, பாபத்தீனி, மலசுகங்களை நுகர்தல், பிறர்க்குக் கெடுதலே செய்தல், மாறுபட்ட உள்ளம், அணிமணி மினுக்கல், தற்பெருமை கூறல் ஆகியவை இறைவன் பால் அன்பு பூண்ட அடியார்க்கு இயற்கையாகாவாம்.

கன்றலும் கருதலும் கருமம் செய்தலும்
தின்றலும் சுவைத்தலும் தீமை செய்தலும்
பின்றலும் பிறங்கலும் பெருமை கூறலும்
என்றிவை யிறைவன்பால் இயற்கை அல்லவே

அபக்குவர் அருட்காலை விடிவதை அறியார்; மன்றுள் வெளி காணமாட்டார். விடிந்த வெளியிலும் விழிக்க மாட்டாது, அஞ்ஞானத்தில் கண் மூடியுறங்குவார். புறம் நோக்கும் வழியைக் கட்டுப்படுத்தி, உள்முகமாகக் கண்டால் உள்ளே ஒரு விடிவிளக்கு, அருள்மணி விளக்கு எரிவதைக் காணலாம். சாதகன் முத்தி வழியில் பிறழாது செல்ல வேண்டும். பசு பாசத்தை மாற்றும் அன்பு வழிச்சென்று, பெத்தமான பந்தம் அற்று, முத்தனாகும் தத்துவம் அறிந்தும் அருள்வழிப்படாத பைத்தியக் காரனுக்குப் பக்தி முத்தி சித்தி எதுவும் வாய்க்காது. ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயிஆகியஐந்து மலங்களையும் மாற்றும் வகையை நினையாதவன், காமக் குரோத லோபமே தோயும் தொழிலை விடாதவன், பொய்புனைந்துரைப்பவன், கோட்சொல்பவன், பிறப்பையும் இறப்பையும் அஞ்சாதவன், முப்பொருளை நம்பாத அன்னியன், அசத்தான சீடனாவான். இவனுக்கு ஞானம் ஏறாது.

மன்னும் மலனமந்தும் மாற்றும் வகையோரான்
துன்னிய காமாதி தோயும் தொழில் நீங்கான்
பின்னிய பொய்யன், பிறப்பிறப் பஞ்சாதான்
அன்னிய னாவன் அசற் சீடனாமே

## பக்குவச் சீடன்

சுருதியே கண்ணாகச் சாதனத் தொழில் அறியும் அன்பர், குற்றமே காண முடியாத பரமகுருவை அறிவார்; அருள் வழியறியும் சாதகர், குருவை அறிவார்; அருள்வழிச் செல்லும் சாதகர், குருவையடைந்து பணிந்து நிற்கும் வழியும் அறிவார். கல்வி கேள்வி ஆர்வம் பணிவு அன்பு இவையற்ற மற்றச் சீடர் அழிவே அறிவார்; அழிவழியே சென்று, கண்டவரைப் பின்பற்றிக் கெடுவர் அசீடர்.

தொழிலறிவாளர் சுருதி கண்ணாகப்
பழுதறியாத பரம குருவை
வழியறிவார், நல்ல வழியறிவாளர்
அழிவறிவார் மற்றை யல்லாதவரே

இறைவா முன்னே நான் உலக விஷயங்களிலேயே மனம் பதைத் தொழிந்தேன். இப்போது உன்னை நாடியே பதை பதைக்கிறேன். இனி உன்னைத் தவிர யாருடனும் கூடேன். என்வினையைச் சிதைத்து, சங்கற்பந் தீர என்னை உன் திருவடியால் உதைத்து, உடையாய், என்னை உகந்து ஆண்டுகொள் என்று, நல்ல சீடன் ஆர்வமுடன் முறையிடுவான். இப்படிச் சிவனுக்காகப் பதைக்கும் போதே பரவித்தை புலப்படும்; புருவநடுவிலிருந்து நோக்கிச் சித்தம் சிதையாது, தியானத்தில் செம்மையாக மனதை நிறுத்தி, இறை

வனையே துதிக்கும் அன்பருக்கு, அருளுப தேசம் கிடைக்கும்; வழி துலங்கும். இப்படி அன்பு செய்யும் சாதகனது தூய சிந்தையில் எழிலார் இறைவன் இடங்கொள்வான்; அப்போதே விழலான வினைகள் போகும், திருவடிக் காட்சியாகும். பர தத்துவம் அறிந்து, ஆராய்ந்து ஆத்திக நெறி கண்டு, பிறவி நெறியை அஞ்சி, முத்தியான அறநெறியே நடத்த வல்லவனே சீடனாவான். சத்து அசத்து இன்னதென்று உன்னி, சித்தாகிய உணர்வை உருக்கிச் சிவனருள் கைகாட்டும் வழிகாட்டும் பத்தியுடன் ஞானம் பெறப் பணிந்து, ஆனந்த சக்தியில் தன் இச்சையை அர்ப்பணிப்பவனே நல்ல சீடனாவான். குருவினிடம் உள்ளன்பும் ஞானசித்தியில் இச்சையும், நான்கு சாதனங்களில் தீவிர முயற்சியும் அதிகரிக்கவே குருவின் திருவடிப் பெருமையால் சாதகன் ஞானியாவான். அவ்வுணர்வுடன் இணங்கிச் சாதனம் செய்தால், பராபரத்தின் எல்லையே அடைவான். கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு எங்கும் சிவனை உன்னி, ஆவுடையாளான சிவசேதனத்துடன் சாதனம் செய்த சாதகன், குருவானவன் சீடனை இறைவன் அன்பில் உய்ப்பான்; இறைவனையே சரணடையச் செய்வான். இறைவன் அன்பில் உய்ப்பான்; இறைவனையே சரணடையச் செய்வான். இறையை வணங்கிக் குறையுணர்த்திக் குணங் கொண்டு போற்றிச் ''சிறையுடல் நீ இல்லை; நீ ஆன்மா; உன் அறிவுக்கறிவானவன் சிவன்; அவனே அறிவிப்போன்'' என்று உணர்த்துவான். அப்படி அறிவிப்பவனே சன்மார்க்கி ஆவான்.

இறையடி தாழ்ந்து, ஐவணக்கமும் எய்திக்
குறையது கூறிக் குணங்கொண்டு போற்றச்
சிறையுடல் நீயறக் காட்டிச் சிவத்தோடு
அறிவுக் கறிவிப் போன்சன் மார்க்கியாமே

வேதாந்தம் என்பது வேட்கை விடும் நெறியே. நான் எனது எனக்கு என்னும் மூவகை ஆசையுணர்வே வேட்கை. அதுவே சஞ்சலம். அதை ஒழித்து நிர்ச்சஞ்சல மாயிருத்தலே சாந்தம்; அதுவே வேதசாரம். சித்தாந்தம்வாழ்க்கை நெறியின் வழியை மாற்றி அருள் வழியுய்த்து வேட்கையை மாற்றும். இவ்வாறு சித்தாந்தத்தால் வேட்கை விடச் செய்து, வேதாந்த சாந்தந் தரும் குருபாதத்தை நிழல் போலப் பற்றிப் பணிபவன் நல்ல சீடனாவான்.

சற்குணம் வாய்மை தயாவிவேகம் தண்மை
சற்குரு பாதமே சாயைபோல் நீங்காமே,
சிற்பர ஞானமே தெளியத் தெளிவோர்தல்
அற்புதமே தோன்றலாகும் சற்சீடனே

இத்தன்மைகளுடைய பக்குவச் சீடனுக்கே சற்குரு தீட்சை தருவார்.

## திருவடிப் பேறு

அருள் என்பது சக்தி; யோகமுதிர்ச்சியால் மின்சார ஓட்டம்போல் அது யோகியின் உச்சி முதல் நகக் கணுவரையில் பாய்ந்து சுழலும், அந்தச் சுழற்சி, கைவிரல்களிலும், காலவிரல்களிலும் தீவிரமாக இருக்கும்; மின்பொறியைத் தீண்டுவதுபோல், யோகியின் கைகாலைத் தீண்டுதல் அருட்சக்தி சுரக்கும். அதனாலே தான் திருவடிக்கும் திருக்கைகளுக்கும் அவ்வளவு பெருமை; கண்களில் மிகத் தீவிரமாக அருட்கனல் பரப்பும். சற்குருவின் திருவடிப் பணிதலுக்கு இந்த அருட்சுரப்பினாலேதான் பெருமை.

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்;
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிவமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே

அதேபோலத் திருக்கைக்கும் பலன் உண்டு.

சிவந்த குருவந்து சென்னிகை வைக்க
உவந்த குருபதம் உள்ளத்து வந்ததே

தாள் தந்த போதே தலைதந்த எம்இறை
வாள்தந் தருஞான வலியையும் தந்திட்டு,
வீடந்த மின்றியே ஆள்கென விட்டருட்
பாடின் முடிவைத்துப் பார்வந்து தந்ததே

திருவடியை, இதயம் கண் சிரம் இம்மூன்றிலும், பதிவித்து, மாசற்ற இன்பமளிக்கிறான் குரு. இவ்வாறு திருவடி தந்து சக்தி பொழிந்து, அருளுணர்ச்சிதூண்டித் தன்னையறிய வைத்துத் தத்துவாதீதத்திற் சாரச் செய்து பாசந் தணிப்பவனே சற்குரு.

தாள் தந்தளிக்கும் தலைவனே சற்குரு
தாள்தந்து தன்னையறியத் தரவல்லோன்
தாள்தந்து தத்துவா தீதத்துச் சார்சீவன்
தாள்தந்து பாசந் தணிக்குமவன் சத்தே

குருதேவன் தன் சக்திப் பொழிவால் அடியார் வினை களைந்து, யம பயம் ஓட்டிப் பிறவித் துயர் தீர்க்கிறான். அவன் அருட்சக்தியால் கறுத்த இரும்பைக் கனகமாக்கும் ரசவாதி போல், வினைப் பிறவி தவிர்த்து ஆன்மாவைச் சிவமயமாக்குவான். தர்க்கமத வாதங்களிலும் தானே பெரியவன் என்னும் செருக்கிலும் திரிபவன் சற்குருவல்லன். தன்னையடைந்த சீவனின் பாசத்தை நீக்கி, மலமறச் செய்து, தானும் சிவநேசங்கொண்டு ஆன்மாவையும் பரமசிவ நேசங் கொள்ளச் செய்பவனே குருவாவான்.

பரனோடு தன்னையும் நேசத்து நாடி
மலமற நீக்குவோன், மாசற்ற சற்குரு

பரிசவேதி தொட்டதைத் தங்கமாக்குவது போல், குரு தான் அருளால் தொட்ட சீவனைச் சிவமயமாக்குவான்.

பரிசன வேதி பரிசித்த தெல்லாம்
வரிசை தரும்பொன் வகையாகு மாபோற்
குருபரி சித்த குவலயம் எல்லாம்
திரிமலம் தீர்ந்து சிவகதி யாமே

சற்குரு பிற சார்பின்றி, தற்போதமின்றித் தானே தானாகச் சிவைக்கியத்தில் விளங்குவான். உயிர் வரும் வழி, போம் வழி, மாயையால் அது தனுகரண புவன போகங்களைத் துய்க்கும்வழி, மீண்டும் கருவிற் புகும்வழி—ஆகிய வழியிற் புகுவோர் அருள் வழிகாணார். வினைப் பிறவிக்கு மீளாப் பெரும் வழியிற் செல்பவரே பெரியார்; அப்பெருவழி குருவழியே சென்று கூடலாம். குரு என்பவன் சாமானியனல்லன். கண்டபேரெல்லாம் குரு ஆக முடியாது. வேதாகமங்கூறும் பரமசிவானந்தனாகிச், சிவபோகம் துய்த்து, வேறெந்தச் சிந்தையுமின்றி, பாச மற்றுப் பரமசுத்தனானவனே குரு. அவனிடமே அன்பெல்லாம் வைக்க வேண்டும்.

குருவென் பவனே வேதாகமங் கூறும்
பரவின்ப னாகிச் சிவயோகம் பாலித்து,
ஒருசிந்தை யின்றி உயர் பாசம் நீக்கி,
வருநல் குரவன்பால் வைக்கலும் ஆமே

சத்து அசத்து சதசத்து சித்து அசித்து சுத்தம் அசுத்தம் இவற்றைக் காட்டிச் சுக வாசகம் தருபவனே குரு. ஜீவன் முத்தனான குருவின் செயலென்ன?

ஈனப் பிறவியில் இட்டது மீட்டிட்டுத்
தானத்துள் இட்டுத் தனையூட்டித் தாழ்த்தலும்,
ஞானத்தின் மீட்டலும் நாட்டலும் வீடுற்று
மோனத்துள் வைத்தலும் முத்தன்றன் செய்கையே!

ஈனமான மனோமயப் பிறவியில் இடப்பட்ட சீவனைமீட்டல், அருள்ஊட்டல், மனவழி செல்லாமல் அதற்குரிய தானமான இதய மன்றில் உய்த்தல், தன்சக்தியை ஊட்டல், ஆணவத்தைத் தாழ்த்தல், ஞானவழிக்கு மீட்டல், தியான சமாதியில் நாட்டல், கட்டற்று முச்சுடர் மண்டலமான துரிய வீடுற்றுப் பரமோனத்தில் என்றும் நிலைக்க வைத்தல், இவையே சீவன்முக்தன் செயல்களாம். சீவனுள் ஏழு ஆதாரங்களான ஏழுமண்டலங்கள் மாணிக்க மாலை மலர்கள்போல் விளங்குகின்றன. அவற்றின் உச்சியில் ஆணிப்பொன் மண்டபம் உள்ளது. அங்கே மகாகுண்டலியமுதம் விளைகிறது. அதைப் பேணி உண்டாரே பிறப்பற்று அமர வாழ்க்கை வாழுவார். சும்மாஊர்ச் சோற்றைத் தின்று தூங்குவோர் உணரா மாக்கள்.

மாணிக்க மாலை மலர்ந்தெழு மண்டலம்
ஆணிப்பொன் நின்றங்க முதம் விளைந்தது
பேணிக் கொண்டுண்டார் பிறப்பற்றிருந் தார்கள்
ஊணுக் கிரந்தார் உணராத மாக்களே

ஆதாரசக்தி மேலேறும் வழிகாட்டி மாசறுத்துத் தேசளிப்பவனே குரு. அவன் திருவடிகளே மந்திரம். மருந்து, தந்திரம், தானம், சுந்தரம் தூய்நெறி எல்லாம் ஆகும். அதனாலேதான் இருவினை மாறும். பிறவிப்பிணி தீரும். அத்தகைய குருவிற்கு வேதாந்தமே பூணூல். ஞானமே சிகை, மும்மலம் நீற்றிய உபசாந்தமே அவனது திருநீறு ஆம்.

திருவடி, அடியார், அடிமை என்ற வார்த்தைகள் சித்தாந்தத்தில் அடிக்கடி வரும். இவற்றின் பொருள் மிக்க ஆழமானது. அடி என்றால் வெறும் காலடியன்று. காலடியில் முட்டிக் கொண்டாலும் ஞானம் வராது. அடி என்றால் சீவனுக்கு அடிப்படையான ஆதாரம். மூலாதாரம், மூலசக்தி, குண்டலினி; முடி என்றால் சகஸ்ராரம், துரிய மண்டலம்; அடிமுடி காணல் என்பது குண்டலி சக்தியை மகாகுண்டலியாகக் காணல்; சக்தி சிவனுடன் ஐக்கியமாதல். அடி தந்து முடிகாட்டலாவது, ஆதார குண்டலி சக்தி தந்து, அதை மேலேற்றி உச்சியில் சிவ தத்துவத்துடன் சக்தி ஐக்கியமாகக் காட்டல். அடி பணிதல் என்பது, சும்மா காலில் விழுவதன்று; சகஸ்ரார சித்திபெற்ற பரமுத்தரின் உடலெல்லாம் பொங்கிப் பொசியும் அருட்சக்தி விரல்கள் வழியே அருட்சக்தி பொழியும். அச்சக்தியை, அடிச்சக்தியை பாதந் தொட்டுப் பெறுதலே திருவடி வணக்கமாகும். அடியார் என்பவர் அடிச்சக்தியான ஆதார சக்தி பெற்றவர்; அடிமை என்றால் ஆதாரசக்தி பெற்ற பேறுடைய அன்பர். அடிமை குலாமியல்லன். அடியார் கொத்தடிமைக் கூட்டமில்லை. இதை நன்றாக அறிக. பாதுகா பஞ்சமம் (ஐயடி) என்கிற தாந்திர நூலில் இந்தரகசியம் உள்ளது. அதில் பாகம் என்பது குண்டலிசக்தி மகா குண்டலியாக மேலேறும்போது தங்கும் ஐந்து இடங்களைக் குறிக்கிறது. மூலாதாரம், நாபி, நெஞ்சு, புருவநடு, சகஸ்ராரம் ஆகிய ஐந்து இடங்களில் சக்தி தீவிரமாக ஊன்றி மேலோங்கும். திருவடி தீட்சை என்றால் காலால் தீண்டுதல் மட்டுமன்று; இது வெறும் சம்பிரதாயம்; சாதனத்தால் சக்தியை ஐந்து நிலையங்களிலும் நிறைந்து மேலோங்கச் செய்வது தான் திருவடி தீட்சையாகும். திரு-சக்தி, அடி-மூலாதாரம். அதாவது மூலாதார சக்தியை விழிக்கச் செய்வதே திருவடி தீண்டல். திருவடி தரல், திருவடி வணக்கமாகும். மூலாதார சக்தி விழித்தெழப் பெற்றவனே திருஅடியான்-அடிமை ஆவான். அடியார் என்றால் அடிமைக் கூட்டமன்று, அடிக்கனலான சக்தி பெற்ற அருளாளரே அடியார்.

## துறவும் தவமும்

ஞானசித்தனே குரு, துறவி, தவசியாவான். ஆங்காரம் நீங்கிப் பாசம் ஒழிந்து தன்னிலை நின்று, தியானம் நிலைத்து அறிபொருளான பதியைப் பசுவான ஆன்மா பற்றி அதுவாயிருத்தலே ஞானம். தான், அவன் என்ற இரண்டு தத்துவங்களையும் உள்ளே உணர்ந்து தன்னை அவனுக்கு மலராகச் சாத்தி அர்ப்பணிக்க வேண்டும். ஆனால் சிற்றறிவனான் நான் அவனாகி விட முடியாது. நான் என்றோ அன்று அவன் என்பதே நலமாகும். அவன் என்னுடன் இணைபிரியாதிருக்கிறான்; என் அன்பு உறுதியானால், என்றும் அருளுவான்.

**(தொடரும்)**




திருச்சி மலைக்கோட்டை அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயிலில் நிகழ்ந்த திருக்குடமுழுக்கு விழாவின் போது, நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களும், மற்றும் பலபெருமக்களும் கலந்து கொள்ளுதல்.



திருவரங்கம் பெரியாசிரமம் ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள் அவர்கள், சென்னைக்கு எழுந்தருளிய போது, அளிக்கப்பெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில், சுவாமிகள் அவர்களின் 77-வது பிறந்த நாள் விழாவில், நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் கலந்து கொள்ளுதல்.

Madras 600034.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.